வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 14

இரட்டை வேடங்களில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம்
3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob. : 7010997639.

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 14

இரட்டை வேடங்களில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.

***முனைவர் செ. இராஜேஸ்வரி* M. A., M. Phil., Ph. D.,**

சந்திரோதயம் பதிப்பகம்
3/472 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob.:7010997639.

நூல் விவரம்

நூல் வரிசை	:	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 14
நூலின் பெயர்	:	இரட்டை வேடங்களில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
அட்டை வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை, தினமணி நகர், மதுரை – 625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	முதல் (செப்டம்பர் 2019)
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	141
விலை	:	Rs.200/-

- - - - -

Book	:	*Vetrithirumagan MGR – 14*
Title	:	*Irattai Vedangalil jolikkum MGR*
Author	:	*Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,*
Cover Design	:	*C. Meenatchi*
Publisher	:	*Chandrothayam Pathippagam* *3/472 First floor, Kambar 2nd Street* *Kambar Salai, Dinamani Nagar* *Madurai – 625 018* *Phone : 7010997639*
Month of Publish	:	*September 2019*
Pages	:	*141*
Price	:	*Rs.200/-*

அன்புக் காணிக்கை

இரட்டை வேடப் படங்களில் எம்.ஜி.ஆருக்கு ‘டூப்’ போட்டு நடித்த இராமகிருஷ்ணன், சங்கர் போன்றவர்களுக்கு இந் நூல் அன்புக் காணிக்கை .



நன்றி!

போஸ்டர்கள் கொடுத்து உதவிய
மதுரை ரசிகர் குமார் அவர்களுக்கு
நன்றி!





வாழ்த்துகிறோம்!



நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். *1988* முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். *Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Eco Vision and Mission, Neuro Ophthalmology Articles* போன்ற பல துறை சார்ந்த பனுவல்களை தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

*1993*இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் *[Associate editor]* பணயாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியை தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் இன்று மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. அங்கு வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து

இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்க பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றிய போது அங்கு வந்த வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சிபெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க *Easy English* என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கும் வெளி நாட்டவருக்கும் ஆங்கிலமும் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் [*Centre for Language Studies*] என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர். பற்றிய தகவல்களை நிறைய தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ்,

மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிய அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் ரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து போய் எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை ஒருவரும் ஆராய்ச்சி செய்ய தொடங்கினர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர். பற்றி ***ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100*** *என்ற தலைப்பில் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும்* ***www.tamilauthors.com*** *என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகளை வெளியிட்டு வருகிறார். எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஒரு நூல் எழுதும் முயற்சியில் தகவல்களை திரட்டி வருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம்.*

1. ***வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும்,***

2. ***எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்,***

3. ***சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்),***

4. ***வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட,***

5. ***மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.,***

6. ***எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி,***

7. ***எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி,***

8. ***ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.,***

9. ***வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I,***

10. ***நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I],***

11. ***பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II],***

12. ***இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.,***

13. ***முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்***

14. ***இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.*** *என்ற இந்நூல் வெளிவந்துள்ளது.*

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் 'பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள் மற்றும் உன்னொடு உரையாடுதல்' திட்டிவாசல் பெண்ணொருத்தி என்ற கவிதை நூல்களை இவர் ஆங்கிலத்தில் ***"Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You" Language of Love, A Lady at the little gate,*** *என்று மொழி பெயர்த்துள்ளார். இந்நூல்களை சென்னை எமரால்டு*

பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இவர் எழுதிய சிறுகதைகள் **‘அமராவதியின் காதல்’** என்ற பெயரில் அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் எழுதி வரும் ஆய்வுக் கட்டுரைகள் நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளிவருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய “**என்னோட ராசி நல்ல ராசி**” என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் ‘மரங்களே திருக்கோயில்களின் முன்னோடி, காளியும் தேவியும்’ போன்ற ஆன்மீக கட்டுரைகள் வெளிவருகின்றன.



உள்ளடக்கம்



1. இரட்டைவேடங்களில் ஜொலித்த எம்.ஜி.ஆர்.

தமிழ் திரையுலகில் அதிக எண்ணிக்கையில் இரட்டை வேடங்களில் நடித்தவர் எம்.ஜி.ஆர். ஒருவரே. அவர் சுமார் பதினான்கு படங்களில் இரட்டை வேடங்களில் நடித்திருக்கிறார். அவற்றுள் கலையரசி அடிமைப்பெண் ஆகிய படங்களில் சிறிது நேரம் மட்டுமே வரும் ஒரு கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். மற்ற படங்களில் படம் முழுக்க வரும் கதாபாத்திரங்கள் ஏற்று நடித்திருந்தார். நாடோடி மன்னன், மாட்டுக்கார வேலன், எங்க வீட்டுப் பிள்ளை, குடியிருந்த கோயில், பட்டிக்காட்டு பொன்னையா, சிரித்து வாழவேண்டும், உலகம் சுற்றும் வாலிபன், நாளை நமதே, ஊருக்கு உழைப்பவன், இராஜாதேசிங்கு, நீரும் நெருப்பும் ஆகிய படங்களில் இரட்டைவேடங்களில் எம்.ஜி.ஆர். படம் முழுக்க வருவார்.

தமிழ்த் திரையில் அறிவியல் புனைவு படைப்புகள்

எம்.ஜி.ஆர். நடித்த இரட்டை வேடப் படங்களில் கலையரசியும் ஆசை முகமும் அறிவியல் புனைவு [SCIENCE FICTION] படங்களாகும். ஆசைமுகம் படத்தில் மட்டும் ராம்தாஸ் தன் முகத்திற்கு எம்.ஜி.ஆர். மாதிரி பிளாஸ்டிக் சர்ஜரி

எனப்படும் முக மாற்று அறுவை சிகிச்சையின் மூலமாக புதிய உருவம் எடுத்து வந்திருப்பதாக நடித்திருப்பார். கலையரசியில் சந்திரமண்டலத்தில் இளவரசராக ஒரு எம்.ஜி.ஆரும், பூமியிலிருந்து சந்திர மண்டலத்துக்கு செல்பவராக இன்னொரு எம்.ஜி.ஆரும் நடித்திருப்பார்கள். இவை தவிர

இந்தியில் இருந்து தமிழுக்கு வந்தவை

எம்.ஜி.ஆர். நடித்த இரட்டை வேடப் படங்களில் சில இந்தி மொழியில் இருந்து தமிழாக்கம் செய்யப்பட்டவை ஆகும். குடியிருந்த கோவில் படம் ஷம்மி கபூர் நடித்த ‘சைனா டவுன்’ படத்தைப் பார்த்து எடுக்கப்பட்டது. ஊருக்கு உழைப்பவன் படம் ராஜேஷ் கண்ணா நடித்த ஹம் ஷகாதே என்ற படத்தின் கருத்தை கொண்டு எடுக்கப்பட்டது. நாளை நமதே படம் தர்மேந்திரா நடித்த யாதோங்கி பாரத் என்ற படத்தின் தமிழாக்கம் ஆகும். ஜிதேந்திரா நடித்த ஜிகிரி தோஸ்து படத்தை தமிழில் மாட்டுக்கார வேலன் என்று மாற்றி எடுத்தனர். சச்சா ஜூட்டா என்ற படம் உண்மையும் பொய்யும் என்ற பொருளில் இந்தியில் எடுக்கப்பட்டது. அந்தப்படத்தை நினைத்ததை முடிப்பவன் என்ற தலைப்பிட்டு தமிழில் எம்.ஜி.ஆரை வைத்து எடுத்தனர். இவை அனைத்துமே நல்ல வெற்றிப் படங்களாக அமைந்தன.

முதல் வெளியீட்டில் கோடிகளில் வசூல்

எம்.ஜி.ஆர். நடித்த இரட்டை வேடப்படங்களில் பல படங்கள் முதல் வெளியீட்டிலேயே கோடிகளில் வசூல் செய்தன. 1958-ல் வெளிவந்த நாடோடி மன்னன்,



1965 இல் வெளிவந்த எங்கவீட்டுப்பிள்ளை, 1970 இல் வெளிவந்த மாட்டுக்காரவேலன், 1973 இல் வெளிவந்த உலகம் சுற்றும் வாலிபன் ஆகிய படங்கள் முதல் வெளியீட்டில் கோடிகளில் வசூல் செய்து வெள்ளிவிழா கொண்டாடின.

நாடோடியாக வந்து மன்னன் ஆனவர்

எம்.ஜி.ஆர். நடித்த முதல் இரட்டைவேடம் அவரே இயக்கி தயாரித்த நாடோடி மன்னன் ஆகும் 1958 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் நாள் வெளியானது. நிஜ வாழ்விலும் இவர் பிழைப்பு தேடி

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு [தமிழகத்துக்கு] நாடோடியாக வந்து பின் இத்தமிழ்நாட்டை மன்னனாகப் பத்து ஆண்டுகள் ஆண்ட சிறப்பினைப் பெற்றார். நாடோடி மன்னன் படம் கருப்பு வெள்ளையிலும் பிறபகுதி வண்ணத்திலும் எடுக்கப்பட்டது. இப்படத்தில் நாடோடி வீராங்கனாகவும் மன்னன் மார்த்தாண்டன் ஆகவும் எம்.ஜி.ஆர். இரு வேடங்களில் நடித்து இருந்தார். வீராங்கனுக்கு ஜோடியாக முதல் பாதியில் பானுமதியும் மறு பாதியில் வண்ணப்படத்தில் சரோஜாதேவியும் நடித்தனர். மன்னன் மார்த்தாண்டன் ஜோடியாக எம் என் ராஜம் நடித்து இருந்தார். இப்படத்தை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வெளியிட்டது. இசை எஸ் எம் சுப்பையா நாயுடுவும், வசனத்தை கண்ணதாசனும் பாடல்களைப் பலரும் எழுதி இருந்தனர்.

தமிழ்த் திரையின் எரால் ஃபிலையின் எம்.ஜி.ஆர்.

நாடோடிமன்னன் படம் *If I were a king, Prisoner of Zenda* என்ற படங்களிலிருந்து சில பகுதிகள் மட்டுமே எடுத்து தமிழாக்கம் செய்யப்பட்டது. இப்படத்தை ஏற்கெனவே மாடர்ன் தியேட்டர்சார் ராஜயோகம் என்ற பெயரில் தமிழில் எடுத்தனர். இத்துடன் மார்லன் பிராண்டோ நடித்த வை பாஜப்படா என்ற படத்தின் கதையும் சேர்த்து நாடோடி மன்னனில் பயன்படுத்தப்பட்டது. *Prisoner of Zenda*வில் எரால் ஃபிலைன் என்பவர் நடித்திருந்தார். இவரை ‘எம்.ஜி.ஆர். தன் மானசிகக் குருவாகக் கருதினார். ஏ வி எம் சரவணன் எம்.ஜி.ஆர். படங்களில் கத்தி சண்டை போடும்போது அவர் ஹாலிவுட் நடிகர் எறால் ஃபிலையினை எனக்கு



நினைவுபடுத்துவார் என்றார். 'தமிழகத்தின் எரால் ஃபிளைன்' என்று அன்றைய தமிழ் ரசிகர்கள் எம்.ஜி.ஆரை போற்றினர்.

நாடோடி மன்னன் வெளியிடப்பட்ட அனைத்து ஊர்களிலும் அதிக நாட்கள் ஓடியது. தமிழகத்தின் முக்கிய நகரங்களில் வெள்ளிவிழா

படமாக வெற்றி விழா கொண்டாடியது. இப்படத்தில் இரண்டு எம்.ஜி.ஆருக்கும் வேறுபாடு காட்டுவதற்காக ஆரம்பத்தில் வீராங்கனுக்கு முகத்தில் தாடி இருக்கும். பின்னர் அவர் மன்னனாக வேடமிட்டதும் தாடி இருக்காது.

வெற்றி விழாவின் 'மன்னன் எம்.ஜி.ஆர்.'

சென்னையில் வெற்றி விழா விஜயா தோட்டத்தில் நடந்தது. அப்போது எம்.ஜி.ஆருக்கு ஐந்தரை அடி உயர் வெள்ளிக்கோப்பை நிறைய வெள்ளை சீனி நிரப்பி வழங்கப்பட்டது. இக்கோப்பை இப்போது எம்.ஜி.ஆர். நினைவில்லத்தில் இடம் பெற்றுள்ளது. இவ்விழாவில் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி இராஜமன்னார் எம்.ஜி.ஆரை 'நடிக மன்னன்' என்று பாராட்டினார்.

தியாகராசர் கல்லூரியின் கவின் கலை மன்றத்தில் நடந்த விழாவில் தமிழகத்தின் நிதி அமைச்சர் சி சுப்பிரமணியம் பாராட்டிப் பேசும் போது 'நம் பக்கத்தில் மன்னன் இருக்கிறார். அவர் மன்னராட்சியை விலக்கி மக்களாட்சியை நிறுவியவர். அவருடைய கலைச் சித்திரம் நாடோடி மன்னன் மகத்தானது' என்று மனம் திறந்து பாராட்டினார்.

மதுரையில் தமுக்கம் மைதானத்தில் மதுரை முத்து எடுத்த விழாவில் மூன்று இலட்சம் இரசிகர்கள் திரண்டனர். நான்கு குதிரை பூட்டிய 'சாரட்' வண்டியில் எம்.ஜி.ஆரை அமர்த்தி மங்கம்மா சத்திரத்தில் இருந்து ஊர்வலமாக தமுக்கம் மைதானத்துக்கு அழைத்து வந்தனர். வழி நெடுக



மக்கள் கூட்டம். விழாவில் பல முன்னணி தலைவர்கள் கலந்துகொண்டனர். மேடையில் 101 பவுனில் எம்.ஜி.ஆருக்குத் தங்க வாள் வழங்கப்பட்டது. அவ்வாளை பின்னர் கர்நாடக மாநிலத்தில் கொல்லூரில் இருக்கும் மூகாம்பிகை அமம்னுக்கு எம்.ஜி.ஆர். காணிக்கையாக செலுத்திவிட்டார். அதன் பிறகு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் இத் தங்கவாள் அம்மன் அருகில் வைக்கப்படுகிறது.

இந்தியாவில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் நாடோடி மன்னன் படத்தின் வெற்றி பெரியளவில் விழாவாகக் கொண்டாடப்பட்டது. இலண்டனில் நடந்த வெற்றி விழாவுக்கு எம்.ஜி.ஆரால் செல்ல இயவில்லை. அங்கு விழாவில் கலந்து கொண்ட நாவலர் நெடுஞ்செழியனிடம் இலண்டன் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் இரண்டு போர் வீரர்கள் நிற்கும் உலோகச் சிலையை எம்.ஜி.ஆருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தனுப்பினர். இரட்டை வேடம் ஏற்றதால் இரண்டு வீரர்கள் நிற்கும் சிலை எம்.ஜி.ஆருக்கு வழங்கப்பட்டது.



இராஜா தேசிங்கு

எம்.ஜி.ஆர். இரட்டை வேடங்களில் நடித்த இரண்டாவது படம் இராஜா தேசிங்கு 1960ஆம் ஆண்டு செப்டம்பர் இரண்டாம் நாள் வெளியாயிற்று. இப்படத்தில் இராஜா தேசிங்கு என்ற இந்து மன்னனாகவும், தாவுத்கான் என்ற அவரது முஸ்லிம் சகோதரனாகவும் எம்.ஜி.ஆர். நடித்திருந்தார். இப்படத்தில் தாவுத்கானுக்கு ஜோடி கிடையாது. இவரது தாயாராக லெட்சுமி பிரபா நடித்திருந்தார். இராஜா தேசிங்கு எம்.ஜி.ஆருக்கு மட்டும் பி பானுமதி ஜோடியாக வருவார்.

லேனா செட்டியாரின் கிருஷ்ணா பிக்சர்ஸ் தயாரித்த இப்படத்திற்கு அவரது ஆஸ்தான இசையமைப்பாளர் ஜி ராமநாதன் இசை அமைத்திருந்தார். கண்ணதாசன் வசனம் எழுத பி ஆர் ரகுநாத் இயக்கியிருந்தார். இப்படம் பெரிய அளவில்

இலாபம் பெற்றுத் தரவில்லை. அதற்கு முக்கிய காரணம் ராஜா தேசிங்கும் அவரது சகோதரனான தாவுத்கானும் ஒருவரோடு ஒருவர் கொலை வெறியுடன் கிளைமேக்ஸ் காட்சியில் மோதியதும் படத்தின் முடிவில் இருவரும் வாளுக்கு இரையாகி எம்.ஜி.ஆர். செத்துப் போவதைப் பார்க்க மக்கள் விரும்புவதில்லை. இப்படத்தில் இரண்டு எம்.ஜி.ஆர்.களும் இறந்து போவதை மக்கள் ரசிக்கவில்லை.

இப்படத்தில் இராஜா தேசிங்கின் தந்தை செஞ்சி மன்னன் முதலில் ஒரு முஸ்லிம் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்வார். அவருக்கு தாவுத்கான் என்ற ஆண் குழந்தை பிறந்திருக்கும். பின்னர் இந்து முறைப்படி ஓர் இந்து இளவரசியை மணம் செய்து கொள்வார். அந்த



இளவரசிக்கு பிறந்தவன் இராஜா தேசிங்கு. இவனுடைய இயற்பெயர் தேஜஸ் சிங் என்பதாகும். இவனுக்கு தனக்கு ஒரு சகோதரன் இருப்பதே தெரியாது.

படம் வெளியான நாள் – 2.9.1960

சென்னை – கிருஷ்னா தியேட்டர் - 77 நாட்கள்; வெலிங்டன் - 77 நாட்கள்; உமா – 77 நாட்கள்; உமா – 77 நாட்கள்; லிபர்டி - நாட்கள்;

மதுரை - சென்ரல் – 63 நாட்கள்.

வரி நீக்கி வசூல் = ரூ.47,870.83/-

கலையரசி

எம்.ஜி.ஆரும் பானுமதி நடித்த கலையரசி என்ற படத்தில் எம்.ஜி.ஆர். இரட்டை வேடம் ஏற்றிருந்தார். வேற்றுக்கிரகத்தில் (ஏலியன்ஸ்) இருந்து வந்த நம்பியார் பானுமதியை கடத்திச் சென்றதால் அவரை மீட்டு கொண்டு வருவதற்காக பூலோகத்தில் இருந்து எம்.ஜி.ஆர். அங்குச் செல்வார். அப்போது அங்கு எம்.ஜி.ஆரைப் போன்ற தோற்றத்தில் வேற்றுக்கிரக கோமாளி இருப்பார். இக்கோமாளி அங்குள்ள இளவரசி ராஜ ஸ்ரீயை ஒருதலைப்பட்சமாகக் காதலிப்பார். ஆனால் எரி நட்சத்திரம் தாக்கி இந்தக் கோமாளி இறந்துவிடுவார்.

எம்.ஜி.ஆர். படங்கள் பெரிய வெற்றியைப் பெறாவிட்டாலும் கூட அவை தயாரிப்பாளருக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவதில்லை. கலையரசி படமும் பெரிய அளவில் இலாபம் ஈட்டவில்லை. ஆனால் இப் படத்தின் தயாரிப்பாளருக்கு

இப்படத்தால் நஷ்டம் ஏற்படவில்லை என்பதற்கு நல்லதொரு சான்று உள்ளது. கலையரசி படத்தை முடிக்க முடியாமல் பணச்சிக்கலில் தவித்தபோது எம்.ஜி.ஆர். அவர்களுக்கு தன் சொந்தப் பணத்தை கொடுத்துத் தயாரித்து முடிக்க உதவினார். இப்படத்தைத் தயாரித்த ஷரோடி ஃபிலிம்ஸ் திருவனந்தபுரத்தில் அவர்களுடைய கிராமமான ஷரோடியில் சொந்தமாக ஒரு வீடு கட்டி அதற்கு ‘எம்.ஜி.ஆர். நிலையம்’ என்று பெயரிட்டனர்.

1963 இல் வேற்றுக்கிரகத்திற்கு மனிதன் சென்றதை நம்பாத மனிதர்கள் *1967* சந்திர மண்டலத்திற்கு ஆம்ஸ்ட்ராங் சந்திரனில் கால் வைத்த போது வியந்து போயினர்.



எங்க வீட்டுப் பிள்ளை

எம்.ஜி.ஆர். நடித்த இரட்டை வேடங்களில் மிகுந்த லாபத்தை கொடுத்த படம் அவருடைய சொந்த தயாரிப்புகளான உலகம் சுற்றும் வாலிபன் மற்றும் நாடோடி மன்னன் படங்களை தவிர்த்து ஆராய்ந்தால் அது எங்க வீட்டுப் பிள்ளையை ஆகும். எங்க வீட்டு பிள்ளை படத்தில் எம்.ஜி.ஆர். ராமு, இளங்கோ என்ற பெயரில் சகோதரர்களாக நடித்திருந்தார். ராமு பயந்த சுபாவம் உடையவர், இளங்கோ துணிச்சலான துடிதுடிப்பான இளைஞர் என இரண்டு கதாபாத்திரங்களில் நடித்திருந்தார். இப்படம் வெள்ளி விழா கொண்டாடிய படமாகும். இப்படத்தில் ராமுவுக்கு சரோஜாதேவியும்



இளங்கோவுக்கு ரத்னாவும் ஜோடியாக நடித்திருந்தனர்.

எங்க வீட்டுப் பிள்ளை படத்தை விஜயா வாகினி நிறுவனம் தயாரித்தது. சக்தி பி. கே. கிருஷ்ணசாமி வசனம் எழுத சாணக்யா இயக்கியிருந்தார். விஸ்வநாதன்-ராமமூர்த்தி இசையமைத்திருந்தார். இப்படம் 1965ஆம் ஆண்டு சித்திரை பிறப்பன்று வெளியானது. இதே வருடத்தில் 7 மாதங்கள் கழித்து ஆயிரத்தில் ஒருவன் என்ற படமும் வெளியாயிற்று. இந்த வருடத்தில் இரண்டு வண்ணப்படங்கள் வெளியாகி எம்.ஜி.ஆருக்கு பெரிய வெற்றியைத் தேடித்தந்தன.

விநியோக இலாபத்தில் பங்கு

எங்க வீட்டுப் பிள்ளை படம் விஜயா வாகினி தயாரித்த முதல் வண்ணப்படம் ஆகும். எனவே அவர்கள் இலாபம் பெற வேண்டும் என்று எம்.ஜி.ஆரை ஒப்பந்தம் செய்தனர். சிவாஜி பிலிம்ஸ் தவிர மற்ற தயாரிப்பு நிறுவனத்தார் அனைவரும் தங்களுடைய முதல் வண்ணப் படத்தில் எம்.ஜி.ஆரை ஒப்பந்தம் செய்தனர். எங்க வீட்டுப் பிள்ளை படம் வினியோகிக்கும் உரிமையை சென்னை, செங்கல்பட்டு பகுதிகளுக்கு எம்.ஜி.ஆர். பெற்றிருந்தார். அவர் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைத்ததால் அவர் விஜயா வாகினி தயாரிப்பாளர் நாகிரெட்டி அவர்களுக்குத் தனக்குக் கிடைத்த இலாபத்தில் இருந்து ஒரு பங்கை காசோலையில் குறிப்பிட்டு அவருக்கு அனுப்பினார்.

நாகிரெட்டியார் இது வினியோகஸ்தர் உரிமையால் கிடைத்த இலாபம், என்பதால்



இத்தொகை உங்களுக்கே உரியது என்றார். எம்.ஜி.ஆர். அதை திரும்ப ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டு நாகி ரெட்டியிடம் ‘உங்களுக்குப் பெற்றுக்கொள்ள மனமில்லை என்றால் இதை உங்களுடைய விஜயா வாகினி ஸ்டூடியோ பணியாளர்களுக்கு பிரித்துக் கொடுத்து விடுங்கள்’ என்றுதெராஈவ்த்தார். அதிக லாபம் வரும் போது அதனை தனக்காக வைத்துக் கொள்ளாமல் படத் தயாரிப்பாளருக்கு அல்லது ஸ்டுடியோ ஊழியர்களுக்கு பிரித்துக் கொடுக்கும் பழக்கம் எம்.ஜி.ஆருக்கு ஆரம்ப முதல் இருந்து வந்தது.

இப்படம் ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்று தந்தது. இளங்கோ வேடத்தில் நடித்த எம்.ஜி.ஆர். பாடிய “நான் ஆணையிட்டால்” பாடல் காட்சி அக்கால கட்டத்தில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிவரத்தின்படி திரையரங்கில் மிகுந்த வரவேற்புப் பெற்ற பாடல் காட்சியாகும். இது தேசிய அளவிலான புள்ளி விவரப் பதிவாகும்.



இந்திய சினிமாப்பாடல்களில்

மக்களை அதிகம் கவர்ந்த பாடல்...?

'இந்திய சினிமாவில் பாடல் காட்சிகளும், பாடல்களும் வகிக்கும் பங்கு' என்பதுபற்றி ஆய்வு செய்ய மேல்நாட்டிலிருந்து ஒரு குழு சில மாதங்களுக்கு முன் இந்தியா வந்திருக்கிறது. அவர்களின் ஆய்வு குறிப்பில் காணப்படும் சில தகவல்கள்....

'பாடலோடுகூடிய காட்சி திரையில் தோன்றும்பொழுது ரசிகர்கள் எந்த லாஜிக்கையும் பற்றி கவலைப் படாமல் காட்சியுடன் ஒன்றி ரசிப்பதைப் பார்க்கும் போது ஆச்சரியமாக இருக்கிறது.'

சில படங்களுக்கு பாடல்காட்சிகளே வெற்றியைத் தேடித்தரும் காரணிகளாக அமைவது இந்தியாவில்தான்.

அதோடு, அந்தக் குழுவினர் படத்தில் வரும் எந்த பாடல் காட்சி பார்ப்பவரிடையே வெகுவான வரவேற்பைப் பெறுகிறது என்றும் ஆய்வு செய்திருக்கின்றனர். அதில் தமிழ்படத்தில் வரும் ஒரு பாடல் காட்சிதான் அரங்கத்தில் வெகுவான ஆரவாரத்தோடுகூடிய வரவேற்பைப் பெற்றிருப்பதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

புரட்சித் தலைவர் நடித்த 'எங்கள் வீட்டுபிள்ளை' யில் இடம் பெற்றுள்ள 'நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்...' என்ற பாடல்காட்சி தான் வெகுவான வரவேற்பைப் பெற்றுள்ளதாம். வேறு எந்த இந்தியப் படத்தின் பாடலும் அப்படி ஒரு ஆரவாரமிக்க வரவேற்பைப் பார்வையாளர்களிடம் பெறவில்லையாம்!

"இந்திய சினிமாவில் பாடல் காட்சிகளும், பாடல்களும் வகிக்கும் பங்கு" என்பது பற்றி ஆய்வு செய்ய மேல் நாட்டிலிருந்து ஒரு குழு சில மாதங்களுக்கு முன் இந்தயா வந்திருக்கிறது. அவர்களின் ஆய்வு குறிப்பில் காணப்படும் சில தகவல்கள். . .

"பாடலோடு கூடிய காட்சி திரையில் தோன்றும்பொழுது ரசிகர்கள் எந்த லாஜிக்கையும் பற்றி கவலைப்படாமல் காட்சியுடன் ஒன்றி ரசிப்பதைப் பார்க்கும் போது ஆச்சரியமாக இருக்கிறது"

சில படங்களுக்கு பாடல் காட்சிகளே வெற்றியைத் தேடித்தரும் காரணிகளாக அமைவது இந்தியாவில் தான்.

அதோடு, அந்தக் குழுவினர் படத்தில் வரும் எந்த பாடல் காட்சி பார்ப்பவரிடையே வெகுவான வரவேற்பைப் பெறுகிறது என்றும் ஆய்வு செய்திருக்கின்றனர். அதில் தமிழ்படத்தில் வரும் ஒரு பாடல் காட்சிதான் அரங்களத்தில் வெகுவான ஆரவாரத்தோடு கூடிய வரவேற்பைப் பெற்றிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

புரட்சித் தலைவர் நடித்த 'எங்கள் வீட்டுப்பிள்ளை'யில் இடம் பெற்றுள்ள "நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால். . ." என்ற பாடல்காட்சி தான் வெகுவான வரவேற்பைப் பெற்றுள்ளதாம். வேறு எந்த இந்தியப் படத்தின் பாடலும் அப்படி ஒரு ஆரவாரமிக்க வரவேற்பைப் பார்வையாளர்களிடம் பெறவில்லை".

காங்கிரஸின் ஆட்சியை ஒழிக்க திமுக பிரச்சாரப் பாடலாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பாடலின் படி மக்களின் துன்பத்தைத் துடைக்கும் 'அனாத ரட்சகராக' எம்.ஜி.ஆர். விளங்குவார் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஆழமாகப் பதித்தது. எனவே இது மாபெரும் வெற்றிப் படமாக அமைந்தது.

எங்க வீட்டு பிள்ளை படப்பிடிப்புக்காக எட்டாவது ஃபுளோரில் போட்டிருந்த செட்டில் திடீரென தீ பிடித்தது. இதை அறிந்த எம்.ஜி.ஆர். உடனே அங்கு விரைந்து சென்று ஆவன செய்தார். பின்னர் படத்தின் தயாரிப்பாளரும் ஸ்டுடியோவின் உரிமையாளருமான நாகி ரெட்டியாரைச் சந்தித்தது ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை; எல்லாம் விரைவில் சரியாகிவிடும் என்று ஆறுதலும் தெரிவித்தார்.

சென்னை காஜினோ – 200 நாட்களுக்கு மெல், ஜுபிடர் – 200 நாட்களுக்கு மேல் ஓடிய ஒரே படம்.

ஆசை முகம்

1965ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் பத்தாம் நாள் ஆசை முகம் என்ற படம் வெளியாயிற்று. இதுவும் ஒரு அறிவியல் புனைவுப் படமாகும். இப்படம் அதிக லாபத்தை தரவில்லை என்றாலும் கூட இப்படத்தின் சிறந்த பாடல்களாலும் புதிய கதை அமைப்பாலும் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. மறு வெளியீடுகளில் மிகுந்த லாபத்தை அளித்தது. இப்படத்தில் எம்.ஜி.ஆர். மனோகர், வஜ்ரவேலு என்ற பெயரில் இரண்டு வேடங்களில் நடித்திருந்தார். இவற்றில்



வஜ்ரவேலு என்பது ராம்தாஸ் நடித்த கதாபாத்திரத்தின் பெயர் ஆகும்.

ராம்தாஸ் எம்.ஜி.ஆரின் சொத்துக்காக ஆசைப்பட்டு தன் முகத்தை எம்.ஜி.ஆர். முகம் போல பிளாஸ்டிக் சர்ஜரி செய்து எம்.ஜி.ஆரின் பெற்றோரை ஏமாற்றி அவர் வீட்டில் வந்து தங்கி இருப்பார். வில்லனான இவர் சரோஜாதேவியைக் காதலிப்பதை ரசிகர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. மேலும் முகமாற்று அறுவை சிகிச்சை பற்றி அக்கால கட்டத்தில் போதிய விவரங்கள் மக்களுக்குத் தெரியாததால் இப்படம் பெரிய இலாபத்தைப் பெறவில்லை. இப்படத்தின் வசனத்தை கே மூர்த்தி அவர்களும் இசையமைப்பை எஸ்.எம். சுப்பையா நாயுடு அவர்களும் ஏற்றிருந்தனர். பி. புல்லையா இயக்கியிருந்தார்.

அடிமைப்பெண்

எம்.ஜி.ஆரின் சொந்தத் தயாரிப்பான அடிமைப்பெண் படம் 1969 ஆம் ஆண்டு மே மாதம்



— வசூல் சாதனை காணீர் —

எங்க வீட்டு பிள்ளை		
	வரி உள்பட மொத்த வசூல் ரூபாய்	பை
வேலூர் தாஜ் 101 நாட்கள்	1,20,629	60
கடலூர் நியூ சினிமா 107 நாட்கள்	94,726	59
பாண்டி அஜந்தா 107 நாட்கள்	92,977	90
பல்லாவரம் ஜனதா 107 நாட்கள்	1,27,783	57
காஞ்சிபுரம் ராஜா 72 நாட்கள்	87,537	50
சிதம்பரம் நடராஜா 41 நாட்கள்	45,345	40
விழுப்புரம் சீதாராம் 83 நாட்கள்	67,409	00

அடிமைப்பெண்		
	வரி உள்பட மொத்த வசூல் ரூபாய்	பை
வேலூர் தாஜ் 50 நாட்கள்	98,301	37
வேலூர் கிரௌன் 28 நாட்கள்	50,076	47
	1,48,377	84
கடலூர் நியூ சினிமா 50 நாட்கள்	80,180	25
கடலூர் கமர் 11 நாட்கள்	16,405	85
	96,586	10
பாண்டி நவீனா 50 நாட்கள்	60,273	15
பாண்டி அஜந்தா 28 நாட்கள்	47,313	00
[illegible]	1,07,586	15
தாம்பரம் முருகன் 50 நாட்கள்	98,666	60
காஞ்சிபுரம் லக்ஷ்மி 50 நாட்கள்	1,06,585	70
சிதம்பரம் நடராஜா 50 நாட்கள்	66,127	30
விழுப்புரம் சீதாராம 50 நாட்கள்	99,317	00

..டு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்கள் (சித்தூர், பாண்டிச்சேரி உள்பட)

முதல் நாள் உழைப்பாளர் தினத்தன்று வெளிவந்தது. இப்படம் திரையிட்ட திரையரங்குகள் அனைத்திலும் வெற்றிவாகை சூடியது. ஃபிலிம் ஃபேர் விருது பெற்றது. விருது வழங்கும் விழாவுக்கு வந்திருந்த இந்தித் திரையுலகத்தின் சூப்பர் ஸ்டார் ராஜ் கபூர் அடிமைப்பெண் போன்ற படத்தை எடுப்பதைக் குறித்து கற்பனை செய்து பார்க்கக் கூட என்னால் இயலவில்லை என்று எம்.ஜி.ஆரின் எண்ணத்தையும் செயல்பாட்டையும் பாராட்டினார். இப்படத்தில் ஜெயலலிதா இரட்டை வேடம் ஏற்று வித்தியாசமான தோற்றத்தோடு குணாதிசயத்தோடும் நடித்திருந்தார்.

எம்.ஜி.ஆர். அப்பா மகன் என்று இரட்டை வேடம் கொண்டிருந்தாலும் அப்பாவாக வரும் எம்.ஜி.ஆர். ஒரே ஒரு சண்டைக் காட்சியுடன் நெஞ்சில் ஈட்டி பாய்ந்து இறந்து போய்விடுவார். எனவே படம் முழுக்க மகன் எம்.ஜி.ஆர். மட்டுமே வேங்கையன் என்ற பெயரில் இடம் பெற்றிருந்தார். இப்படத்தை ராஜஸ்தான் ஜெய்ப்பூர் மாளிகையிலும் அங்கிருந்த பாலைவனத்திலும் எடுத்து இருந்ததால் ரசிகர்களுக்கு கண்ணுக்கினிய காட்சிகள் ஏராளமாக இருந்தன.



அடிமைப் பெண்

சென்னை	மிட்லண்ட்	100
சென்னை	மேகலா	100
சென்னை	கிருஷ்ணா	133
சென்னை	நூர்ஜகான்	105
மதுரை	சிந்தாமணி	176
திருச்சி	ஜூபிடர்	133
சேலம்	சாந்தி	133
கோவை	ராஜா	120
நெல்லை	சென்ட்ரல்	120
ஈரோடு	முத்துகுமார்	101
மாயவரம்	பியர்லஸ்	100
தூத்துக்குடி	பாலகிருஷ்ணா	101
கடலூர்	நியூ சினிமா/கமர்	100
வேலூர்	தாஜ்	100
நாகர்கோவில்	பயனீர்முத்து	100
குடந்தை	டைமண்ட்	101
திண்டுகல்	சக்தி	102
இலங்கை	சென்ட்ரல்	133
இலங்கை	ராணி	112
பெங்களூர்	அபேரா/நவ்ரங்	105
பெங்களூர்	மெஜஸ்டிக்/சாரதா	154
ராம்நாட்	சண்முகா	92
பாண்டி	நவினா	92

அடிமைப்பெண் படத்தில் எம்.ஜி.ஆர். ஆரம்பத்தில் விபரம் இல்லாத குழந்தை போல இருந்ததும் அவருக்கு ஜெயலலிதா எழுத்துப் பயிற்சி, போர்ப்பயிற்சி ஆகியவை அளித்ததும், படத்தில் வித்தியாசமான காட்சிகளாக புதுமையான முறையில் எடுக்கப்பட்டிருந்தன. இப்படத்தை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் தயாரித்தது. கே வி மகாதேவன் இசையமைத்தார், கருணாநிதியின் மைத்துனர் சொர்ணம் வசனம் எழுதினார். எம்.ஜி.ஆரின்

அண்ணனுடைய சம்பந்தி கே சங்கர் இயக்குனராகப் பணியாற்றினார்.

அடிமைப் பெண் படத்தில் இடம்பெற்ற "காலத்தை வென்றவன் நீ காவியமானவன் நீ", "ஏமாற்றாதே ஏமாறாதே", "உன்னைப் பார்த்து இந்த உலகம் சிரிக்கிறது" ஆகிய தத்துவ பாடல்கள் அப்போதிருந்த அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டிருந்ததனால் மக்களின் மனதை வெகுவாக கவர்ந்தன இவை பின்னர் அண்ணா திமுக வளர்ச்சிக்கும் திமுக எதிர்ப்புக்கும் உறுதுணையாய் நின்றன. ஏமாற்றாதே ஏமாறாதே பாடல் காட்சிக்கு ஜெயலலிதாவுக்கு விதவிதமான ஆடைகள் வெளிநாட்டு பாணியில் தைக்கப்பட்டன. இவரது உடைகள் பற்றி அப்போது தினத்தந்தியில் நீண்ட கட்டுரைகள் வெளிவந்தன. அவரது நடனமும் வெளிநாட்டு பானியில் சிறு முரசுகளை உடம்பில் கட்டிக்கொண்டு ஆடுவதாக அமைந்திருந்தது. ஜெயலலிதாவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்ட படமாக இப்படம் அமைந்தது எனலாம்.

மாட்டுக்கார வேலன்

1970ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டுக்கு வெளிவந்த படம் மாட்டுக்கார வேலன். இப்படத்தில் எம்.ஜி.ஆர். மாட்டுக்கார வேலன் ஆகவும் ரகு என்ற வக்கீலாகவும் இரண்டு வேடம் ஏற்று நடித்திருந்தார். வேலனுக்கு ஜெயலலிதாவும், வக்கீலுக்கு லட்சுமியும் ஜோடியாவர்.. இப்படத்தை மதுரை ஜெயந்தி பிலிம்ஸ் தயாரித்து, கே.வி. மகாதேவன் இசை அமைத்தார், நாராயணன் வசனம் எழுத, ப. நீலகண்டன் படத்தை இயக்கினார்.



இப்படம் மாபெரும் வெற்றிப் படமாக அமைந்தது. இப்படத்தில் வக்கீலாக நடித்த ரகுவை விட மாட்டுக்கார வேலனாக நடித்தவருக்கு அதிகம் காட்சிகள் கொடுக்கப்பட்டன. எனவே வேலனே படத்தின் ஹீரோ ஆனார். “சத்தியம் நீயே தர்மத் தாயே” என வரும் முதல் பாடல் அவர் மாடு மேய்க்கும் தொழிலை செய்கின்றார் என்பதை காண்பித்தது. அதன் பிறகு கதை வேறு போக்கில் சென்று விட்டது. படத்தின் இறுதியில் வேலன் துப்பறியும் பணியில் ஈடுபட்டு உண்மையைக் கண்டறிகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு மதுரை அருகே உள்ள வைகை அணைக்கட்டில் நடந்தது. அப்போது அப்பகுதி மக்கள் இரவும் பகலுமாக அங்கேயே உட்கார்ந்து இருந்து படப்பிடிப்பைக் கண்டு ரசித்தனர். அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களை எம்.ஜி.ஆர். தன்னுடைய அன்பு கட்டளையால் கட்டுப்படுத்தியதை பார்த்த பின்பு ‘எம்.ஜி.ஆர். நின்றால் பொதுக்கூட்டம; எம்.ஜி.ஆர். நடந்தால் ஊர்வலம் என்ற வாசகம் உருவாயிற்று.

கிருஷ்ணவேணி – *107* நாள் – வசூல் ரூ.*2,59,551.80 ;* மதுரை-சிந்தாமணி-*177* நாள் – வசூல் ரூ.*4,33,744.84 ;* கோவை-இருதயா – *151* நாள் – வசூல் ரூ.*3,45,869.79 ;* திருச்சி-பேலஸ் – *151* நாள் – வசூல் ரூ.*3,00,503.50 ;* சேலம்-ஜெயா – *156* நாள் – வசூல் ரூ.*3,61,307.90 ;* ஈரோடு–சென்ரல் – *142* நாள் – வசூல் ரூ.*1,83,556.54 ;* வேலூர்-நேஷனல் – *100* நாள் – வசூல் ரூ.*2,20,152.51 ;* கும்பகோணம்-ராஜா – *75* நாள் – வசூல் ரூ.*1,00,902.99 ;* பட்டுக்கோட்டை-ராஜாமணி – *75* நாள் – வசூல் ரூ.*68,227.64 ;* தூத்துக்குடி-ஜோசப் – *75* நாள் – வசூல் ரூ.*85,978.47 ;* பழநி சந்தான கிருஷ்ணா – *73* நாள் –

மாட்டுக்கார வேலன்

சென்னை	- பிளாசா	- 133
சென்னை	- பிராட்வே	- 176
சென்னை	- கிருஷ்ணவேணி	- 107
சென்னை	- சயானி	- 106
மதுரை	- சிந்தாமணி	- 177
திருச்சி	- பேலஸ்	- 151
சேலம்	- ஜெயா	- 156
கோவை	- இருதயா	- 144
நெல்லை	- லட்சுமி	- 142
ஈரோடு	- சென்ட்ரல்	- 149
இலங்கை	- சென்ட்ரல்	- 132
இலங்கை	- ராணி	- 126
திருவண்ணாமலை	- பாலசுப்பிரமணி	- 100
வேலூர்	- கிரவுன்	- 100
குடந்தை	- டைமண்ட்	- 101
மாயவரம்	- பியர்லஸ்	- 105
திண்டுகல்	- N.V.G.B.	- 105
தஞ்சை	- யாகப்பா	- 105

வசூல் – 75,140.90 ; இலங்கை-மருதாலை-சென்ரல் – 136 நாட்கள் ; யாழ்பாணம் ராணி – 126 நாள்கள், கல்மனை – ஓடியன் – 117 நாள்கள் ; பெங்களூர் – 3 அரங்கம் 11 வாரம்.

குடியிருந்த கோயில்

1968 ஆம் ஆண்டு மார்ச் 15ஆம் நாள் வெளிவந்த படம் குடியிருந்த கோயில். இப்படத்தில் ஆனந்த் என்ற பெயரில் மேடை பாடகராகவும் பாபு அல்லது சேகர் என்ற பெயரில் கொள்ளைக்காரனாக எம்.ஜி.ஆர். இரண்டு வேறுபட்ட வேடங்களில் நடித்திருந்தார். ஆனந்துக்கு ஜெயலலிதாவும், பாபுவுக்கு ராஜஸ்ரீயும் ஜோடி சேர்ந்தனர். சரவணா ஸ்கிரீன்ஸ் என்ற பெயரில் ஜி என் வேலுமணி தயாரித்த இப்படத்திற்கு எம் எஸ் விஸ்வநாதன் இசை அமைத்தார். சொர்ணம் வசனம் எழுதினார். கே சங்கர் படத்தை இயக்கினார். இப்படம் மாபெரும் வெற்றிப்[படமாக அமைந்தது.

எங்க வீட்டுப் பிள்ளையைப் போல ஆனந்த் பாத்திரத்தில் எம்.ஜி.ஆர். அமைதியானவராகவும், பாபு ஆக்ரோஷமானவராகவும் நடித்திருந்த இருவரும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் என்பதும் இவர்கள் அறுவை சிகிச்சையால் பிரித்தெடுக்கப்பட்ட போது ஏற்பட்ட அடையாளமே படத்தின் இறுதியில் அவர்களை சகோதரர்கள் என்று இனங்கண்டு கொள்ள உதவியது. இப்படத்தில் புதுமையாக அமைந்திருந்தது.

அன்புத்தாயே குடியிருந்த கோயில்

தாயால் வளர்க்கப்படும் குழந்தை அன்பான அமைதியான குழந்தையாகவும், தாயன்பு குடும்பப்

பின்னணியும் இல்லாமல் ஒரு கொடியவனால் வளர்க்கப்படும் குழந்தை முரட்டுக் குழந்தையாகவும் வளரும் என்பதையும் இப்படம் உணர்த்தியது. அடிமைப்பெண் படத்தை போல இப்படத்திலும் தாயார் வேடத்தில் பண்டரிபாய் நடித்திருந்தார். இப்படத்தில் இடம்பெற்ற "ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதிலே தான் சுகம் சுகம் சுகம்" என்ற நடனம் இசைத்தட்டில் இரண்டு பக்கமும் பதிவாகியிருந்தது. இரசிகர்களிடையே மிகவும் வரவேற்பைப் பெற்ற நடனமாகும். இந்தியத் திரைப் படங்களிலேயே இதுபோன்ற ஒரு சிறப்பான 'பாங்க்ரா'' நடனம் இல்லை என்று சொல்லும்படி மிகச் சிறப்பாக இருந்தது. இப்படத்தில் வேறு சில பாடல் காட்சிகளும் மற்ற பாடல் காட்சிகளும் சிறப்பாக அமைந்து இரசிகர்களின் உள்ளத்தை கொள்ளை கொண்டன.


இப்படம், சென்னை-குளோப் – 105 நாட்கள்; கிருஷ்ணா – 105 நாட்கள்;புவனேஸ்வரி – 105



நாட்கள்; மதுரை-நியூசினிமா – 133 நாட்கள்; திருச்சி-பேலஸ் – 112 நாட்கள்; தஞ்சை-நியூடவர் – 100 நாட்கள்; ஈரோடு-மாணிக்கம் - 112 நாட்கள்; குடந்தை-ஜுபிடர் – 100 நாட்கள்; கோவை-ராஜா – 112 நாட்கள்; சேலம்-சாந்தி – 110 நாட்கள்; திண்டுக்கள்-சோலைஹால் – 112 நாட்கள்; இலங்கை-செல்லமஹால் – நாட்கள் (1968ல் அதிக வசூல் பெற்ற முதல் காவியம்)

நீரும் நெருப்பும்

நீரும் நெருப்பும் 1971 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பதினெட்டாம் நாள் வெளிவந்தது. இப்படம் சில ஊர்களில் நூறு நாட்கள் ஓடியது. இப்படத்தில் வந்த கூட்டத்தைக் கட்டுப்படுத்த முதன் முதலாக



சென்னையில் குதிரைப்படை போலீசார் வரவழைக்கப்பட்டனர். இப்படம் எம்.ஜி.ஆரின் நீண்ட நாள் கனவுப் படமாகும். அவருடைய ஆசான் எம் கந்தசாமி முதலியாரின் மகன் எம் கே ராதா அவர்கள் நடித்த அபூர்வ சகோதரர்கள் படத்தின் மறுஆக்கம் ஆகும். 'அபூர்வ சகோதரர்கள்' படத்தில் பி. பானுமதி நடித்த கதாபாத்திரத்தில் நீரும் நெருப்பும் படத்தில் ஜெயலலிதா நடித்திருந்தார்.

எம்.ஜி.ஆர். கரிகாலன் என்ற பெயரில் கருப்பு எம்.ஜி.ஆராகவும் மணிமாறன் என்ற பெயரில் சிவப்பு எம்.ஜி.ஆராகவும் இரட்டை வேடங்களில் நீரும் நெருப்பும் படத்தில் நடித்தார். இவர்களில் கரிகாலன் மணிமாறனுக்கு வில்லனாக அமைந்ததை ரசிகர்கள் விரும்பவில்லை. இருவருமே சகோதரர்கள் என்ற போதும் முதலில் பிறந்தவரின் உணர்ச்சிகள் அடுத்துப் பிறந்தவரைத் தாக்கியதால் அண்ணனை அடிக்கும்போது தம்பிக்கும் வலிக்கும்; அண்ணன் காதலிக்கும்போது அந்த உணர்வுகள் தம்பிக்கும் ஏற்படும். இப் பிறவிக் கோளாறால் அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையே சண்டை வந்து வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் சிக்கி விடுகின்றனர். பகைவனிடம் இருந்து தங்கள் நாட்டை மீட்க வேண்டும் என்ற கடமை அவர்களுக்கு இருக்கும்போது ஒரு பெண்ணுக்காக இருவரும் அடிதடி சண்டை நடத்துவது, தவறானது என்று ஆர் எஸ் மனோகர் எடுத்துச்சொல்லி இவர்களை நெறிப்படுத்துவார்.

நீரும் நெருப்பும் படம் எம்.ஜி.ஆர். எதிர்பார்த்தபடி அமையவில்லை. அதிக செலவில் வண்ணப் படமாக இப்படம் தயாரானது.

இப்படத்துக்கு எம் எஸ் விஸ்வநாதன் இசை அமைக்க ஆர் கே சண்முகம் வசனம் எழுதியிருந்தார். நீலகண்டன் இப்படத்தை இயக்கினார். எனினும் இப்படம் எதிர்பார்த்த படி வெள்ளி விழா கொண்டாடாமல் நூறு நாளோடு முடிந்துவிட்டது. இப்படத்தின் பாடல்கள் மக்கள் மனதில் நிலைபெற்றன.

“கடவுள் வணக்கம் பாடும் இளங்காலை நேரக் காற்று” என்ற பாடல் பள்ளி மாணவர்களால் அவர்களது விளையாட்டு விழா நிகழ்ச்சிகளில் உடற்பயிற்சி போன்றவற்றிற்குப் பயன்படுத்தப் பட்டது. படத்தின் பெரும்பகுதி தேக்கடியில் எடுக்கப்பட்டது. அப்போது அங்கு அதிக வறட்சி நிலவியதால் பின்னணிக் காட்சிகள் பசுமையாக இல்லாமல் மரங்கள் அனைத்தும் காய்ந்து குச்சி குச்சியாக நிற்பது காண்பதற்கு ரம்மியமாகத் தோன்றவில்லை.

இப்படத்தில் ஒரு பாடல் பல மொழி பாடலாக மலையாளம் தெலுங்கு கன்னடம் என அமைந்திருந்தது. அம்மொழிகளில் அந்நாட்டு மக்களின் உணவு பற்றிய தகவல்கள் இடம் பெற்றன. இப் பாடல் காட்சிக்கு ஜெயலலிதா மிகச் சிறப்பாக அந்தந்த மொழிக்கு ஏற்ற நடனங்களை ஆடி இருந்தார்.

நீரும் நெருப்பும் வெளியான நாள் – 18.10.1971. சென்னை-தேவிபாரடைஸ் – 67 நாட்கள்; கிருஷ்ணா – 71 நாட்கள்; மேகலா – 53 நாட்கள்; மதுரை-சென்ரல் - 84 நாட்கள்; சேலம்-பேலக் – 71 நாட்கள்; வேலூர்-

தாஜ், கிரவுண்ட் - 58 நாட்கள்; இலங்கை-யாழ்பானம் ராணி - 108 நாட்கள்;

உலகம் சுற்றும் வாலிபன்

1973 ஆம் ஆண்டு மே மாதம் 11-ஆம் நாள் வெளிவந்த உலகம் சுற்றும் வாலிபன் எம்.ஜி.ஆரின் சொந்தத் தயாரிப்பாகும். அண்ணன் தம்பி கதாபாத்திரங்களில் எம்.ஜி.ஆர். இரட்டை வேடமிட்டு நடித்திருந்தார். அண்ணன் முருகன், விஞ்ஞானியாகவும், தம்பி ராஜு சர்வதேச காவல் துறை அதிகாரியாகவும் இரண்டு வேடங்களில் எம்.ஜி.ஆர். நடித்தார். இப்படம் தமிழ்நாட்டுக்

"உலகம் சுற்றும் வாலிபன்"
வெளியான தேதி : 11.5.1973
100 நாள் மேல் ஓடிய திரையரங்குகள்


சென்னை	தேவிபாரடைஸ்	182 நாள்
சென்னை	அகஸ்தியா	176 நாள்
சென்னை	உமா	112 நாள்
மதுரை	மீனாட்சி	217 நாள்
திருச்சி	பேலஸ்	203 நாள்
கோவை	ராஜா ·	156 நாள்
சேலம்	சங்கம்	126 நாள்
நெல்லை	சென்ட்ரல்	113 நாள்
கும்பகோணம்	நூர்மகால்	106 நாள்
ஈரோடு	சென்ட்ரல்	112 நாள்
மாயவரம்	கோமதி	110 நாள்
தூத்துக்குடி	சார்லஸ்	105 நாள்
நாகர் கோவில்	பயோனிர் முத்து	112 நாள்
வேலூர்	லட்சுமி	112 நாள்
பட்டுக்கோட்டை	முருகையா	105 நாள்
திண்டுக்கல்	N.V.G.B.	100 நாள்
பாண்டி	ரத்னா	112 நாள்
கரூர்	திண்ணப்பா	105 நாள்
வில்லிவாக்கம்	ராயல்	100 நாள்
தஞ்சை	ராஜாகலையரங்கம்	110 நாள்
பெங்களூர்	அபேரா	105 நாள்
பெங்களூர்	சிவாஜி	105 நாள்
பெங்களூர்	நடராஜ்	105 நாள்
இலங்கை	கேப்பிட்டல்	203 நாள்
யாழ் நகர்	மனோகரா	115 நாள்
மாட்டுநகர்	விஜயா	125 நாள்

கதையை கொண்ட படம் அல்ல. சர்வதேசத் தமிழ்க் குடிமக்கள் இருவரைப் பற்றிய படமாகும். இப்படத்தின் கதை முழுக்க முழுக்க வெளிநாடுகளிலேயே நடப்பதாக அமைந்திருந்தது. படத்தின் காட்சிகள் ஹாங்காங், ஜப்பான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் படம் பிடிக்கப்பட்டன.

ஜப்பானில் 1970 இல் நடந்த உலகப் பொருட்காட்சியில் கிளைமாக்ஸ் பாடலான

"உலகம் அழகு கலைகளின் சுரங்கம்

பருவச் சிலைகளின் அரங்கம்"



என்ற பாடல் காட்சி படம் பிடிக்கப்பட்டது. இப்படத்தில் அண்ணன் முருகனுக்கு மஞ்சுளாவும், தம்பி ராஜுவுக்கு சந்திரகலாவும் ஜோடி ஆவர். இப்படத்திற்காக முதன் முதலில் ஒப்பந்தம் செய்யப்பட்ட லதா, முருகனின் செயலாளராக நடித்திருந்தார். படத்தின் அத்தனை பாடல்களும் மக்களின் மனதைக் கவர்ந்தன. பாடல் காட்சிகளும் சண்டைக் காட்சிகளும் அடுத்தடுத்து இடம் பெற்றதால் படம் மற்ற நாடுகளிலும் வெகுவாக ரசிக்கப்பட்டது. படத்தின் கருப்பொருள் சர்வதேசப் பிரச்சனையை மையமாகக் கொண்டிருந்தது. எனவே இது தமிழ்நாட்டு கதை அம்சத்தை கொண்டதாக விளங்கவில்லை. ஆனால் தமிழனின் பண்பாடு பற்றிய உன்னதமான கலைப்படைப்பாக திகழ்ந்தது.

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் தயாரித்த இஉலகம் சுற்றும் வாலிபன் படத்துக்கு எம் எஸ் விஸ்வநாதன் இசை அமைத்தார், சொர்ணம் வசனம் எழுதினார், எம்.ஜி.ஆர். படத்தை இயக்கினார். 25 பேரைக் கொண்ட குழுவை எம்.ஜி.ஆர். பல நாடுகளுக்கும் அழைத்துச் சென்று படப்பிடிப்பை வெற்றிகரமாக நடத்தினார்.

1973 வரை சென்னையில் தேவி பாரடைஸ் திரையரங்கில் கிரிகோரி பெக் நடித்த மெக்கனாஸ் கோல்ட் என்ற படத்தின் பன்னிரெண்டு இலட்ச ரூபாய் வசூல் தான் சாதனை படைத்திருந்தது. ஆனால் உலகம் சுற்றும் வாலிபன் அங்கு திரையிடப்பட்டதும் பதினாறு இலட்ச ருபாய் வசூல் செய்த முந்தைய ஆங்கிலப் படத்தின் சாதனையை முறியடித்தது. திரையரங்கம் புதிதாகக் கட்டி முதல் படம் வெளியிடும் போது வசூலில் உறுதி என்பதால்

உலகம் சுற்றும் வாலிபன் போடும் பழக்கம் தோன்றியது. திரையரங்குக்கு மின் கட்டணம் செலுத்த வேண்டிய நாட்களில் இப்படத்தை வெளியிட்டு வசூல் செய்து கட்டணத்தை செலுத்தும் பழக்கம் இருந்து வருகிறது.

பட்டிக்காட்டு பொன்னையா

பட்டிக்காட்டு பொன்னையா 1973ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பத்தாம் நாள் வெளியாயிற்று. எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் ஜோடியாக நடித்த கடைசிப் படம் ஆகும். இப்படத்தில் முத்தையா பொன்னையா என்று இரண்டு சகோதரர்கள் வேடத்தில் எம்.ஜி.ஆர். நடித்து இருந்தார். மூத்தவர் பொன்னையா தாடி வைத்தது தோற்றத்தில் வித்தியாசம் காட்டியிருப்பார். இவர்களில் முத்தையா படித்தவராகவும் படிக்கும்போதே ஒரு பெண்ணை காதலித்து திருமணம் செய்து வீட்டு மாப்பிள்ளையாக இருந்து வருவதால் அங்கு



ஏற்பட்ட அவமானங்களால் வீட்டை விட்டு வெளியேறியவராகவும் நடித்திருந்தார்.

பொன்னையா பட்டிக்காட்டைச் சேர்ந்தவராகவும் அடமானத்தில் இருக்கும் தன் வீட்டை வில்லன் நம்பியாரிடம் இருந்து மீட்க பட்டணத்திற்கு வந்து குஸ்தி போட்டியில் வெற்றி பெற்று வீட்டை மீட்பவராகவும் நடித்திருந்தார். இப்படத்தை வசந்த் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து வெளியிட்டது. திரையிசைத் திலகம் கே.வி. மகாதேவன் இசை அமைத்தார். வசனத்தை சொர்ணம் எழுதியிருந்தார். பி.எஸ். ரங்கா படத்தை இயக்கினார். இப்படம் பெரிய அளவில் லாபம் தரவில்லை. இதற்கு முன்பே உலகம் சுற்றும் வாலிபன் வந்து பெரிய வெற்றி பெற்றிருந்ததால் மக்களிடையே இருந்த அதிக எதிர்பார்ப்பு இப்படத்தின் லாபத்தைக் குறைத்து விட்டது

முத்தையா கதாபாத்திரம் திருமணத்துக்கு முன்பே தன காதலி ராஜ ஸ்ரீயுடன் உறவுகொண்டு அப்பெண்ணை திருமணம் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் சிக்கியதும் ரசிகர்களுக்குப் பிடிக்கவில்லை. எம்.ஜி.ஆரைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த எண்ணத்துக்கு மாறாக இக்காட்சிகள் இருந்ததால் இப்படத்தை ரசிகர்கள் வெகுவாக ரசிக்கவில்லை.


‘நானம் கெட்டவளே அடியே நடத்தை கெட்டவளே’

என்று எம்.ஜி.ஆர். தன் காதலியைப் பார்த்து பாடியதும் ரசிகைகளுக்கு பிடிக்காத காரணத்தால் இப்படம் பெரிய வெற்றிப்படமாக அமையவில்லை.

இப்படம் வெளியான நாள் 10.08.1963. சென்னை-குளோப் – 50 நாட்கள் ; மகாராணி - 50 நாட்கள் ; சரவணா - 50 நாட்கள் ; பழனியப்பா - 50 நாட்கள் ; மதுரை-அலங்கார் - 70 நாட்கள் ; நெல்லை-லட்சுமி - 63 நாட்கள் ; நாகர்கோவில் தங்கம் - 53 நாட்கள்.

நேற்று இன்று நாளை

1974-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ம் நாள் வெளிவந்த படம் நேற்று இன்று நாளை. இப்படம் வெற்றிப்படமாக அமைந்தது. இப்படத்தை நடிகர் அசோகன் அமல்ராஜ் பிலிம்ஸ் என்ற தன் சொந்த



தயாரிப்பு நிறுவனத்தின் மூலமாகத் தயாரித்தார். இதில் மஞ்சுளா, லதா, ராஜஸ்ரீ என மூன்று கதாநாயகிகள் நடித்தனர். எம் எஸ் விஸ்வநாதன் இசையமைத்த சொர்ணம், வசனம் எழுதினார். ப. நீலகண்டன் படத்தை இயக்கினார்.

லதா உலகம் சுற்றும் வாலிபன் படத்துக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தாலும் இந்தப் படத்தில்

'ரோமியோ ஜூலியட்

இன்னொரு வானம்

என்ற பாடல் காட்சியில் மேடையில் படிக்கட்டில் இறங்கி வரும் காட்சியில் தான் அவர் முதன் முதலில் நடித்தார். இப்படத்தில் எம்.ஜி.ஆர். இரட்டை வேடத்தில் நடித்திருந்தாலும் மாணிக்கம் என்ற கதாபாத்திரம் மட்டுமே படம் முழுக்க இடம்பெறும். இன்னொரு எம்.ஜி.ஆர். முதல் காட்சியில் தன புது மனைவி ராஜ ஸ்ரீயுடன்

''பாடும் போது நான் தென்றல் காற்று''

என்ற பாட்டு பாடி முடித்ததும் மலைப்பாறையில் இருந்து கால் இடறி கீழே விழுந்து இறந்து விடுவார். தோற்றத்தின் ஒற்றுமையை வைத்து ராஜஸ்ரீயின் சித்தப் பிரம்மையை சுகப் படுத்துவதற்காக அவருடைய தந்தை வி.கே. ராமசாமி மாணிக்கத்தை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு ராஜஸ்ரீயின் கணவனாக நடிக்கச் செய்வார். அவர்களிருவரும் பாட்டு பாடி உயரத்திலிருந்து அந்த எம்.ஜி.ஆர். விழுந்த இடத்திற்கு அழைத்துச் செல்லும்படி டாக்டர் சொன்னதால் அங்கு அழைத்து சென்று அதே பாட்டைப் பாடவும் ராஜஸ்ரீக்கு சித்தபிரமை நீங்கிவிடும்.

நேற்று இன்று நாளை படத்தில் படத்தில் ''நான் படித்தேன் காஞ்சியிலே நேற்று'' என்ற பாடல் அண்ணா திமுகவின் பிரச்சாரப் பாடலாக அமைந்தது. திமுகவின் ஊழல்களை எடுத்துக்காட்டியது. எம்.ஜி.ஆர். கவிஞர் வாலியிடம் இன்னின்ன பிரச்சனைகளைப் பற்றி எழுதுங்கள் என்று எடுத்துச் சொல்லியதால் திமுகவின் ஊழல ஒவ்வொன்றும் இப்பாடலில் இடம்பெற்து .

இப்படத்தில் இதற்கு முன்பு திண்டுக்கல் இடைத்தேர்தலில் அண்ணா திமுக பெற்ற வெற்றி சுவரொட்டியாகக் காட்டப்பட்டது. குடிசை வீடுகளில் அண்ணா திமுக கொடி பறக்கும் காட்சிகளும் இப்படத்தில் இடம்பெற்றன. மொத்தத்தில் இப்படம் அண்ணா திமுகவின் பிரச்சாரப் படமாக அமைந்து கட்சி வளர்ச்சிக்கு பேருதவி புரிந்தது. படத்தின் பாடல் காட்சிகள் காஷ்மீரில் எடுக்கப்பட்டதால் குளிர்ச்சியாகவும் அழகாகவும் அமைந்தன.


இப்படம் சென்னை – பிளாசா – 103 நாட்கள் – வசூல் ரூ.3,36,808.20 ; மகாராணி – 105 நாட்கள் – வசூல் ரூ.3,24,432 ; சயராணி – 69 நாட்கள் – 1,74,372.70; கிருஷ்ணவேணி – 75 நாட்கள் – வசூல் ரூ.2,29,492 ; மதுரை-சிந்தாமணி – 119 நாட்கள் – வசூல் ரூ.4,05,964.76.

சிரித்து வாழ வேண்டும்

1974 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 31ம் தேதி வெளிவந்த படம் சிரித்து வாழவேண்டும். இப்படம் இந்தியில் அமிதாப்பச்சன் நடித்து வெளிவந்த ஜன்ஜிர் என்ற படத்தின் தமிழாக்கம் ஆகும். இப்படத்தில்

இரண்டு மாறுபட்ட வேடங்களில் எம்.ஜி.ஆர். நடித்திருந்தார். படம் வெற்றி விழா கொண்டாடியது.

ராம் என்ற கோபக்கார, போலீஸ் அதிகாரியாகவும் அப்துல்ரகுமான் என்ற முஸ்லிம் கதாபாத்திரத்திலும் எம்.ஜி.ஆர். நடித்திருந்தார். சூதாட்டக் கிளப் வைத்திருந்த அப்துல்ரகுமான் திருந்தி ஆட்டோகாரராக மாறி விடுவார். இவ்வாறான இரண்டு வேறுபட்ட கதாபாத்திரங்களில் எம்.ஜி.ஆர். நடித்து இருந்தார். கீழக்கரையில் உள்ள தன்னுடைய முஸ்லிம் நண்பர் அப்துல் ரகுமானின் பெயரை இப்படத்தில் தன்னுடைய கதாபாத்திரத்திற்கு சூட்டிக்கொண்டார்.



சிரித்து வாழவேண்டும் படம் ஆனந்த விகடனில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்த எஸ். மணியனின் உதயம் புரொடக்ஷன்ஸ் நிறுவனத்தாரின் தயாரிப்பாகும். லதா ஜோடியாக நடித்திருந்தார். இந்தியில் இப்படத்தில் கோபக்கார போலிஸ் அதிகாரியாக அமிதாப் பச்சன் நடித்தார். சிரித்து வாழ வேண்டும் படத்திற்கு எம் எஸ் விஸ்வநாதன் இசை அமைத்தார். ஆர் கே சண்முகம் வசனம் எழுதினார். ஆனந்த விகடன் பத்திரிகையின் முதலாளி என் எஸ் எஸ் பாலன் படத்தை இயக்கினார். இவர் எஸ்.எஸ். வாசனின் மகனாவார்.

இப்படம் வெளியான நாள் 30-11-1974. சென்னை-பிளாசா – 83 நாட்கள் வசூல் ரூ.3,04,082.68 ; ஸ்ரீகிருஷ்ணா – 83 நாட்கள் வசூல் ரூ.3,54,142.03 ; மகாலட்சுமி – 62 நாட்கள் வசூல் ரூ.1,92,702.16 ; கிருஷ்ணவேணி – 62 நாட்கள் வசூல் ரூ. 2,05,442.54 ; மதுரை-நியூசினிமா – 104 நாட்கள் வசூல் ரூ.3,59,634.60 ; திருச்சி – 56 நாட்கள் வசூல் ரூ.1,59,091.35 ; நெல்லை-பார்வதி – 62 நாட்கள் ; பெங்களூர்-ஸ்டேட்ஸ் – 50 நாட்கள் ; இலங்கை-செல்ல மகால் – 107 நாட்கள்.

நினைத்ததை முடிப்பவன்

1975 ஆம் ஆண்டு மே மாதம் ஒன்பதாம் நாள் வெளிவந்த நினைத்ததை முடிப்பவன் படமும் இரண்டு மாறுபட்ட வேடங்களில் எம்.ஜி.ஆர். நடித்த படமாகும். இப்படம் சச்சா ஜூட்டா என்ற இந்திப் படத்தின் தமிழாக்கம் ஆகும். இதில் எம்.ஜி.ஆர். சுந்தரம் என்ற இசைக் கலைஞராகவும் ரஞ்சித் என்ற வைரங்களை திருடி விற்பவராகவும் இரண்டு

மாறுபட்ட வேடங்களில் நடித்திருந்தார். சுந்தரத்துக்கு, போலீஸ் அதிகாரி மஞ்சுளாவும், ரஞ்சித்துக்கு அவரது காரியதரிசி லதாவும் ஜோடியாக இருந்தனர். ஓரியண்டல் பிக்சர்ஸ் தயாரித்த இப் படத்துக்கு எம்.எஸ். விஸ்வநாதன் இசை அமைக்க ஆர் கே சண்முகம் வசனம் எழுதினார். ப. நீலகண்டன் இயக்கினார். இப்படமும் நல்ல வெற்றிப்படமாக அமைந்து 100 நாட்கள் ஓடி வெற்றி விழா கொண்டாடியது.

நினைத்ததை முடிப்பவன் படத்தில் நடித்த சாரதாவுக்கு அவருடைய நடிப்பைப் பாராட்டி எம்.ஜி.ஆர். காட்சிகளை அதிகப்படுத்தி கொடுத்தார். இப்படத்தில் வரும் தங்கையின் திருமணக் கற்பனைக் காட்சியில் இடம் பெற்ற பாடல்

“பூமழை தூவி வசந்தங்கள் வாழ்த்த

ஊர்வலம் நடக்கின்றது

எழில் கொஞ்சிடும் அன்பு தங்கையின் நெற்றியில்

குங்குமம் சிரிக்கின்றது – மங்கலக்


குங்குமம் சிரிக்கின்றது.

என்ற பாடல் பெரிய வரவேற்ப்பை பெற்றது. அதன் பிறகு தமிழகத்தில் நடக்கும் திருமணங்களில் இப்பாட்டு தவறாமல் இடம்பெற்றது. படத்தின் பாடல் காட்சிகள் காஷ்மீர் டால் ஏரியிலும் ஷாலிமார் ரோஜா தோட்டத்திலும் எடுக்கப்பட்டிருந்ததால் இப்படம் ரசிகர்களின் உள்ளத்தை கொள்ளை கொண்டது.

இப்படம் வெளியான நாள் 9-5-1975. சென்னை-தேவிபாரடைஸ் – 84 நாட்கள் வசூல் ரூ.6,26,952.95 ; அகஸ்தியர் – 84 நாட்கள் வசூல் ரூ.3,87,572.95 ; உமா – 77 நாட்கள் வசூல் ரூ.2,72,985.40; மதுரை-மீனாட்சி – 117 நாட்கள் – 100 நாள் வசூல் ரூ.3,40,731.90 ; வேலூர்-தாஜ் – 51 நாட்கள் ; இலங்கை-கல்பனா – 100 நாட்கள் ; சென்ரல் – 105 நாட்கள் ; வின்ஸர் – 100 நாட்கள் ; பெங்களூர்-சங்கீத் – 50 நாட்கள் வசூல் ரூ.2,32,08 ; விநாயகா – 50 நாட்கள் வசூல் ரூ.2,20,01 ; கினோ – 50 நாட்கள் வசூல் ரூ.1,81,25 ; மற்றும் 30 அரங்குகளில் 50 நாட்கள் அதற்கு மேல்.

நாளை நமதே

நினைத்ததை முடிப்பவன் படம் வெளிவந்த இரண்டு மாதங்களில் எம்.ஜி.ஆர். இரு வேடங்களில் நடித்த நாளை நமதே படம் வெளிவந்து வெற்றி விழா கொண்டாடியது. இப்படம் பல திரையரங்குகளில் 150 நாட்களுக்கும் மேலாக ஓடியது. இப்படம் யாதோன் கி பாராத் என்ற இந்தி படத்தின் தமிழாக்கம் ஆகும். இப்படத்தில் சங்கர் என்ற திருடன் கதாபாத்திரத்திலும் விஜய் என்ற உற்சாகமான இளைஞர் கதாபாத்திரத்திலும் எம்.ஜி.ஆர். மாறுபட்ட மேக்கப்புடன் நடித்திருந்தார். சங்கர் வேடத்துக்கு வித்தியாசமான விக் வைத்து முகத்தை கருப்பாக்கி கொண்டு நடித்தார். விஜய் வேடம் ஒரு பணக்கார இளைஞனுக்குறிய குறும்புகளும், விருப்பங்களும் அமைந்திருந்த வேடம் ஆகும். ஆனால் இவர் நிஜப் பணக்காரர் அல்லர். ஒரு பணக்காரரின் மேனேஜர் எடுத்து வளர்த்த பிள்ளை ஆவார்.



கஜேந்திரா பிலிம்ஸ் எடுத்த இப்படத்திற்கு வியட்நாம் வீடு சுந்தரம் வசனம் எழுத எம் எஸ் விஸ்வநாதன் இசையமைக்க மலையாளப் பட இயக்குனர் சேதுமாதவன் படத்தை இயக்கினார். வியட்நாம் வீடு சுந்தரம் எம்.ஜி.ஆருக்கு வசனம் எழுதிய ஒரே படம் நாளை நமதே மட்டுமே. பொதுவாக இவர் சிவாஜி படங்களுக்கு அதிக வசனங்கள் எழுதியுள்ளார். நாளை நமதேயில் கதாநாயகியாக லதா நடித்திருந்தார். சங்கர் கதாபாத்திரத்திற்கு கதாநாயகி கிடையாது.

இப்படத்தில் எம்.ஜி.ஆருக்கும் லதாவுக்கும் இந்திப்பட நடிகர்களைப் போன்ற மேக்கப் உடையலங்காரம் ஆகியவை செய்யப்பட்டிருந்தது இளம் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது. பாடல் காட்சிகளில் இருவரும் இளமையும் அழகும் நிறைந்தவர்களாக ரசிகர்களின் மனதைக் கவர்ந்தனர். இப்படத்தில் எம்.ஜி.ஆரின் வயது 60 என்பது தெரியாத வகையில் இருபது வயது இளைஞனைப் போல சுறுசுறுப்பும் குறும்பும் உடையவராக நடித்திருந்தார். அவருடைய முகத் தோற்றமும் உடல் வனப்பும் ரசிகர்களால் பெரிதும் ரசிக்கப்பட்டது. எம்.ஜி.ஆருக்குப் புதிய ரசிகர்களாக இளைஞர்களின் பட்டாளத்தை கொண்டுவந்தது இப்படம்.

இப்படம் வெளியான நாள் 4.7.1975. சென்னை-ஓடியன் – 63 நாட்கள் ; பாண்டியன் - 63 நாட்கள் ; நூர்ஜகான் – 49 நாட்கள் ; மதுரை-ஸ்ரீதேவி – 63 நாட்கள் ; திருச்சி-ஜுபிடர் – 77 நாட்கள் ; நெல்லை-சிவசக்தி – 63 நாட்கள் ; பாண்டிச்சேரி-அஜந்தா – 70 நாட்கள் ; இலங்கை-சமந்தா – 156 நாட்கள் ; ராணி – 133 நாட்கள் ;

ஊருக்கு உழைப்பவன்

1976 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் தேதி வெளிவந்த ஊருக்கு உழைப்பவன் படத்தில் எம்.ஜி.ஆர். செல்வம், குமார் என்று இரு வேடங்களில் நடித்திருந்தார். குமார் என்ற பணக்காரருக்குப் பதிலாக அவரது வீட்டில் அவரது மனைவியையும் குழந்தையையும் கவனித்துக் கொள்ளும் ஏழை செல்வமாக நடித்த எம்.ஜி.ஆர். தன்னுடைய மனைவியையும் குழந்தையையும்

கவனிக்க இயலாதவராக சோகம் ததும்ப நடித்திருப்பார்.

“பிள்ளைத்தமிழ் பாடுகிறேன் ஒரு

பிள்ளைக்காக பாடுகிறேன்”

என்ற பாடல் இப்படத்தில் பலருடைய மனதையும் கவர்ந்ததாகும். தேஷ் ராகத்தில் அமைந்த ‘‘இதுதான் முதல் ராத்திரி’’ என்ற பாடல் பெண்கள் விரும்பிப் பார்த்த பாடலாகும்.

ஊருக்கு உழைப்பவன் படத்தில் இறுதியில் வரும் சண்டை காட்சியில் ஹெலிகாப்டர் பயன்படுத்தப்பட்டு இருந்தது. தரையில் இருவர் கட்டி உருண்டு சண்டை போடும் காட்சிகளும் இறுதியில் பி எஸ் வீரப்பா வை போலீசார் பிடித்துக்கொண்டு போகும் காட்சியும் தமிழ்ப்பட வழக்கப்படி அமைந்திருந்தது. அதன் பிறகு குமார் எம்.ஜி.ஆர். ஒருவரிடமே அளவுக்கு மீறி பணம் குவிந்து இருப்பதுதான் பல பிரச்சனைகளுக்கு காரணம் என்பதை தான் புரிந்து கொண்டதாகச் சொல்லி தன்னுடைய தேவைக்கு போக மீதியை பொதுநலத் திட்டங்களுக்கு அளித்திருப்பதாக அதற்குரிய ஆவணங்களைக் காட்டுவார்.

செல்வம் எம்.ஜி.ஆர். மத்தியக் காவல் துறை அதிகாரி என்ற உண்மை வெளிப்படும். அவர் ‘காவல் துறையில் பணிபுரிவோர் ஊருக்கு உழைப்பவர்கள் அவர்களுடைய வாழ்க்கையில் மனைவி மக்களை கவனித்துக் கொள்வது இயலாத செயலாகும்’ என்பதை எடுத்துச் சொல்லி தன்னுடைய மகன் இறந்து போனது தவிர்க்க இயலாத துன்பம்

என்பதை நினைவுறுத்துவார். அவரது மனைவியாக வரும் வாணிஸ்ரீ என்னுடைய ஒரு குழந்தைக்காக பார்த்திருந்தால் இந்த நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி இருந்திருக்கும்' என்பதை வெண்ணிற ஆடை நிர்மலாவிடம் சுட்டிக்காட்டி தன்னுடைய தியாகத்தை நியாயப் படுத்துவார். காவல்துறையின் மேன்மைகளை எடுத்துச் சொல்லும் படமாக இப்படம் அமைந்திருந்தது.

இப்படம் சென்னை-காலினோ – 211 நாட்கள் வசூல் ரூ.5,33,275.93 ; சென்னை-பிராட்வே – 176 நாட்கள் வசூல் ரூ.4,29,119.29 ; சென்னை-மேகலா – 176 நாட்கள் வசூல் ரூ.3,61,293.95 ; மதுரை-சென்ரல் – 176 நாட்கள் வசூல் ரூ.3,85,108.34 ; திருச்சி-ஜுபிடர் – 236 நாட்கள் வசூல் ரூ.3,36,401.50 ; சேலம்-சாந்தி – 113 நாட்கள் வசூல் ரூ.2,25,817.15 ; கோவை-ராகுல் – 190 நாட்கள் வசூல் ரூ.3,76,005.35 ; நெல்லை-லெட்சுமி – 149 நாட்கள் வசூல் ரூ.1,61,089.13 ; தஞ்சை-யாகப்பா – 176 நாட்கள் வசூல் ரூ.1,51,009.72 ; பல்லாவரம்-ஜனதா தேவி – 107 நாட்கள் வசூல் ரூ.1,27,783.51 ; வேலூர்-தாஜ் – 101 நாட்கள் வசூல் ரூ.1,20,629.60 ; திண்டுக்கல்-N.G.G.B. – 106 நாட்கள் வசூல் ரூ.1,00,726.40 ; கடலூர்-நியூசினிமா – 107 நாட்கள் வசூல் ரூ.94,724.59 ; பாண்டிச்சேரி-அஜந்தா – 107 நாட்கள் வசூல் ரூ.92,977.90 ; விருதுநகர்-ராதா – 100 நாட்கள் வசூல் ரூ.75,186.01 ; ஈரோடு-ராஜாராம் – 100 நாட்கள் ; கும்பகோணம்-டைமண்ட் – 108 நாட்கள் ; தர்மபுரி-கணேசா – 110 நாட்கள் ; பெங்களூர்-சாரதா&அபேரா – 133 நாட்கள் வசூல் ரூ. 3,98,640.75 ; ஊட்டி-A.T.C.-கலைமகள் – 104 நாட்கள் ; விழுப்புரம்-சீதாராம் – 100 நாட்கள் ; கரூர்-அஜந்தா – 106 நாட்கள் ; காஞ்சிபுரம்-ராஜா–முருகன் – 100 நாட்கள்.

இலங்கை - பிளாசா – 101 நாட்கள் ; கிங்சிலி - 101 நாட்கள் ; கொட்டி – 101 நாட்கள் ; பம்பாய்-திரோலி-அரோரா – 95 நாட்கள்.

1965ஆம் ஆண்டிலேயே அதிக வசூலாக 2கோடியே 15 லட்சம் ரூபாய் வசூல் பெற்ற சரித்திர சாதனை காவியம்.

நிறைவு

எம்.ஜி.ஆர். அதிக எண்ணிக்கையில் இரட்டை வேடங்களில் நடித்திருந்தாலும் ஒவ்வொரு படத்திலும் அவர் கவனம் செலுத்தி நடித்திருந்தார். எம்.ஜி.ஆர். தன்னுடைய சொந்தப்படம் மூன்றிலும் இரட்டை வேடமேற்று நடித்தது குறிப்பிடத் தக்கதாகும். இரட்டை வேடங்களில் ஆசைமுகம், கலையரசி, ராஜா தேசிங்கு தவிர மற்ற படங்கள் அனைத்தும் வண்ணப் படங்களே ஆகும். இரண்டு எம்.ஜி.ஆர்.களுக்கும் இடையில் தோற்றத்திலும் நடிப்பிலும் வேறுபாடு காட்டி ரசிகர்களின் மனத்தைக் கவரும் வகையில் இப்படங்களை எம்.ஜி.ஆர். உருவாக்கினார்.

2. இரட்டை வேடப் பாத்திரங்களில் எம்.ஜி.ஆர்.

அதிக எண்ணிக்கையிலான இரட்டைவேடப் படங்களில் நடித்த எம்.ஜி.ஆர். சகோதரராக நண்பராக முன் பின் அறியாதவராக என பல் பாத்திரங்களை ஏற்று நடித்திருந்தார்.


சகோதரரர்களாக இரட்டை வேடம்

எம்.ஜி.ஆர். பல படங்களில் உடன் பிறந்த சகோதரராக இரட்டை வேடம் பூண்டார்.. இராஜா தேசிங்கு, எங்க வீட்டுப் பிள்ளை, குடியிருந்த கோயில், உலகம் சுற்றும் வாலிபன், நீரும் நெருப்பும், நாளை நமதே, பட்டிக்காட்டு பொன்னையா ஆகிய படங்களில் உடன்பிறந்த சகோதரராகவும் நடித்தார். இவற்றில் குடியிருந்த கோயில் படத்தில் ஒட்டிப்பிறந்த இரட்டை சகோதரராகவும் அறுவை சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்டவர்களாகவும் நடித்திருந்தார். எங்க வீட்டுப் பிள்ளை படத்தில் இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்து வளர்ந்து வரும்போது ஒருவர் மட்டும் கோவில் விழா கூட்டத்தில் தொலைந்து போய் ருஷயேந்திரமணியிடம் வளர்ந்து வருபவராக

நடித்திருந்தார். நீரும் நெருப்பும் படத்தில் பகைவனுக்குப் பலியாகி விடக்கூடாது என்பதால் நாட்டுப்பற்றுள்ள நல்லவர்களிடம் வளர்ந்து வருபவராக நடித்திருந்தார். இராஜா தேசிங்கு படத்தில் இரண்டு தாய்மாருக்கு பிறந்த இரண்டு வெவ்வேறு பிள்ளைகளாக ஒரே தந்தையின் மக்களாக நடித்தார். நாளை நமதே படத்தில் மூத்தவர் இளையவர் என சகோதரர்களாக ஒருவர் கருப்பு, ஒருவர் சிவப்பு என்ற வித்தியாசத்துடன் நடித்தார்.

தந்தையும் மகனுமாக

அடிமைப்பெண் படத்தில் மட்டும் எம்.ஜி.ஆர். தந்தை மகன் என்ற இரண்டு கதாபாத்திரங்களில் நடித்தார். ஆனால் முதல் காட்சியிலேயே சண்டையில் தந்தை எம்.ஜி.ஆர். நெஞ்சில் வேல் பாய்ந்து இறந்து போய்விடுவதால் மகன் கதாபாத்திரம் மட்டுமே படம் முழுக்க நிறைந்திருந்தது. எம்.ஜி.ஆர். படங்களில் எங்க வீட்டுப் பிள்ளை, நான் ஆணையிட்டால் போன்றவற்றில் தந்தை எம்.ஜி.ஆரை படத்தில்



புகைப்படமாகக் காட்டும்போது எம்.ஜி.ஆருக்கு முதியவர் மேக்கப் போட்டு இருப்பது போல படம் வரையப்பட்டிருக்கும். ஆனால் ஒரு படத்திலும் அவர் தந்தை எம்.ஜி.ஆர். ஆக முதியவர் வேடத்தில் நடிக்கவில்லை. தேவரின் தயாரிப்பில் தந்தையும் மகனுமாக அவர் நடிக்க இருந்த ஒரு படம் பாதியிலேயே நின்று போயிற்று.

இரு வேறு மதங்களில் எம்.ஜி.ஆர்.

இராஜா தேசிங்கு மற்றும் சிரித்து வாழ வேண்டும் இரண்டு படங்களில் எம்.ஜி.ஆர். இந்து முஸ்லிம் என இரண்டு கதாபாத்திரங்களை ஏற்று நடித்திருந்தார். இவற்றில் இராஜா தேசிங்கில் சகோதரராகவும் சிரித்து வாழ் வேண்டும் படத்தில் அறியாத அந்நிய நபராகக்வும் நடித்தார்.

இராஜா தேசிங்கு படம் முன்னர் தெ. பொ. கிருஷ்ணசாமி பாவலரின் நாடக மன்றத்தில் நாடகமாக நடிக்கப்பட்ட கதையை கொண்டு



உருவாக்கப்பட்டது. இக்கதையில் செஞ்சியின் மன்னனுக்கு இரண்டு மனைவியர். மூத்தவர் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர். இளையவர் இந்து மதத்தைச் சேர்ந்தவர். மூத்த மனைவியைப் பற்றி எவருக்கும் தெரியவில்லை. அவருடைய மகன் ஆற்காட்டு நவாப்பிடம் பணியில் அமர்ந்து தளபதியாகப் பணிபுரிகிறான். டெல்லி பாதுஷாவின் குதிரையை அடக்க இயலாமல் அங்கு சிறைப்பட்டிருக்கும் செஞ்சி மன்னரை அவரது மகன் தேஜஸ் சிங் அக்குதிரையை அடக்கி விடுவிக்கிறான். அப்போது பாதுஷா செஞ்சிக்குச் சுதந்திர பட்டயம் அளிக்கிறார்.

தேசிங்கிடம் சுதந்திர பட்டயம் இருக்கும் வரை செஞ்சியை அடிமை கொள்ள முடியாது என்று நினைத்த ஆற்காட்டு நவாப் அப்பட்டையத்தை திருடிக் கொண்டு வரும்படி தாவூத் கானை அனுப்புகிறார். தாவூத்கான், தேசிங்கு போல மாறுவேடத்தில் வந்து இராணியாக நடித்த பானுமதியிடம் சுதந்திர பட்டயத்தை வாங்கிச் சென்று ஆற்காட்டு நவாபிடம் ஒப்படைத்து விடுகிறார். இதன்பிறகு ஆர்காடு நவாப் செஞ்சியின் மீது படை எடுக்கிறார். அப்போது தன்னிடம் இருந்த பட்டயத்தைக் காட்ட இயலாத காரணத்தால் போர்க்களத்தில் சகோதரர்கள் மோதுகின்றனர்.

நவாப்பின் தளபதியான தாவூத்கான் தன் தாயிடம் தன்னுடைய தந்தை யார் என்று கேட்ட போது தாயார் வேறு வழியில்லாமல் உண்மையை சொல்லிவிடுகிறார். அப்போது எக்காரணம் கொண்டும் உன்னால் உன் தம்பிக்கு அழிவு ஏற்படக்கூடாது என்ற வாக்குறுதியை

பெற்றுக்கொண்டு அவர் மரணமடைகிறார். இவருடைய பிறப்பின் ரகசியத்தை அறிந்து கொள்ளக் கூடாது என்றும் அறிந்து கொண்டால் அவன் தன் நாட்டை இவனிடம் கொடுத்து விடுவான் என்றும் அது நாட்டு மக்களுக்கு நல்லதல்ல என்றும் அந்த தாயார் தன் மகனுக்கு எடுத்துச் சொல்கிறார்.

போர்க்களத்தில் போரிடும் போது தாவூத் கானால் உண்மையைச் சொல்ல இயலாமல் 'என்னுடைய வாளால் நீ இறக்க வேண்டாம் போய் விடு' என்று தேசின்கிடம் கெஞ்சிக் கேட்டும் தேசிங்கு உண்மையை அறியாதவன் ஆதலால் தொடர்ந்து போரிடுகிறான். இடையே ஒரு தீயவனின் குத்துவாள் தாவூத் கானின் முதுகை குத்தித் துளைக்கிறது. அக் கயவன் 'இறந்து போனவன் உன் சகோதரன்' என்று தேசிங்கிடம் சொல்லவும் தேசிங்கும் வானத்தை நோக்கி தனது வாளை வீசி தன் நெஞ்சை காட்டி மரணம் அடைகிறான். இக்கதையில் இருவரும் வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து ஒருவரைப் பற்றிய உண்மை தேசிங்குக்கு தெரியாது நல்ல கதையம்சம் கொண்ட படமாக இருந்தும் இப்படத்தில் இரண்டு எம்.ஜி.ஆறும் செத்துப் போவதால் படம் பெரிய வெற்றியைப் பெறவில்லை. அதனால் இருவரும் மரணம் அடைவதாக கதை படம் நிறைவுற்றது. இப்படத்தை ரசிகர்கள் விரும்பி பார்க்கவில்லை. எனவே படம் வெற்றிப்படமாக அமையவில்லை.

சிரித்து வாழ வேண்டும் படத்தில் இந்து வேடத்தில் ராம் என்ற பெயரிலும் முஸ்லிம் வ்பெடத்தில் அப்துல் ரகுமான் என்ற பெயரிலும்

வித்தியாசமான நடிப்பை எம்.ஜி.ஆர். காட்டினார். . ஆரம்பத்தில் இருவருக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் முதல் சில காட்சிகளிலேயே கருத்து வேறுபாடு மறைந்து இருவரும் விரைவில் நண்பர் ஆகிவிடுவார்கள். மேலும் இருவருமே நல்லவராக இப்படத்தில் நடித்திருந்தனர். ஒருவருக்கொருவர் உதவி செய்பவராகவும் ஒருவரை ஒருவர் ஆதரிப்பவராகும் நடித்திருந்ததனால் இந்து, இஸ்லாமிய வாக்குகளை இப்படம் இரு தரப்பினரிடம் இருந்தும் ஏராளமான வாக்குகளை அண்ணா திமுகவுக்கு பெற்றுத் தந்தது. அண்ணா திமுக கட்சி தொடங்கிய பின்பு வெளிவந்த படம் என்பதனால் இஸ்லாமியர்களின் வாக்கு வங்கி அதிகரிக்கவும் பேருதவி புரிந்தது.

உலகம் சுற்றும் வாலிபன் படப்பிடிப்பினால் தாய்லாந்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் எம்.ஜி.ஆர். பற்றிய உயர்வான என்னத்தை தனக்ளின் உறவினர்கள் மத்தியில் பரப்பியதால் தமிழகக் கடற்கரையோர மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் எம்.ஜி.ஆரின் மீது மிகுந்த பாசம் கொண்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து சிரித்து வாழ வேண்டும் படத்தில் எம்.ஜி.ஆர். கீழக்கரையில் வாழும் அவருடைய நண்பரான அப்துல்ரகுமானின் பெயரை வைத்துக்கொண்டு நடித்த போது அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் எம்.ஜி.ஆர். மீது மிகுந்த அன்பும் பாசமும் கொண்டவர்களாக மாறிவிட்டனர். இதனால் திமுகவிடம் இருந்த இஸ்லாமிய வாக்கு வங்கி அண்ணா திமுகவுக்கு மாறியது குறிப்பிடத்தக்கது.

ஒருவர் கதாநாயகன் மற்றவர் வில்லன்

இரட்டைவேடக் கதாபாத்திரம் ஏற்று நடித்த படங்களில் இரண்டு படங்களில் மட்டும் ஒரு எம்.ஜி.ஆர். இன்னொரு எம்.ஜி.ஆருக்கு வில்லனாக தோன்றினார். நீரும் நெருப்பும் படத்தில் மணிமாறன் என்ற சிவப்பு எம்.ஜி.ஆருக்கு கரிகாலன் என்ற கருப்பு எம்.ஜி.ஆர். வில்லனாக வருவார். மணிமாறன் காதலிக்கும் ஜெயலலிதாவை கரிகாலனும் காதலிப்பார். அதற்கு அவருடைய பிறப்புக் குறைபாடு ஒரு காரணமாகக் காட்டப்பட்டது. ஆனால் உண்மையில் அப்படி ஒரு குறைபாடு இருப்பதாக எவரும் அறிந்திராத காரணத்தினால் சகோதரனின் காதலியை இளையவர் காதலிப்பதையும் அதற்காக சகோதரனுடன் சண்டை போடுவதையும் ரசிகர்கள் ரசிக்கவில்லை. எம்.ஜி.ஆருடைய படங்கள் உயர்ந்த ஒழுக்கமும் கட்டுப்பாடும் போதித்த படங்களாக இருந்த காரணத்தினால் இதுபோன்ற ஒழுக்க மீறல்கள் இடம்பெற்ற படங்களை ரசிகர்கள் வெற்றிப்படங்களாக ஆக்கவில்லை.



இராஜாதேசிங்கு படத்திலும் இஸ்லாமிய சகோதரர் தாவூத் கான் தந்து தம்பி தேசிங்குக்கு வில்லனாக வந்து அவரோடு போர்க்களத்தில் நேருக்கு நேர் மோதுகிறார். இவ்விரு படங்களும் ரசிகர்களிடம் பெரிய ஆதரவைப் பெறவில்லை. இரட்டை வேடப் படங்களில் எம்.ஜி.ஆர். தனது சகோதரரைக் காப்பாற்றிய படங்கள் வெற்றி வாகை சூடின. ஆனால் சகோதரரிடம் பகை கொண்ட படங்கள் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெறவில்லை.

ஒருவரின் இடத்தில் இன்னொருவர்

எம்.ஜி.ஆர். இரட்டை வேடம் பூண்ட படங்களில் ஒரு எம்.ஜி.ஆருக்குப் பதிலாக இன்னொரு எம்.ஜி.ஆர். முதலாமவர் இடத்திலிருந்து அவர் ஆற்ற வேண்டிய கடமைகளை செய்து முடிக்கும் கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். நாடோடி மன்னன், எங்க வீட்டுப் பிள்ளை, குடியிருந்த கோயில், ஊருக்கு உழைப்பவன் ஆகிய படங்களில் இது போல கதையமைப்பு உள்ளது. .

நாடோடி மன்னன் படத்தில் மார்த்தாண்ட மன்னனுக்கு மயக்கமருந்து கொடுத்து அதனால் அவர் மயங்கி விழுந்து விடுகிறார். அவர் மகுடாபிஷேகத்துக்கு வந்து மன்னனாக மகுடம் சூட்ட இயலாத நிலையில் இருக்கிறார். இவ்வேளையில் ராஜகுரு தனக்கு கைப்பாவையாகத் திகழும் பிங்கலனுக்கு [நம்பியாருக்கு] மகுடம் சூட்டி மன்னராக்கி விடுவாரே என்ற கவலையில் நாட்டின் நலனில் அக்கறை கொண்ட தளபதியும் அமைச்சரும் நாடோடியாகத் திரியும் வீராங்கனின் உருவ ஒற்றுமையை வைத்து அவனை இரண்டொரு

நாட்களுக்கு மன்னனாக முடிசூட்டி வைத்திருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். வீராங்கனிடம் இதைப்பற்றி கூறும்போது அவன் அதிகாரம் இல்லாத அரச பதிவு தனக்கு தேவையில்லை எத்தனை நாள் இருந்தாலும் அத்தனை நாளும் நான் முழு அதிகாரம் படைத்த மன்னன் ஆகத்தான் இருக்க வேண்டும் என்கிறான், சரி என்று தற்சமயத்துக்கு ஒத்துக்கொண்டு இருவரும் அவனது தாடியை எடுத்துவிட்டு அவனுக்கு மன்னரது மேனரிசத்தைக் கற்றுக்கொடுத்து அவனை வேகமாக அழைத்துச் சென்று அவனுக்கு மகுடம் சூட்டுகின்றனர்.



வீராங்கன் மார்த்தாண்ட மன்னராக மகுடம் சூட்டிய பின்பு பல நல்ல திட்டங்களை மன்னர் அறிவிக்கிறார், அவருடன் இணைந்து நற்பணிகளில் அரசி மனோகரியும் தன் பங்குக்கு பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பல நலத் திட்டங்களை அறிவிக்கின்றார் மக்கள் மகிழ்கின்றனர். இக்காட்சியை நினைவூட்டும் வகையில் படம் வந்து 20 ஆண்டுகள் கழித்து எம்.ஜி.ஆர். 1977 இல் முதலமைச்சரான போது கவர்னர் முன்னிலையில் சம்பிரதாய முறையில் பதவி ஏற்ற பிறகு சென்னை அண்ணாசாலையில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் ஏறி நின்று மக்கள் முன்னிலையில் உரையாற்றிய நிகழ்ச்சி அமைந்தது. . அப்போது அவர் பேசியதற்கும் இப்படத்தில் வந்த காட்சிக்கும் மிகுந்த ஒற்றுமை காணப்பட்டது. இப்படத்தில் நடிக்கும்போது அவருக்கு தான் முதலமைச்சராக வருவோம் என்ற எண்ணம் கிடையாது. அதற்கான வாய்ப்பும் இல்லை. ஆனால் இருபது ஆண்டுகள் கழித்து அவர் படத்தில் நடித்தவை எல்லாம் நிஜமாக நடந்ததைக் கண்டு மக்கள் அதிசயித்தனர். அவரை ஒரு தீர்க்கதர்சியாகவும் தெய்வப் பிறவியாகவும் உணர்ந்தனர்.

எங்க வீட்டுப் பிள்ளை படத்தில் ராமுவின் வீட்டில் வந்து சேர்ந்த இளங்கோ சில முக்கிய கடமைகளை நிறைவேற்றுவார். பயந்தாங்கொள்ளியாக வரும் ராமு தன் அக்காள் கணவர் நம்பியாரிடம் சாட்டை அடி வாங்கி வாங்கி வேதனைப்பட்டு மனம் நொந்து எங்கேயாவது போய் கிணற்றில் குளத்தில் குதித்து இறந்து போய் விட வேண்டும் என்று நினைக்கிறார். சவுக்கு அடிக்கு பயந்து வீட்டை விட்டே வெளியேறி விடுகிறார்.

அப்போது அவரிடத்தில் இளங்கோ வந்து சேர்ந்து நம்பியாரின் கொட்டத்தை அடக்கி அவர்களின் நிறுவனத்தில் தொழிலாளர்களுக்கு உரிய சலுகைகளை வழங்கி எஸ்டேட் மக்களின் நன்மதிப்பைப் பெறுகிறார்.

இரண்டு வகையான குணாதிசயம் கொண்ட பாத்திரம் என்பதால் எம்.ஜி.ஆர். மிகச் சிறப்பாக இரண்டு வேடங்களையும் செய்திருப்பார். ராமுவை அடித்த காரணத்தால் எம்.ஜி.ஆர். இரசிகர்கள் நம்பியார் மிது உண்மைக் கோபம் கொண்டிருந்ததும் உண்டு. படத் தயாரிப்பாளர் நாகி ரெட்டியாரின் விட்டில் போய் சத்தம் போட்டதும் உண்டு. ஒரு முறை பொதுக் கூட்ட மேடையில் எம்.ஜி.ஆரை நெருங்கி சென்று போய் பார்த்த ஒரு பாட்டி ‘அந்த நம்பியார் பயலிடம் ஜாக்கிரதையாக இருப்[பா’ என்று அவருக்கு அறிவயுரையும் எச்சரிக்கையும் கொடுத்தார். எம்.ஜி.ஆரும் சிரித்தபடியே சரிம்மா என்று பதிலளித்தார். ராமு எம்.ஜி.ஆர். அடி வாங்கும்





போது கொந்தளித்த இரசிகர் கூட்டம் இளங்கோ எம்.ஜி.ஆர். பதிலுக்கு நம்பியாரை சாட்டையால் வெளுக்கும் போது கை தட்டி இரசித்து மகிழ்ந்து ஆரவாரிப்பதை திரையரங்கில் காணலாம். அது படம் என்பது தெரிந்திருந்தாலும் கூட எம்.ஜி.ஆர். நடிப்புக்காக கூட மற்றவரிடம் அடி படுவதை அவரது இரசிகர்கள் விரும்புவதில்லை.

குடியிருந்த கோயில் படத்தில் மென்மையான மேடை பாடகனாகவும் கொடூரமான கொள்ளைக்காரனாகவும் இரண்டு மாறுபட்ட வேடங்களில் எம்.ஜி.ஆர். நடித்தார். மக்களால் அதிகளவில் இப்படம் ரசிக்கப்பட்டது. இந்தப் படத்திலும் பாடகனாக வரும் ஆனந்த பயந்த சுபாவம் கொண்டவர். கொள்ளைகாரனாக வரும் சேகர் அஞ்சாத நெஞ்சம் கொண்ட முரடர். இரண்டு கதாபாத்திரங்களையும் எம்.ஜி.ஆர். மேக்கப் முதல் நடை உடை பாவனை வரை பல வித்தியாசங்களைக் காட்டி சிறப்பாகச் செய்திருந்தார்.

வங்கிக் கொள்ளையில் ஈடுபடும் கொள்ளைக்காரன் சேகர் கார் ஓட்டிக் கொண்டு வரும்போது கார் உருண்டு விபத்துக்குள்ளானதில் அவனுக்கு புத்தி பேதலித்து விடுகிறது. இத்தருணத்தில் போலீஸ் அதிகாரியாக வரும் மேஜர் சுந்தர்ராஜன் சேகரைப் போலவே இருக்கும் ஆனந்தைக் கொண்டு சேகரின் கொள்ளைக்கூட்டத் கூட்டத்தின் ரகசியங்களை அறிய விரும்புகிறார். அதற்காக ஆனந்துக்கு கருப்பு மேக்கப் போட்டு சேகர் அணிந்திருக்கும் கழுத்து பட்டை, அவரைப்போன்ற முழுக்கை சட்டை தலைமுடி எல்லாவற்றையும் அமைத்து ஆனந்தைக்

கொள்ளைக் கூட்டத்தாரிடம் அனுப்பி வைக்கிறார். அங்கிருந்து தகவல்களை போலீஸ் அதிகாரிக்கு இரகசியமாக தரும் ஆனந்த் ஒருகட்டத்தில் தன் காதலியிடமும் தன் அம்மாவிடமும் மாட்டிக்கொள்கிறார். பிறகு உண்மையை அவர் சொல்லியதும் ஆனந்தின் அம்மா ‘அது சேகர் அல்ல உன் உடன் பிறந்த சகோதரன் பாபு’ என்று கூறி அவர்களை பிரித்தெடுக்க செய்த அறுவை சிகிச்சையின் தழும்பையும் ஆதாரமாகக் காட்டுகிறார். இந்த உண்மை சேகருக்குத் தெரிந்ததும் உடனே சேகர் தன்னைத் திருடனாக வளர்த்த நம்பியாரிடம் சென்று தான் யார் என்ற உண்மையை அடித்துக் கேட்டுத் தெரிந்து கொண்டு அந்தக் கொள்ளைக் கூட்டத்தைப் பிடிப்பதில் தானும் தன் தம்பிக்கு உறுதுணையாக இருக்கிறார்.

ஊருக்கு உழைப்பவன் படத்தில் கணவர் இல்லாத சூழ்நிலையில் மனைவி சித்தம் கலங்கி துடிக்கும்போது அவரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இப்பெண்ணின் கணவரைப் போலவே தோற்றமளிக்கும் செல்வத்தை அழைத்து அவரிடம் இளம் தாயையும் சிறுமியையும் கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. இவ்வாறு இன்னொரு வீட்டில் குமாருக்கு பதிலாக செல்வம் வந்து தங்கி இருக்கும்போது செல்வத்தின் மனைவியும் குழந்தையும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். செல்வம், குமார் திரும்பி வந்ததும் அவரது மனைவியையும் குழந்தையையும் ஒப்படைத்து விட்டு தன் மனைவியோடு புறப்பட்டுச் செல்வதாக படம் முடிவடையும். மற்ற இரட்டை வேடப் படங்களை போல ஊருக்கு உழைப்பவன் படம் பெரிய வெற்றியைப் பெற்றுத் தரவில்லை.

இரண்டு வேடங்களிலும் எம்.ஜி.ஆருக்கு மனைவி குழந்தை இருந்ததும் அதில் ஒரு குழந்தையைக் காப்பாற்றப் போய் இவரது சொந்தக் குழந்தை இறந்துபோனதும் ரசிகர்களைக் கவரவில்லை. சொந்தக் குழந்தையைக் காப்பாற்ற இயலாத ஹீரோ என்ன ஹீரோ என்று ரசிகர்கள் கருதினர். இதனை ஒரு பேட்டியில் ஒரு பெண் ரசிகை குறிப்பிட்டார். இதனால் இப்படத்தை தான் ஒரு முறைக்கு மேல் மறு முறை பார்க்கவில்லை எனத் தெரிவித்தார்.

இருவரில் ஒருவர் மரணம்

அடிமைப் பெண் படத்தில் அப்பாவாக வரும் எம்.ஜி.ஆர். படத்தின் ஆரம்பத்தில் தன் மனைவியின் மீது ஆசைப்பட்ட அசோகனை, மனைவி தன் அருகில் இருந்த கோடாரியை கொண்டு வெட்டியதால் அவன் ஒற்றைக் காலோடு இருப்பதைக் கண்டு அவனோடு போரிடும்போது தானும் ஒரு காலை மடித்து கட்டிக்கொண்டு வாள் சண்டை இடுகிறார். வலையின் மீது குதித்து குதித்து ஒற்றைக் காலோடு சண்டையிடுவதாக இச் சண்டைக் காட்சி படம் பிடிக்கப்பட்டு இருந்தது. அசோகனும் எம்.ஜி.ஆரும் பங்குபெறும் இச் சண்டைக் காட்சி படத்தின் தொடக்கத்தில் வந்தது. அந்த சண்டையிலேயே அப்பா என்கிற எம்.ஜி.ஆர். இறந்து போய்விடுவார். இருப்பினும் சண்டைக்காட்சி ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. வலையில் ஒற்றை காலில் நொண்டி நொண்டி குதித்து குதித்து சண்டை போடுவது மிகவும் சிரமமானது என்பதனால் ரிஸ்க் எடுத்து அந்த இச் சண்டைக்காட்சியில் இருவரும் நடித்திருந்தனர்.

இக்காட்சி இரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

கலையரசி படத்தில் சந்திரமண்டலத்தில் இளவரசனாக நடிக்கும் எம்.ஜி.ஆர். எரி நட்சத்திரம் எரிந்து விழுந்து அதில் கருகி இறந்து போவார். ஆனால் அதற்கு முன்பு அவர் இந்தியாவின் பெருமைகளைப் பற்றி சந்திரமண்டலத்தில் ஒரு அற்புதமான பாடலை [அதிசயம் கண்டேன் மண்ணிலே] இசைக் கருவியை இசைத்தபடி பாடுவார். சந்திரமண்டலத்தில் புவியீர்ப்பு சக்தி இல்லாத காரணத்தினால் நடக்கும்போது இவர் பறந்து பறந்து செல்வது போன்ற காட்சிகள் எடுக்கப்பட்டிருக்கும். இப்படம் வெளிவந்த போது இக்காட்சிகள் வேடிக்கையாகத் தோன்றினாலும் 1967 இல் சந்திரனில் ஆம்ஸ்ட்ராங், ஆல்டரின் ஆகியோர் தரையிறங்கிய போது அவர்களுடைய அசைவுகள்



காட்டப்பட்டபோது இப்படத்தில் வந்த காட்சி உண்மை என்பது பின்னர் மக்களுக்குத் தெரிந்தது.

நிறைவு

எம்.ஜி.ஆர். இரட்டை வேடப் படங்களில் தனக்கு நடிக்க வாப்பு இருக்கும் கதாபாத்திரங்களை தெரிவு செய்வார். இந்திப்படங்களில் இருவர் நடித்த கதாபாத்திரங்களில் தமிழில் எம்.ஜி.ஆர். ஒருவரே நடித்தது சிரித்து வாழ் வேண்டும் மற்றும் நாளை நமதே படங்களில் நிகழ்ந்தது. ஒப்பனையில் மிகவும் கவனம் செலுத்துவார். சில படங்களில் தாடி வைத்து வித்தியாசம் காட்டினாலும் நடை உடை ‘விக்’, ‘மேனரிசம்’ ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்துவார். தனக்கு மாற்றாக வரும் ‘டுப்’ [dupe] போடும் நடிகருக்கும் தனக்குச் செய்த அதே ஒப்பனையைப் போல மிகவும் கவனமாக செய்யும்படி சொல்வார். தனக்கு *dupe* ஆக வரும் ராமகிருஷ்ணன்னுக்கு தனது தொப்பியில் இருக்கும் குஞ்சம் அவருக்கு இல்லை என்பதைக் கண்டுபிடித்துச் சொல்லி அதை உடனே வைக்கும்படி நீரும் நெருப்பும் படப்பிடிப்பின் போது எம்.ஜி.ஆர். கண்டித்துக் கூறினார். தனக்கு நடிக்க வாய்ப்பிருக்கும் கதாபாத்திரங்களை நடிப்பதற்காகவும் நடிப்பில் வித்தியாசம் காட்டவும் எம்.ஜி.ஆர். இரட்டை வேடப் படங்களைப் பயன்படுத்திக் கொண்டார்.

3. இரண்டு எம்.ஜி.ஆர்களின் சந்திப்பு

எம்.ஜி.ஆர். நடித்த இரட்டை வேடப் படங்களில் இரண்டு எம்.ஜி.ஆரும் நேருக்கு நேர் சந்திக்கும் காட்சி மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கும். இக்காட்சி ரசிகர்கள் ஆச்சரியத்துடன் பார்க்கப்படுவதால் இக்காட்சியில் வசனம் பாடல் நடிப்பு ஆகியவை தொழில்நுட்ப சிறப்புகள் காணப்பட்டும். எம்.ஜி.ஆர். படம் எடுத்த காலத்தில் இரட்டை வேடக் காட்சிகளை 'மாஸ்க் ஷாட்' மூலமாக எடுப்பது வழக்கம். முதல் எம்.ஜி.ஆர். உட்கார்ந்து இருக்கும்பொழுது அவர் உட்கார்ந்திருக்கும் காட்சியை எடுத்துவிடுவர். பின்னர் அந்த காட்சி பதிவான பகுதியை [நாற்காலி பகுதியை] கேமரா லென்ஸ் இல் கருப்பு பேப்பரால் மறைத்துவிட்டு மீண்டும் ஃபிலிமை பழைய இடத்துக்குக் கொண்டு சென்று அவர் உட்கார்ந்திருந்த காட்சி வந்ததும் இன்னொரு வேடத்தில் வரும் எம்.ஜி.ஆரைச் சுற்றி நடக்க வரச் செய்து படம் எடுத்துகொள்வர்.

இரண்டு எம்.ஜி.ஆர். இரண்டு பக்கம் அல்லது எதிர் எதிரே நின்று பேசுவதாகக் காட்சி எடுத்தால் வலதுபுறம் நிற்பவரை முதலில் எடுத்து விட்டு பிறகு

அந்த பகுதியில் ஒரு கருப்புக் காகிதத்தை ஒட்டி மறைத்துவிட்டு இடதுபுறம் நிற்பவர் காட்சிகளை பின்பு படம் எடுப்பர். அதன்பிறகு இரண்டையும் சேர்த்து நமக்குக் காண்பிப்பர்.

ஒரே காட்சியில் இருவரும் கட்டிப்பிடிப்பதாகவோ கன்னத்தைத் தடவுவதாகவோ கை கொடுப்பதாகவோ வரும் போது எம்.ஜி.ஆருடன் இரண்டாவது வேடமாக நடிப்பவர் பெரும்பாலும் கே பி ராமகிருஷ்ணன் அல்லது சங்கர் ஆவார். நீரும் நெருப்பும், சிரித்து வாழ வேண்டும் போன்ற படங்களில் அவரே சண்டை காட்சியிலும் வசனக் காட்சியிலும் கட்டித் தழுவும் காட்சியிலும் இரண்டாவது வேடத்தை ஏற்றிருந்தார்.

எம்.ஜி.ஆரின் முகம் தெரியும் காட்சியில் எம்.ஜி.ஆரும் அவரைக் கட்டித்தழுவி நிற்கும் அடுத்த எம்.ஜி.ஆரின் உடம்பு பகுதி தெரியும்போது இரசிகர்கள் பார்ப்பது இராமகிருஷ்ணனின் உடம்பாகவும் இருக்கும். சண்டைக் காட்சியில் இந்த ஆள் மாற்று வித்தையைக் எம்.ஜி.ஆர். கவனமாகச் செய்திருப்பார். சண்டைக்காட்சியின் விறுவிறுப்பு குறையாதபடி அதே வேளையில்; காட்சியில் இரண்டு எம்.ஜி.ஆரும் நேருக்கு நேர் மோதுவதாக இரசிகர்கள் உணரும்படி தத்ருபமாகவும் எடுத்திருப்பார். கேமரா தொழில்நுட்பம் பற்றி எம்.ஜி.ஆருக்கு சிறப்பான அறிவு இருந்த காரணத்தினால் அவர் இரட்டை வேடங்களில் நடிப்பதைத் திறமையாகவும் சிறப்பாகவும் செய்தார். கேமராவையும் மிகச் சிறப்பாக கையாண்டார். எடிட்டிங் அவருக்கு நல்ல பயிற்சி

இருந்த காரணத்தால் அவர் படத்தொகுப்பில் தொகுப்பினைச் சிறப்பாக செய்து தொய்வு விழாமல் படத்தை விறுவிறுப்பாக கொண்டு சென்றார். இதனால் இரட்டை வேடங்களில் எம்.ஜி.ஆர். இருவரும் சந்திக்கும் காட்சிகள் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன.

நாடோடி மன்னன், குடியிருந்த கோவில், மாட்டுக்கார வேலன், ஆசைமுகம், நாளை நமதே, சிரித்து வாழவேண்டும், ஊருக்கு உழைப்பவன், இராஜா தேசிங்கு ஆகிய படங்களில் இருவரும் நேருக்கு நேர் சந்திக்கும் காட்சிகள் இடம் பெற்றன. இவற்றில் நாடோடி மன்னன் படத்தில் ஒருவர் நாற்காலியில் அமர்ந்திருக்க மற்றொருவர் அவரை சுற்றி வருவது போன்ற காட்சி அக்காலத்தில் பெரும் வியப்பை ஏற்படுத்தியது குடியிருந்த கோயில் படத்தில் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவும் காட்சிகள் இடம் பெற்றன.

சந்திப்பின்போது

நாடோடி மன்னன் படத்தில் நாடோடி வீராங்கனை எம்.ஜி.ஆர். என்றும் மன்னன் என்று நினைத்து பிடித்துக்கொண்டு அழைத்துக் கொண்டு வந்து விடுகின்றனர். அரண்மனைக்கு வந்ததும் அவரது தாடியைப் பிடித்து விளையாட்டாக இழுக்கும்போது உண்மையான மார்த்தாண்டன் வந்து,

''இது என்ன விளையாட்டு ஏன் அவரை துன்புறுத்துகின்றீர், விட்டு விடுங்கள்'' என்கிறார். பிறகு இருவரும் பேசுகின்ற அழகான ஒரு உரையாடல் கருத்துக்கு வலு சேர்க்கின்றது. மன்னர்



ஏதுமறியாதவறாக இருப்பதை உணர்த்தும் வகையில் இந்த உரையாடலின் பங்கு அமைந்திருக்கும் மேலும் மக்களாட்சி தத்துவத்தை வலியுறுத்தும் வகையில் மக்களில் ஒருவனே மன்னரால் அவனுக்கு இந்த மக்களின் துன்பங்களை தீர்க்கக்கூடிய அறிவும் வாய்ப்பும் வழங்கப்படுகிறது என்ற கருத்தும் வலியுறுத்தப் பட்டிருக்கும்.

வீராங்கனை அழைத்து உட்காரவைத்து மார்த்தாண்டன் உரையாடுவதாக இச்சந்திப்பு நிகழ்கிறது

மார்த்தாண்டன் : *எதற்காக புரட்சி? யாரை எதிர்த்து புரட்சி?*

வீராங்கன் : *உங்கள் ஆட்சியை எதிர்த்து, சர்வாதிகாரமுறையை ஒழிப்பதற்கு*

மார்த்தாண்டன் : *அப்படியானால் என்னை ஒழித்துவிடப்போகிறீர்களா?*

வீராங்கன் : *எங்கள் இலட்சியம் ஆளை ஒழிப்பதல்ல மன்னராட்சியை ஒழித்து, மக்களாட்சியை ஏற்படுத்துவது.*

மார்த்தாண்டன் : *நானும் மக்களில் ஒருவர்தானே, நானே ஆட்சி செய்தால் என்ன?*

வீராங்கன் : *மக்களில் ஒருவர்தான் நீங்கள், ஆனால் மக்களின் நிலை அறியாதவர். ஏழைகள் இந்த நாட்டை ஆளவேண்டும் என்கிறோம் நாங்கள்.*

மார்த்தாண்டன் : *அது எப்படி முடியும். விவசாயிக்கு உழத்தெரியும், வியாபாரிக்கு தொழில் தெரியும், அரசனுக்குத் தானே ஆளத்தெரியும்.*

வீராங்கன் : *அப்படித்தான் மக்கள் இதுவரை நம்பி வந்தார்கள். ஆனால் விதிக்கப்படும் கொடிய வரிகளும், கொடுக்கப்படும் சவுக்கடிகளும் மன்னராகிய நீங்கள் வாழத்தெரிந்தவர்களே தவிர ஆளத்தெரிந்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்துவிட்டார்கள்.*

மார்த்தாண்டன் : *மக்கள் அவ்வளவு கஷ்டப்படுகிறார்களா? வெளிநாடுகளிலெல்லாம் மக்கள் எவ்வளவு சந்தோசமாக வாழ்கிறார்கள் தெரியுமா? அது மாதிரிதான் நம் நாடும் இருக்கும் என்றல்லவா நினைத்தேன்.*

வீராங்கன் : *பாத்திரம் நிறைய பாலைக்கண்டு பழகிய உங்களுக்கு சாக்கடை நடுவே வாழும் மக்களின் நிலை புரியாது என்றால் ஆச்சரியப்படுவதிற்கில்லை. இரண்டாயிரம் ஆடைகளில் எதை அணிவது என்று புரியாது திண்டாடும் நீங்கள், ஏதாவது ஒரு ஆடை இருந்தால் மானத்தை மறைக்கலாமே என்று ஏங்கும்*

ஏழைகளைப் பற்றி எப்படி அறிந்து கொள்ள முடியும். இங்கே தாதிகள் பட்டு விரிக்கிறார்கள், நீங்கள் நடந்து போகிறீர்கள், அங்கே காலில் குத்திய முல்லில் பாதியை உடைத்தெரிந்துவிட்டு வாழ்க்கையை கடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள் ஏழை மக்கள். அவர்களில் நீங்களும் ஒருவர் என்றால் நாங்கள் எப்படி நம்புவது.

மார்த்தாண்டன் : *வீராங்கா நீ சொல்வதெல்லாம் எனக்கு நன்கு புரிகிறது. நானும் உங்கள் புரட்சி கூட்டத்தில் சேர்ந்துவிடுகிறேன். அப்போதாவது என்னையும் உங்களில் ஒருவன் என நம்புவீர்களா?*

வீராங்கன் : *நீங்களா!!!!! சிரிப்பு,*

மார்த்தாண்டன் : *ஏன் இப்படி சிரிக்கிறாய்?*

வீராங்கன் : *நீங்களும் எங்களுடன் சேர்ந்துவிட்டால் நாங்கள் யாருடைய ஆட்சியை எதிர்த்து போராடுவது.*

மார்த்தாண்டன் : *ஓ!!! அதுவா? மந்திரி, தளபதி, இராஜகுரு, பிங்கலன், அரண்மனை, அதிகாரம் எல்லாவற்றையும் எதிர்த்து போராடுவோம், ம் இது வேண்டாம் இப்படி செய்வோம் இன்றுமுதல் நீ என்னுடனேயே இருந்துவிடு. நாளை நான் முடிசூட்டிக் கொள்ளப்போகிறேன். அதன்பிறகு என்னை யாரும் எதுவும் கேட்க முடியாது. நீ என்னென்ன சட்டங்கள் எழுதித்தருகிறாயோ அதில் நானே கையெழுத்துப் போடுகிறேன், எப்படி?*

வீராங்கன் : *மன்னா நீங்கள் இவ்வளவு நல்லவரா? மன்னா! எங்கள் விருப்பம் உங்களாலேயே*

நிறைவேறும் என்றால் உங்கள் பாதத்தை எங்கள் தலைமேல் தாங்க தயாராக இருக்கின்றோம்.

மார்த்தாண்டன் : *ம், சரியான ஆளப்பா நீ, எந்த பேச்சையும் உன் விருப்பத்தை நிறைவேற்றுவதிலேயே கொண்டுவந்து முடிக்கிறாய். ம், (சிரித்துக் கொண்டே) இனிமேல் நீ தான் நான், நான்தான் நீ (என்று கூறி கையை நீட்டிக்கொண்டே) இன்னும் உனக்கு நம்பிக்கை வரவில்லையா, சரியான சந்தேகப் பேர்வழியப்பா நீ.*

படத்தின் கடைசியில் மன்னன் மார்த்தாண்ட சிறைப்பட்டிருந்த அறைக்குள் வெள்ள நீர் புகுந்தது. அவனைக் காப்பாற்றி அவனைத் தூக்கிக்கொண்டு வரும் காட்சியில் வீராங்கனும் மார்த்தான்டனும் இடம் பெறுவார்..

நான் யார்? நான் யார்?

குடியிருந்த கோயில் படத்தில் இருவரும் சந்திக்கும் காட்சியில் வசனம் குறைவாக இடம்பெறும். ஆனால் சிறப்பான நடிப்பும் அருமையான பாடல் காட்சியும் இடம் பெற்றிருக்கும். தன் மகளைக் காதலிக்கு ஒரு கூத்தாடிக்கு தகுதி இல்லாத காரணத்தால் அவனுக்குப் பெண்ணை திருமணம் செய்து தர மாட்டேன் என்று ஒரு தந்தை காவல் நிலையத்தில் வந்து புகார் செய்யும் போது அங்கு நடந்த கூச்சலை கேட்டு வந்த போலீஸ் அதிகாரி ஆனந்த் என்ற அந்தக் காதலனைப் பார்த்து நீ உள்ளே வா என்று அழைத்து செல்லும் பொழுது அவன் மிகவும் பயந்து நடுங்குகிறான். ஆனால் பிறகு தான் தெரிகிறது அவனைப்போலவே உள்ளே ஒரு முரடன் சிறைவைக்கப்பட்டிருக்கிறான். அவன் தன்னை

போன்ற தோற்றத்துடன் ஆனால் முரட்டு சுபாவத்துடன் மாறுபட்ட நடை உடை பாவனையுடன் இருப்பது கண்டு இவன் யார் என்று கேட்கிறான். அதற்கு அந்த போலீஸ் அதிகாரி 'அவனுக்கு சித்தபிரமை' என்று சைகை காட்டுகிறார்.இவ்வாறு இரண்டு எம்.ஜி.ஆர்.களின் சந்திப்பு இப்படத்தில் காட்டப்படுகிறது.

சிறையில் இருக்கும் முரடன் தான் அப்போது தான் யார் என்று தெரியாத வேதனையிலும் கோபத்திலும்

"நான் யார் நான் யார் நீ யார்

நாலும் தெரிந்தவர் யார் யார்

தாய் யார் மகன் யார் தெரியார்

தந்தை என்பார் அவர் யார் யார்

நான் யார் நான் யார் நீ யார் ஹாஹ...

உறவார் பகையார் உண்மையை உணரார்

உனக்கே நீ யாரோ ?

வருவார் இருப்பார் போவார் நிலையாய்

வாழ்வார் யார் யாரோ ?"

என்ற பாடி வருந்துகிறான். தனக்குப் பசிக்கிறது என்று தட்டை ஏந்தி உணவு கேட்கிறான். அவர் தட்டை தன் கன்னத்தோடு வைத்திருக்கும் காட்சி படகோட்டி எம்.ஜி.ஆர். மீனவர்களின் பசியைப் போக்க வழி இல்லாது இருக்கும் காட்சியில் துக்கத்தோடு பாடும் நிலையை ஒத்திருக்கின்றது.

இந்த பாடல் காட்சியில் இன்னொரு விசேஷ அம்சம் என்னவென்றால் அந்த முரடன் அவனுக்கு சிகிச்சை தரும் மருத்துவரை நோயாளி போலக் கட்டிலில் படுக்க வைத்துவிட்டு அவனுக்கு சிகிச்சை அளிப்பது போல் பாவனை செய்துவிட்டு சிகிச்சை பலனளிக்காமல் அவர் இறந்து போனதாகவும் அவரைச் சுற்றி வந்து வணங்கி அவருக்கு அஞ்சலி செலுத்துவதாக பாவனை செய்து நடித்திருப்பது வேடிக்கையாகவும் வினோதமாகவும் இருந்தது. இக்காட்சிக்கு திரையரங்கில் பலத்த கை தட்டலும் ஆரவாரமும் கேட்கும். இது இரசிகர்களின் உள்ளத்தை கவர்ந்த ஒரு காட்சியாகும்.

திமுகவில் உறுப்பினராகவும் ஆதரவாளராகவும் இருந்து வந்த எம்.ஜி.ஆர். இப்பாட்டில் பெரியார் என்ற வார்த்தையை பயன்படுத்தி இருப்பது அக்கட்சிக்கு அவருடைய ஆதரவை வலுவாக தெரிவித்தது. இப்பாடல் காட்சி முடிந்ததும் ஆனந்துக்கு முகம் கருப்பாக்கப்பட்டு தலைமுடி சட்டை பேண்ட் எல்லாம் மாற்றப்படும். இவ்வாறு ஒருவரை போல மற்றொருவரை உருவாக்கும் இக் காட்சியில் அப்போது சித்தபிரமை பிடித்த சேகர் ஓர் இடத்தில் உட்காராமல் இங்குமங்கும் அசைவது போல காட்சி அமைந்திருக்கும். அதைப்போலவே ஆனந்தம் அசையும் போது ஒப்பனையாளர் பேசும் ஒறு வரி வசனம் முரடன் சேகருக்குச் சொல்வதாக நினைத்துக் கொண்டிருக்கும் போது அடுத்த காட்சியில் அது அது ஆனந்துக்கு சொல்லப்பட்டதாகத் தெரிய வரும் இதுவும் இரசிகர்களை மிகவும் கவர்ந்த காட்சி ஆகும். படத்தில் இருவரின் சந்திப்புக் காட்சி ரசனையான காட்சியாகத் திகழும்

உண்மைக் காதலன் யார் என்று..

மாட்டுக்கார வேலன் படத்தில் ஒரே வீட்டில் ஒரே அறையில் வேலனும் ரகுவும் தங்கியிருக்கக் கூடிய சூழலில் ரகுவைப் பார்த்து வேலன் இப்போதுதான் எனக்கு உண்மை தெரிந்தது, உங்களுக்காகத்தான் இந்த வீட்டினர் எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நான் தெரியாமல் வந்து இங்கு சேர்ந்து விட்டேன் என்று தன் நிலையை விளக்கிச் சொல்லிவிட்டு தான் அங்கிருந்து கிளம்பப் போவதாகவும் சொல்வான். அப்போது வேலன் இந்த வீட்டில் இருக்கும் பெண் தன்னை காதலிப்பதையும் எடுத்துக் கூறுகிறான் . அப்போது அந்தப் பெண் தன்னிடம் பழகும் முறைகளை ஒரு பாட்டாக வர்ணித்து பாடுகின்றான்.

அறையில் நுழையும் ரகுவிடமிருந்து சட்டையை வாங்கும் வேலனை ஆச்சரியத்துடன் பார்க்கும்போது,

வேலன் : *கும்பிடுறேங்க.*

ரகு : *ஆச்சரியத்துடன் பார்த்து, யாரப்பா நீ என்னபோலவே இருக்கியே*

வேலன் : *வேலன்ங்க, மாட்டுக்கார வேலன்*

ரகு : *மாட்டுக்காரனா? இங்க எப்படி வந்த?*

வேலன் : *அத ஏன் சார் கேட்குறீங்க, ஒரு வழக்கு சம்மந்தமா வக்கீல் ஐயாவ பாக்க வந்தேன், அந்த ஐயாவும் அம்மாவும் சேர்ந்துகிட்டு வாங்க மாப்பிள்ளை வாங்க மாப்பிள்ளைனு கூப்பிட்டு, வயிறு நிறைய சோத்தையும் போட்டு சொகமா*

படுத்து தூங்க இந்த அறையும் குடுத்துட்டாங்க. நான் எவ்வளவோ சொல்ல முயற்சி செய்தும் என்னை பேசவே விடலயே. அவங்க ஏன் என்னை மாப்பிள்ளைனு கூப்பிடுறாங்கனு இப்பதான் சார் எனக்கு புரியுது. சார், சார் வக்கீல் மவள கட்டிக்க போற மாப்பிள்ளை நீங்கதானா?

ரகு : *வக்கீல் மகளா!!!?*

வேலன் : *ஆமாங்க பேர் லலிதா, ஆஹா என்ன அழகு போங்க, அது!, என்ன நீங்கனு நெனச்சுக்கிட்டு*

ரகு : *ஆ!! நெனச்சுக்கிட்டு?*

வேலன் : *போங்க சார், எனக்கு வெக்கமா இருக்கு சார்*

ரகு : *(சிரித்துக்கொண்டே) சும்மா சொல்லப்பா . . . என்னமோ சொல்லு*

“ஒரு பக்கம் பாக்குறா

ஒரு கண்ணை சாய்கிறா

அவ உதட்டை கடிச்சிக்கிட்டு மெதுவா

சிரிக்குறா சிரிக்குறா சிரிக்குறா !!

ஆடையை திருத்துறா அள்ளி அள்ளி சொருகுறா

அரை கொறை வார்த்தை சொல்லி பாதியை முழுங்குறா

பின்னலை முன்னே விட்டு பின்னி பின்னி காட்டுறா

பின்னாலே தூக்கி விட்டு கையாலே இழுக்குறா

பூப் போல காலெடுத்து பூமிய அளக்குறா

பொட்டுணு துள்ளி துள்ளி சிட்டாக பறக்குறா

நெலையிலே கைய வெச்சு ,நிக்குறா நிமிருறா

நிறுத்தி மூச்சு விட்டு நெஞ்சை தாலட்டறா . . . . ”

என்ற பாடல் வரிகளில் எம்.ஜி.ஆர். பெண்ணைப் போலவே நடித்து காட்டி இருப்பார்.

இருவரும் சந்திக்கும் இக்காட்சியில் முகம் தெரியாம உடம்பு மட்டும் தெரியும் எம்.ஜி.ஆருக்கு ராமகிருஷ்ணன நடித்திருப்பார். அவர் எம்.ஜி.ஆரை விட சற்று உயரமாக இருப்பது காட்சியைக் கூர்ந்து கவனிப்பவருக்குப்[புலப்படும். ஆனாலும் எம்.ஜி.ஆரைப் போலவே அவரது உடல் மொழி



அமைத்திருப்பது பொருத்தமாக இருக்கும். பாட்டுக்கு இடையில் ரகு எம்.ஜி.ஆர். மாட்டுக்கார வேலனைப் சும்மா உட்காருப்பா என்று மெத்தையை தட்டி காட்டுவதும் வேலனை உட்காரச் சொல்வதும், திராட்சைப் பழத்தை எடுத்து தன் சட்டையில் துடைத்து வேலனுக்கு சாப்பிடக் கொடுப்பதும் என்று சில சுவாரஸ்யமான காட்சிகளும் இடம் பெறும். பின்பு அந்தப்பெண் உன்னைத்தான் காதலிக்கிறாள். நீ படித்து படிப்பறிவைப் பெற்றுக்கொண்டால் அவளுக்கு நிகராக நீயும் சிறப்பாக வாழலாம் என்று வேலனை ஊக்கப்படுத்தி மேற்கொண்டு படிக்கச் சொல்வார். தகுதியை உயர்த்திக் கொள்ளுதல் என்பது ஒரு நல்ல ‘பாசிட்டிவான’ வழிமுறையாகும் ஆக்கப்பூர்வமான ஆலோசனையாகும்.

தாத்தாவும் பேரனுமாக எம்.ஜி.ஆர்.

ஆசை முகம் படத்தில் முகமாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டுவந்த வஜ்ரவேலு மனோகர் என்ற பெயரில் எம்.ஜி.ஆரின் அப்பா வீட்டில் வந்து தங்கியிருந்து எம்.ஜி.ஆரின் காதலியான சரோஜாதேவி இடம் நெருங்க முயற்சி செய்வார். உடனே மனோகர் தான் எவ்வளவோ சொல்லியும் தன்னை போலி என்று நினைத்துக் கொண்டிருக்கும் தன் தந்தையின் வீட்டிற்குள் நுழைவதற்கு ஒரு தந்திரம் செய்து பல ஆண்டுகளுக்கு முன்பு பர்மா சென்ற அவருடைய சித்தப்பாவை போல வேடம் பூண்டு அவர் வீட்டிலேயே வந்து விருந்தாளியாக தங்கி இருப்பார். வஜ்ரவேலு எம்.ஜி.ஆர். சரோஜாதேவி இடம் நெருங்கும்போது சித்தப்பாவான வயதான எம்.ஜி.ஆர்.,



“இன்னொருவர் வேதனை இவர்களுக்கு வேடிக்கை

இதயமற்ற மனிதருக்கு இதுவெல்லாம் வாடிக்கை"

எத்தனை பெரிய மனிதனுக்கு

எத்தனை சிறிய மனமிருக்கு

எத்தனை சிறிய பறவைக்கு

எத்தனை பெரிய அறிவிருக்கு”

என்ற பாடலைப் பாடி சரோஜாதேவியை அவர் நெருங்கவிடாமல் காப்பாற்றுவார் பாடல் பாடிக் கொண்டே இருக்கும் வேளையிலேயே சரோஜா தேவி தன் கைக்கடிகாரத்தை காட்டி தனக்கு நேரமாகிவிட்டது என்று சொல்லிவிட்டு தன் வீட்டுக்கு போய்விடுவார். இவ்வாறு நல்லவனும் கெட்டவனும் நேருக்கு நேர் சந்திக்கும் காட்சி அதில் நல்லவரான மனோகர் எம்.ஜி.ஆர்., ஒரு தாத்தா

வேடத்தில் நடிப்பதும் கெட்டவனாக வஜ்ரவேலு கதாபாத்திரத்தில் நடிக்கும் எம்.ஜி.ஆர். ஒரு வில்லனைப் போல முகத்தில் பல பாவங்களை காட்டியும் நடிப்பதும் வித்தியாசமான காட்சியாக அமைந்திருக்கும்.

ராமும் ரகுமானும்

சிரித்து வாழ வேண்டும் படத்தில் அப்துல் ரஹ்மான் தனது சூதாட்டத்தை மூடிவிடவேண்டும் என்று போலீஸிடம் தகவல் தெரிவித்து அனுப்பிய இன்ஸ்பெக்டரை நேரில் பார்ப்பதற்காக காவல் நிலையத்திற்கு அப்துல்ரகுமான் வருவார்,

அப்துல் ரகுமான் : *இன்ஸ்பெக்டர் சாப் நிம்பள் நம்மை இங்கே வரச்சொல்றான்லே*

இன்ஸ்பெக்டர் ராம் : *ஒகோ நீதான் ரகுமானா*

அப்துல் : *ஹரே சாப் இதுவரைக்கும் நம்மள் பேரை யாரும் சொன்னானில்லே, நிம்பள் சொல்றான், ஆ பரவாயில்லே மே ரா நாம் உஸ்தான் அப்துல் ரகுமான்.*

அப்துல் ரகுமான் காவல் நிலையத்திற்குள் வந்து ராமின் முன்பு இருந்த நாற்காலியில் உட்கார போகும்போது, இன்ஸ்பெக்டர் எம்.ஜி.ஆர். அந்த நாற்காலியை தட்டி விட்டு விடுவார்.

இன்ஸ்பெக்டர் ராம் : *இது உன் சூதாட்ட கடையினு நெனச்சியா, This is Police Station ஜாக்கிரத நான் உட்காருனு சொல்றவரைக்கும் நீ நின்னுட்டு இருக்கனும்.*

அப்துல் : *அரே சாப் இந்த உஸ்தாத் பத்தி உனக்கு தெரியல*

இன்ஸ்பெக்டர் ராம் : *பெரிய உஸ்தாத். யாரோ கையாலாகாத பயந்தாங்கொள்ளிகள் கொடுத்த பட்டம். சூதாட்டம் நடத்தி சோம்பேறிகளை வளக்குற உனக்கு பட்டமும் ஒரு கேடா?*

அப்துல் : *இன்ஸ்பெக்டர் சாப் நிம்பள் பேசுறான் இல்லே இந்த உடுப்பு பேசுறான், இந்த இடம் பேசுறான்.*

இன்ஸ்பெக்டர் ராம் : *ஷட் அப்*

அப்துல் : *சத்தம் போடாதிங்க சாப். தொண்டை அடைக்க போறான், அரே சாப் நிம்பள் நெஞ்சு மேலே தைரியம் இருந்தா இந்த போலீஸ் உடுப்பு இல்லாம நம்ம பேட்டை மேலே வந்து பாரு, அப்ப நிம்பளுக்கு தெரியும் இந்த உஸ்தான் அப்துல் ரகுமான் யாருனு*

இன்ஸ்பெக்டர் ராம் *: கான்ஸ்டபில் இவனை வெளியே கொண்டு விடு,*

அப்துல் : *சிரித்துக்கொண்டே, இன்ஸ்பெக்டர் சாப், நம்பளுக்கு அல்லா துணை உண்டு நம்பள் தனியா வரான் தனியா போறான். இப்போ சலாம் சொல்றான்.*

அப்துல் ரகுமான், "நீ செய்யல உன்னுடைய உடுப்பு செய்து, நீ இருக்கிற அந்த காவல் நிலையம் உனக்கு இந்த அதிகாரத்தை கொடுத்திருக்கிறது" என்று சொல்லி விட்டு போனதால் இதற்கு பதிலளிக்கும் வகையில் மறுநாள் போலீஸ் உடுப்பு இல்லாமல்



இன்ஸ்பெக்டர் எம்.ஜி.ஆர். தனி ஒரு ஆளாக அப்துல்ரகுமானின் சூதாட்ட கிளப்புக்கு வருவார். அப்போது இருவருக்கும் இடையே பெரிய சண்டை நடக்கும். இந்த இரண்டு சந்திப்புகளும் ஆக்ரோஷமான சந்திப்புகள் ஆக அமைந்திருக்கும். முதல் சந்திப்பில் வசனமும் மறு சந்திப்பில் சண்டைக் காட்சியும் அனல் பறக்கும் வகையில் அமைந்திருக்கும்.

அன்புமலர்களின் சந்திப்பு

நாளை நமதே படத்தில் தந்தையும் தாயும் இறந்துவிட்டதால் மூன்று சிறுவர்களும் அனாதையாகி ஆளுக்கு ஒரு திசையில் பிரிந்து விடுவர். மூத்தவன் சங்கர் திருடன் ஆகிவிடுவான். அடுத்தவன் விஜயை ஒருவரிடம் வளர்ப்பு மகன் ஆகிவிடுவான். கடைசி சிறுவனை அந்த வீட்டில் ஆயாவாக இருந்த பெண் எடுத்து வளர்ப்பார். கடைசி சிறுவன் எப்போதும் கிடார் இசைத்துக் கொண்டே

இருப்பான். அவன் மேடைப் பாடகன் ஆகிவிடுவான். அவன் ஒவ்வொரு மேடையிலும் தன்னுடைய குடும்பப் பாடலைப் பாடித் தன்னுடைய சகோதரர்கள் அங்கு இருக்கின்றார்களா என்று தேடுவான். ஆனால் அவர்கள் கிடைக்கவில்லை. ஒருநாள் விஜய் எம்.ஜி.ஆர். அங்கு இருந்ததால் விஜய் மேடைக்குப் போய் தன் தம்பியுடன் சேர்ந்து பாடுவார்.

“அன்பு மலர்களே... நம்பி இருங்களே...

நாளை நமதே... இந்த நாளும் நமதே...

தருமம் உலகிலே...

இருக்கும் வரையிலே...

நாளை நமதே... இந்த நாளும் நமதே...

தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம்

ஓர் வழி நின்று நேர் வழி சென்றால்

நாளை நமதே

காலங்கள் என்னும் சோலகள் மலர்ந்து

காய் கனியாகும் நமக்கென வளர்ந்து

நாளை நமதே”

என்று இருவரும் இணைந்து பாடும் போது மூத்த சகோதரரான சங்கரும் அங்கு எதேச்சையாக வந்துவிடுவார் அவருக்குத் தன் தம்பிகள் இருவரும் மேடையில் சேர்ந்து பாடுவதைக் கண்டு கொள்வர். ஆனால் மேடையில் இருக்கும் இரண்டு தம்பிகளுக்கும் கீழே நிற்கும் சங்கர் தான் தங்களின் அண்ணன் என்பது தெரியாது,

சங்கர் மேடைக்குப் போய் தன்னுடைய தம்பிகளை பார்த்துத் தன்னை அறிமுகம் செய்து கொள்ளவும் முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக் கொண்டு இருப்பார். இந்தக் காட்சியில் சங்கராக நடிக்கும் எம்.ஜி.ஆரின் நடிப்பு சிறப்பாக இருக்கும். கண்ணில் ஆனந்த கண்ணீர் வடிய நேரில் போய் பார்க்க முடியவில்லையே பேச முடியவில்லையே என்ற ஏக்கத்தோடு அந்த வருத்தத்தை முகத்தில் தேக்கியயபடி மகிழ்ச்சியும் சோகமும் கலந்த நடிப்பை சிறப்பாக வெளிப்படுத்தி இருப்பார். மேடையில் இருக்கும் இரண்டு சகோதரர்களும் உற்சாகமாக ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி பாடிக் கொண்டிருப்பார்கள் மூவரும் இடம் பெரும் இந்த காட்சி சிறப்பாக அமைந்திருக்கும்.

இராஜா தேசிங்கு படத்தில் போர்க்களத்திலும் நேற்று இன்று நாளை படத்தில் காவல் நிலையத்திலும் இரண்டு எம்.ஜி.ஆரும் சந்திப்பதாக காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கும்.

உச்சகட்ட சண்டைக்காட்சியில்

நீரும் நெருப்பும், குடியிருந்த கோயில், மாட்டுக்கார வேலன் ஆகிய படங்களில் கடைசியில் இடம்பெறும் சண்டைக் காட்சியில் இரண்டு எம்.ஜி.ஆரும் பங்கு பெறுவர். இப்போது முதலில் ஒரு எம்.ஜி.ஆர். சண்டையைத் தொடங்கி பிறகு இன்னொருவர் வந்து இணைந்து கொள்வார். மாட்டுக்கார வேலன் படத்தில் வில்லனின் ஆட்கள் ரகு எம்.ஜி.ஆரை சங்கிலியால் கட்டிப் போட்டு வைத்திருப்பர். அவரை வேலன் எம்.ஜி.ஆர். காப்பாற்றி பிறகு இருவரும் சண்டை போடுவர்.



வில்லனின் கும்பலோடு சண்டையிடும் இக்காட்சி விறுவிறுப்பான காட்சியாக அமைந்தது.

குடியிருந்த கோயில் படத்தில் தம்பி எம்.ஜி.ஆரை சேகர் காப்பாற்றி கைகளை அவிழ்த்து விட்டு ‘நீ சும்மா உட்கார்ந்து வேடிக்கை பார்’ என்று சொல்லிவிட்டு எதிரிகளைப் பந்தாடுவார். அண்ணன் எம்.ஜி.ஆர். சண்டை போடும் இக்காட்சியை பார்த்து ஆனந்த் ‘அண்ணே எப்படி சண்டை போடுகிறார் பார்த்தியா’ என்று பாராட்டிப் பேசுவதாகவும் ஒரு காட்சி இடம்பெற்றது.

இரட்டை வேடப் படங்களில் சகோதரர்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் பாராட்டும் காட்சியை இரசிகர்கள் மிகவும் ரசித்தனர்.

இருவரும் தமக்குள் சண்டையிடுதல்

ஒருவரை ஒருவர் எதிர்த்து சண்டை போடுவதாக இராஜா தேசிங்கு படத்தில் வாள்

சண்டை காட்சி அமைந்தது. சிரித்து வாழ வேண்டும் படத்தில் முதலிலேயே இந்த சண்டைக்காட்சி இடம்பெறும். நீரும் நெருப்பும் படத்தில் இடையில் கரிகாலன் தனது தம்பி மணிமாறனின் காதலி ஜெயலலிதாவுக்காக மோதுகின்ற சண்டை காட்சி இடம்பெறும். இதில் அவர்கள் கையில் குத்துவாள் வைத்து சண்டை போட்டனர். பல வருடங்களுக்குப் பிறகு இந்த குத்துச்சண்டை திரைப்படத்தில் இடம்பெற்றது. அன்றைக்குப் படப்பிடிப்பை பார்க்க வந்திருந்த தர்மேந்திரா, ஹேமமாலினி தம்பதியர் எம்.ஜி.ஆர். நிஜ குத்துவாள் வைத்து சண்டை போடுவதை பார்த்து வியந்து போயினர்.

பட்டிக்காட்டு பொன்னையா படத்தில் தன் வீட்டை கடனில் இருந்து மீட்க பத்தாயிரம் ரூபாய் வேண்டும் என்ற காரணத்துக்காக அண்ணன் பொன்னையாவும் தம்பி முத்தையாவும் குஸ்தி சண்டை போடுவர். ஆனால் இருவருமே முகமூடி அணிந்து இருந்ததனால் மேலும் இவர்கள் வேங்கை, சிறுத்தை என்று பட்டப்பெயர்களும் சூட்டி இருந்ததால் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. முத்தையா அடிபட்டு கீழே விழுந்து பிறகு முகத்திரையை எடுத்து பார்க்கும்போதுதான் தான் அடித்து கீழே தள்ளியது தன்னுடைய சொந்தத் தம்பி என்ற உண்மை அண்ணனுக்குத் தெரிகின்றது. ஆனால் இருவருடைய நோக்கமும் ஒரே நோக்கமாக இருந்த காரணத்தினால் இருவரும் எழுந்து விடுகின்றனர். இக்காட்சியில் எம்.ஜி.ஆரின் முகம் தெரியாமல் டூப் நடிகர்களை வைத்து எடுக்கப்பட்டதால் இரசிகர்களை கவரவில்லை. இப்படத்தின் இலாபம் குறைந்ததற்கு

வேறு சில காரணங்களோடு இதுவும் அதனால் இப்படம் சுமாரான வெற்றியைத்தான் பெற்றது.

ஒருவரை மற்றவர் காப்பாற்றுதல்

இரட்டை வேடப் படங்களில் ஒரு வேடத்தில் வரும் எம்.ஜி.ஆர். இன்னொரு வேடத்தில் வரும் எம்.ஜி.ஆரை காப்பாற்றுவதாக வரும் காட்சி அவருடைய சொந்தப் படமான நாடோடி மன்னனிலும், உலகம் சுற்றும் வாலிபன் படத்திலும் இடம்பெற்றது. இது அண்ணன் தம்பிக்குள்ளான பாசப் பிணைப்பை உறுதி செய்ததால் ரசிகர்கள் இத்தகைய கிளைமேக்ஸ் காட்சியை வெகுவாக ரசித்தனர். எம்.ஜி.ஆர். உடைய சொந்தப் படங்களில் எம்.ஜி.ஆர். விருப்பத்திற்கு இடமிருந்ததனால் அவர் தன் ரசிகர்களை ரசிக்க கூடிய காட்சிகளை அதிக அளவில் எடுத்து சேர்த்தார்.

நாடோடி மன்னன் படத்தில் மன்னன் மார்த்தாண்டவர்மன் காப்பாற்றும் காட்சியில் கழுகு குகை சிதைந்து வெள்ள நீரில் மூழ்கி விடும். அப்போது மார்த்தாண்டன் சிறை வைக்கப்பட்டிருந்த அறையில் வெள்ள நீர் புகுந்து விடும். அந்த வெள்ளத்தில் இருந்து மார்த்தாண்டன் காப்பாற்றிக் கொண்டு வந்து கரை சேர்க்க வேண்டியது வீராங்கனின் கடமையாகிவிடும். இதற்கிடையே எம்.ஜி.ஆறும் சரோஜாதேவியும் அறுந்து போன கயிற்று பாலத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் பொது ஒரு எம்.ஜி.ஆரை இன்னொருவர் காப்பாற்ற எடுக்கும் முயற்சிகளும் இரசிகரக்ளைப் பெரிதும் கவர்ந்தது.

இரசிகர்கள் இரட்டை வேடங்களில் எம்.ஜி.ஆர். அண்ணன் தம்பியாக நடித்தாலும் அன்னியராக நடித்தாலும் ஒருவருக்கொருவர் ஆதரவாக அனுசரணையாக இருப்பதையே விரும்பினர். ஒருவர் கெட்டவனாக இருப்பதையோ ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்வதையோ ரசிக்கவில்லை.

உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் அணு விஞ்ஞானியான அண்ணன் எம்.ஜி.ஆர். முருகனிடம் இருந்து ஆய்வு ரகசியங்களை எதிரிகள் அறிந்துகொள்வதற்காக கட்டி வைத்து துன்புறுத்துவர். அண்ணனைக் காப்பாற்றுவதற்காக சர்வதேச போலீஸ் அதிகாரியான தம்பி ராஜ் எம்.ஜி.ஆர். அந்த இடத்திற்குச் செல்வார். அங்குப் போலீஸ் அதிகாரியாக சென்றால் தனக்கும் ஆபத்து நேரிடலாம் என்பதை அறிந்து அவர் ஸ்கேட்டிங் விளையாடும் ஒரு விளையாட்டு வீரனைப் போல



போவார். அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் ஸ்கேட்டிங் விளையாடும்போது கத்தியோடு வந்து சிலர் அவருடன் மோதுவார்கள் என்று ஒரு பெண்மணி அறிவிப்பார். இவர் தன் கையில் கத்தி எதுவும் இல்லாமலே கத்தியோடு வந்து மோதி என்ற மூன்று நான்கு பேரையும் சமாளித்து விடுவார். அப்படியே அண்ணனை அடைத்து வைத்திருக்கும் அறைக்குள் வந்து விடுவார். இக்காட்சி ரசிகர்களை அவர்களின் இருக்கையின் நுனிக்கே கொண்டு வந்து விட்டது. மிகவும் பரபரப்பாக அமைந்திருந்த ஸ்கேட்டிங் காட்சியில் எம்.ஜி.ஆர். நடித்திருந்தது ரசிகர்களை மிகவும் கவர்ந்தது.

உலகம் சுற்றும் வாலிபன் படத்தின் கிளைமேக்ஸ் சண்டைக் காட்சிக்காக எம்.ஜி.ஆர். தன் வீட்டு மொட்டை மாடியில் தினமும் ஸ்கேட்டிங் விளையாடி பயிற்சி பெற்றிருந்தார். அறுபது வயதுக்கு மேலும் அவர் தன் படங்களுக்காக புதிய பயிற்சிகளைப் பெற்றுத் தன்னை தகுதிப்படுத்திக் கொண்டது அவருடைய வெற்றிக்கு மூல காரணமாக அமைந்தது.

4. கதாநாயகிகள்

எம்.ஜி.ஆர். நடித்த படங்களில் அதிக எண்ணிக்கையில் கதாநாயகியாக நடித்தவர் ஜெயலலிதா. இவர் மாட்டுக்காரவேலன், நீரும் நெருப்பும், குடியிருந்த கோவில், பட்டிக்காட்டு பொன்னையா, அடிமைப்பெண் ஆகிய 5 படங்களில் என் ஜோடியாக நடித்திருக்கிறார். இதற்கு அடுத்த நிலையில் ராஜஸ்ரீ, கலையரசி, நாளை நமதே, குடியிருந்த கோயில், பட்டிக்காட்டு பொன்னையா ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். நாடோடி மன்னன் கலையரசி, தேசிங்கு ஆகிய படங்களில் பானுமதி நடித்துள்ளார்.

எம்.என். ராஜம் தலையில் சம்மட்டி அடி

இரண்டு எம்.ஜி.ஆர். வரும் சில படங்களில் எம்.ஜி.ஆருக்கு பதில் இன்னொரு எம்.ஜி.ஆர். வந்து அங்கு தங்கி இருந்து சில கடமைகளை செய்து அந்தக் குடும்பத்தையும் நாட்டையோ சீர் படுத்துகின்ற காட்சிகள் அமைந்திருக்கும். காட்சிகளில் முதல் எம்.ஜி.ஆரின் ஜோடி அடுத்த எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக இருக்க தமிழ்பண்பாடு இடம் தராது அவரால் இரண்டாவது எம்.ஜி.ஆரை

தன்னுடைய கணவர் அல்ல என்று புரிந்து கொள்ளவும் முடியாத ஒரு சூழ்நிலையில் திடீரென்று ஒரு நாள் உண்மை தெரியவரும் போது உணர்ச்சிமிகு தருணத்தை எவ்வாறு எதிர் கொள்கின்றனர் என்ற காட்சி எம்.ஜி.ஆரின் இரட்டை வேடப் படங்களில் கதாநாயகிகளுக்கு தன் திறமையை வெளிப்படுத்த கிடைக்கும் நல்லதொரு வாய்ப்பாகும். இத்தகைய காட்சிகளில் ஒவ்வொரு படத்திலும் எவ்வாறு கதாநாயகிகள் தருணத்தை எதிர்கொள்கின்றனர் என்று படமாக்கப்பட்டுள்ள விதத்தை இனி காணலாம்.

நாடோடிமன்னன் படத்தில் மன்னன் மார்த்தாண்டனின் மனைவியான மனோகரியுடன் வீராங்கனை வேடத்தில் அரண்மனையில் தங்கி இருக்கும்போது வீராங்கனை மனோகரியை விட்டு விலகி விலகி செல்வதை சில காட்சிகளில் நுட்பமாக காட்டப்படும். மனோகரி வீராங்கனையுடன் கைகோர்க்கும் போது அவர் தன் கையை விலக்கிக் கொள்வார். அவருடைய பாதங்களுக்கு மலர் தூவி வணங்கும் போது அவர் விலகி நின்றுகொண்டு அந்த



மலர்கள் அங்கு வரையப்பட்டிருக்கும் மன்னர் மார்த்தாண்டன் ஓவியத்தில் பாதங்களில் விழும்படி நகர்ந்து கொள்வார். ஆக மனோகரி இப்போது மலர்தூவி வணங்கியது அவளது கணவன் மன்னன் மார்த்தாண்ட தான் என்பதை அறிந்து ரசிகர்கள் மனநிறைவு கொள்கின்றனர். இக்காட்சி பெண்களால் மிகவும் ரசித்த காட்சியாகும். வீரன் தன்னை தேடி வந்த காதலி பானுமதியை வந்து பார்க்க இயலாமல் காலம் தாழ்த்தும் தருணத்தில் அரண்மனைக்குள் மன்னனை மயக்குவதற்காக ராஜகுரு கொடுத்த மலரை மனோகரி வீரனின் முகத்தின் முன்பு அசைகள் வீராங்கனை பதிலுக்கு அதை மனோகரின் முகத்தின் முன்பே காட்ட அந்த மலரை நுகர்ந்த மனோகரி மயங்கி விழுந்து விடுகிறார். உடனே வீராங்கனையை தூக்கிக்கொண்டு செல்லும்போது அவருக்காக காத்திருந்த பானுமதி கொதிப்படைந்து விரைந்து அவ்விடத்தைவிட்டு செல்கிறார். அதன் பின்னர் பானுமதிக்கு ஆறுதல் சொல்ல சென்றவர் பானுமதி நம்பியாரின் கத்தியால் குத்தப்பட்டு இறந்து போனதை தான் காண்கிறார். அரண்மனைக்கு திரும்பி வந்து மன்னனின் மனைவியிடம் தன்னுடைய தான் யார் என்பதை எடுத்துக் கூறுகிறார். வசனம் மனோகரின் தலையில் சம்மட்டியால் இடி விழுந்தது போல் உணர்கிறாள்.

வீராங்கன் தூங்கிக்கொண்டிருக்கும்போது மனோகரி தன் காலை பிடித்துக்கொண்டிருப்பதை உணர்ந்து அதிர்ச்சியில் எழுந்திருக்கிறார்.

மனோகரி : *ஏன் தங்கள் காலை பிடிக்கும் பாக்கியம் கூடவா எனக்கு இல்லை.*

வீராங்கன் : *பத்தினி பெண்ணாகிய உனக்கு இப்படிப்பட்ட கேவலநிலை தேவையே இல்லை மனோகரி.*

மனோ : *பத்தினிகளின் சொர்க்கமே கணவரின் காலடியில்தானே இருக்கிறது.*

வீராங்கன் : *மனோகரி நான் .... நான்....*

மனோகரி : *அரைகுறையாக நின்றுவிடும் இந்த வார்த்தை, அச்சம் நிறைந்த இந்த பார்வை இவையெல்லாம் அழியப்போகும் என் வாழ்வுக்கு அடையாளமாக அல்லவா இருக்கிறது.*

வீராங்கன் : *தவறான எண்ணம், நான் அழிந்தாலும் நீ அழியும்படி விடமாட்டேன். உன் வாழ்வு மலரத்தான் போகிறது, நீ வாழத்தான் போகிறாய்.*

மனோகரி : *எப்படி முடியும், மரமே கருகும்போது மலர் எப்படி அத்தான் மலர முடியும்? நீங்கள் உருவம் நான் கண்ணாடி அங்கு மகிழ்ச்சி இருந்தால்தானே இங்கு இருக்கும்.*

வீராங்கன் : *சரி எனக்கு வேலை இருக்கிறது, போய் தூங்கு (என்று மனோகரியை விட்டு விலகிச் செல்கிறார்).*

மனோகரி : *இன்று என்னை ஏமாற்றவே முடியாது. அத்தான் நீங்கள் எங்கு வேண்டுமானாலும் சுற்றுங்கள் எப்படி வேண்டுமானாலும் வாழ்க்கை நடத்துங்கள், ஆனால் இங்கே ஒரு உயிர் உங்களுக்காக ஊசலாடுவதை மட்டும் மறந்துவிடாதீர்கள். அத்தான் ... அத்தான் ... காலம் மாறினால் மனைவியின் கோலம் மாறும் கணவனின்*

குணம் மாறும் என்பார்கள். இங்கே மனைவி தாயாகும் முன்பே கண்வன் சந்நியாசியாகும் கதை நடக்கிறது.

வீராங்கன் : *இல்லை மனோகரி சந்நியாசி கணவனாகும் கதைதான் இப்போது நடக்கிறது.*

மனோகரி : *உங்களை புரிந்துகொள்ளக்கூடிய சக்தி உங்களுக்கே இருக்கிறதா என்பது எனக்கே புரியவில்லை. மணிமகுடத்தை உங்கள் தலையில் ஏற்றி வைத்தபோதே என்னை உங்கள் இதயத்திலிருந்து இறக்கி வைத்துவிட்டீர்கள். பக்கம் நின்று பேசிய காலம் போய் முடிசூட்டு விழாவிற்கு பிறகு என்னை பார்க்கவே வெட்கப்படுகிறீர்கள். நான் என்ன தகுதியற்றவளா? தரம் இல்லாதவளா? போகட்டும் நான்தான் கல்லில் செதுக்கிய மலரானேன், உங்கள் கண்ணுக்கு பிடிக்காத பெண்ணானேன். உங்கள் இதயம் ஏன் மறத்துப் போய்விட்டது? மாலை சூடிய காலத்தில் மெல்ல மெல்ல பார்த்து ரசித்த கண்கள் இப்போது ஏன் சக்தியற்று போய்விட்டது. மாலை வரும்போது தென்றல் வரும், தென்றல் வரும்போது எங்கே என் மனோகரி என்று தேடிவருவாரே என் கணவர், அவரா இப்படி மாறிவிட்டார்?*

வீராங்கன் : *இல்லை மனோகரி இல்லை, உன் கணவரும் மாறவில்லை, நானும் மாறவில்லை.*

மனோகரி : *அதிர்ச்சியுடன், கணவர் . . . நான் . . . ஒரு உயிருக்கு இரண்டு உருவங்களா? என்னை குழப்பாதீர்கள் இறுதியாக நான் உங்களிடம் கேட்க விரும்புவது இதுதான், காதலோடு பேசி, கனிவோடு உறவாடி களித்திருந்த காலத்தை மீண்டும் பெற*

முடியும் என்றால் என்னை தேற்றுங்கள், தேம்ப விடாதீர்கள். இல்லை மண்டலம் போதும், மகுடம் போதும் கொண்டவள் வேண்டாம், குடும்பம் வேண்டாம் என்றால் நாளுக்குநாள் என்னை வதைக்காதீர்கள். வேல் கொண்டு வீசுங்கள், வாள் கொண்டு சிதையுங்கள். துண்டு துண்டாக கிடைக்கும் என் சதையைக்கூட உங்கள் கண்ணில் படாமல் தூரத்தில் கொண்டு போய் வீசிவிடுங்கள்.

வீராங்கன் : *என்னை கொல்லாதே மனோகரி*

மனோகரி : *கொல்ல வரவில்லை, உங்கள் கையாலேயே கொன்றுவிடுங்கள் என்று கேட்க வந்திருக்கிறேன்.*

வீராங்கன் : *அதைச்செய்யவும் நான் ஆளில்லை, அழுது புலம்பும் உன்னை தேற்றும் இடத்திலும் நான் இல்லை.*

மனோகரி : *ஏன் இல்லை என்னை பார்க்க வேண்டியவர்?*

வீராங்கன் : *நான் இல்லை*

மனோகரி : *எனக்கு ஆறுதல் கூற வேண்டியவர்?*

வீராங்கன் : *நான் இல்லை*

மனோகரி : *என்னை காக்கவேண்டியவர்?*

வீராங்கன் : *மாலை இட்டவன் நானில்லை, மணந்து கொண்டவன் நானில்லை, காக்க வேண்டியவனும் நானில்லை.*

மனோகரி : *அதிர்ச்சியுடன் ஆ ... நீங்கள் .... நீங்கள் ...*

வீராங்கன் : *நான் உன் கணவனே இல்லை.*

மனோகரி : *என்ன !!!? (அதிர்ச்சியுடன்) கணவன் இல்லை ...... நீங்கள் என் கணவன் இல்லை ...... ஐயயோ (எனக் கூறிக்கொண்டே கத்தி எடுத்து தற்கொலை செய்ய முயற்சிக்கிறாள்). ஐயோ நான் இன்னும் ஏன் சாகாமல் இருக்கிறேன்.*

வீராங்கன் : *உன் இதயம் வெடித்துவிடாமல் இருக்க, சாவு உன்னை காவு கொள்ளாமல் இருக்க, உன் கற்பு நெறிக்கு சிறிதும் மாசுபடாமல் நடக்கும் இந்த நாடகம், நாட்டின் நலனுக்காக, உன் கணவனை காப்பாற்றுவதற்காக. யார் இவன்? எங்கிருந்து வந்தான்? என்ன இவன் பழைய கதை, ஏன் இந்த நாடகம் என்றெல்லாம் உன் மனம் குழம்பும். தெள்ளிய நீருக்கும், இல்லறத்து பெண்ணுக்கும் கள்ளம் புரியாது, கபடம் தெரியாது. கண்ணாடி உன் மனம், அதிலே காணப்படுவது உனது கணவனின் முகம். அரண்மனை, அதிகாரம், ஆள், அம்பு, சேனை இதுதான் நீ காணும் உலகம். இன்னும் ஒரு உலகம் உண்டு, நீ காணாதது, நான் கண்டது. கேள், காடு சுற்றுவார்கள், கலைப்பை பிடிப்பார்கள், உழுவார்கள், விதைப்பார்கள், அறுப்பார்கள், சுமப்பார்கள். உண்ண மட்டும் உணவில்லாமல் தவிப்பார்கள். அந்த மாபெரும் கூட்டத்திலே நானும் ஒருவன். படையிலே சேர்ந்தேன் மக்களுக்கு பணிபுரிய, நாட்டை காக்க. சேர்ந்தபின்பே அறிந்தேன், காக்க வேண்டிய படை மக்களை அழ வைத்தது, வாழ வைக்க வேண்டிய படை மக்களை மாள வைத்தது என்று. உங்கள் ஆட்சியில் நடந்த கொடுமைகள் அனைத்தையும் கண்டேன். ஆதரவற்ற குடும்பங்கள் தவிப்பதையும் பார்த்தேன். மக்கள்*

அழுத கண்ணீர் ஆறென பெருகும். சண்டை வேண்டாம், உணவு வேண்டும், வாழ வேண்டும் என அழறுவார்கள். அவர்களை அடிக்கச் சொல்வார் தளபதி, அணைக்க தாவும் என் மனசாட்சி. உள்ளம் துடித்தது, உதிரம் கொதித்தது ஏன் இப்படி? எதற்காக? நடக்கலாமா? சரிதானா இவைகளை எனக்குள் நானே கேட்டுக் கொண்டேன். ஒரேஒரு முடிவுக்குத்தான் வந்தேன். மக்களிலே ஒருவன் தலைவனாகும்வரை மன்னர் ஆட்சியின் அக்கிரமத்துக்கு முடிவே இருக்காது என அறிந்தேன். படையிலிருந்து விலகினேன், புரட்சிக் கூட்டத்திலே புகுந்தேன். புரட்சி என்றதும் பயந்திராதே. இது ஆளை தீர்க்கும் ஆயுதப்புரட்சி அல்ல. அதில் எங்களுக்கு நம்பிக்கையும் இல்லை. ஆனால் நாங்கள் தீயிடுவோம் தீமைக்கு, கொள்ளையடிப்போம் மக்கள் உள்ளங்களை, குவித்து வைத்து அனுபவிப்போம் அறிவு பொருட்களை. கத்தி எடுக்காத, ரத்தம் சிந்தாத அறிவு புரட்சி அது. சொல்லாலே போதித்து மக்கள் குணத்தை மாற்றியதை கொடுமை என்றது உங்கள் ஆட்சி. பிடிபட்டேன் ஒருநாள், உதை பட்டேன் சிறையிலே வதைப்பட்டேன், பாராழும் மன்னனாக பார்க்கிறாயே இப்போது அவன் சிறையில் இருந்த போது பாராழுவோர் தந்த பரிசு, சவுக்கடி, சூடு (என சட்டையை கழற்றி காண்பித்து) பார்! சகோதரி பார்!!.

மனோகரி : *ஐயோ !!!!!!!!!!!*

வீராங்கன் செல்வந்தர் வீட்டு மாடுகளுக்கு வைத்திய வசதிகள் உண்டு, ஏழைகள் அதனினும் இழிந்தவர்களா உங்கள் நாட்டிலே? எனக் கேட்டதற்காகவா இந்த தண்டனை. பட்டேனே பல

துயரம், கெட்டேனா? பழிகாரனாக மாறினேனா? நான் கொடியவனாக இருந்திருந்தால் உன் கற்பை எளிதில் சூறையாடியிருக்க முடியும். இல்லை மனோகரி இல்லை, நான் பலனிளிக்கும் கழனியானேன். குழப்பம் செய்யும் கூட்டம் ஒருபுறம், கொந்தளிக்கம் மக்கள் ஒருபுறம், என்னை கொலை செய்ய துடிக்கும் கொடுமையானவர்கள் ஒருபுறம், வடிவத்தால், வாழ்க்கையினால், சிந்தனையால் இவன் நம் கணவனே என கலங்கும் நீ ஒருபுறம், இதற்கிடையில்தான் வாழ்கிறேன் மன்னனாக. பட்டுப்பட்டு தேறிய என் இதயம் எந்த பாரங்களையும் தாங்கிக்கொள்ளும். ஆனால் என்னை.... உன் கணவனாக கருதி மகிழ்ச்சியோடு பார்த்தால் என்னால் தாள முடியாது சகோதரி என்னால் தாளமுடியாது. அதற்கும் இப்போது முடிவுக்கு வந்துவிட்டேன், பாரம் இறங்கிவிட்டது நான் வருகிறேன்.

மனோகரி *: அண்ணா .. . . . அண்ணா .. . . . என்னை மன்னித்து விடுங்கள் அண்ணா*

வீராங்கன் *: உண்மையிலேயே என்னை நம்புகிறாயா மனோகரி?.*

மனோகரி : *அண்ணா . . . . நம்புகிறேன் அண்ணா, நான் மட்டும் அல்ல இந்த நாடே உங்களை நம்பித்தான் ஆக வேண்டும்.*

இதுவரை தான் தன்னுடன் இருந்த தன் கணவன் மன்னன் மார்த்தாண்ட நல்லவன் என்பது தெரிந்ததும் அவளுக்கு பேரதிர்ச்சியாக இருக்கிறது. ஆனால் தன்னுடன் இருந்த வீராங்கனை நல்லவன் தன்னை சகோதரி போல கருதியவன் என்பதை

தெரிந்து கொள்ளும்போது ஓரளவுக்கு மனதுக்கு ஆறுதலாக இருக்கிறது. ஆனால் மனோகரியும், வீராங்கனையும் இருக்கும் காட்சியை மன்னன் மார்த்தாண்டனுக்கு காண்பித்த கார்மேகம் மன்னன் மார்த்தாண்டன் மனதில் விஷ விதையை விதைத்து விடுகிறான். மனோகரிக்கும் வீராங்கனைக்கும் இடையிலான பிரச்சனை தீர்ந்தாலும் மன்னனின் மனதில் மனோகரியை பற்றிய சந்தேகம் இருந்து கொண்டே இருக்கிறது. ஆங்கில கதையில் மனோகரி கதாபாத்திரம் வீராங்கனை நேசித்து வீராங்கனை சென்று விடுவதும் ரக காண்பித்தனர். ஆனால் தமிழ் படத்தில் இவ்வாறு செய்வது நம் பண்பாட்டுக்கு ஒவ்வாதது என்பதால் எம்.ஜி.ஆர். தமிழ் பண்பாட்டின் அடிப்படையில் வீராங்கனைகள் இடம் உண்மையை எடுத்துச் சொல்லி தான் பட்ட வேதனைகளை எல்லாம் விவரித்து தான் வாங்கிய சாட்டை அடிகளையும் அதனால் ஏற்பட்ட தழும்புகளையும் காண்பித்து, தன்னுடைய நேர்மையையும், உண்மையையும் நிரூபிப்பார். அவரையும் வீராங்கனை பேசும் காட்சி உணர்ச்சிமிக்க வசனங்களால் எழுதப்பட்டு இருவராலும் மிகச்சிறப்பாக நடிக்கப்பட்டு ரசிகர்களின் உள்ளத்தை கவர்ந்ததாக மனோகரி குற்றமற்றவள் அதைப் போலவே தாங்களும் மிக நல்லவன் என்பதை ரசிகர்கள் பரிபூரணமாக உணர்ந்து கொள்ளும் வகையில் இக் காட்சி அமைப்பு சிறப்பாக இடம்பெற்றது.

ஜெயலலிதா தீக்குளித்தல்

மாட்டுக்கார வேலன் படத்தில் வேலனை ஜெயலலிதா அட்வகேட் ரகு என்று நினைத்து

காதலித்துக் கொண்டே இருப்பார். ஒரு கட்டத்தில் வேலன் வேறு ரகு வேறு என்பது தெரியவரும் போது ஜெயலலிதாவுக்கு தான் காதலித்தது யாரை என்ற குழப்பம் வந்து உடனே தன் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொள்வார். அப்போது ரகு விரைந்து சென்று தீயை அணைத்து நீ காதலித்தது வேலனைதான் என்னை அல்ல நீ என் கைக்கு மருந்து போட வந்த போது நானே உன்னிடம் இருந்து பிளாஷ்திரையை வாங்கி என் கையில் ஒட்டிக் கொண்டேன் அல்லவா நீ என்னை தொட்டது கூட கிடையாது. நீ முழுக்க முழுக்க வேலனைதான் பழகினாய், பேசினாய் அவனைத்தான் காதலித்தாய் என்று தெளிவாக எடுத்து வைத்ததும் அந்த குழப்பம் நீங்கும். அதில் தன்னுடைய காதலின் தீவிரத்தை உணர்ந்த ஜெயலலிதா அதில் குழப்பத்தை ஏற்பட்டதை அறிந்து தற்கொலைக்கும் துணிந்து விடுகிறார்.



வேலைக்காரியாக வரும் வாணிஸ்ரீ

ஊருக்கு உழைப்பவன் படத்தில் தன்னை திருமணம் செய்துகொண்ட செல்வம் வீட்டுக்கு வராததால் ஏற்பட்ட வறுமையும் குழந்தைக்கு ஏற்பட்ட நோயும் வாணிஸ்ரீயின் (மல்லிகா) மனதில் மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது. இதனால் இவர் தண்ணீரில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளப் போகிறார். அப்போது அங்கு வந்த வெண்ணிற ஆடை நிர்மலா (காஞ்சனா) தன் வீட்டில் வேலைக்காரியாக வந்து இருக்கும்படி அழைத்து வருகிறார். செல்வம் வேலைக்கு வந்த வீட்டில் தன் கணவர் செல்வம் அந்த வீட்டில் அந்த வீட்டுக்கார் குமார் ஆக இருப்பது கண்டு வாணிஸ்ரீ திகைத்துப் போகிறார்.

காஞ்சனா : *ஏங்க இவங்க குழந்தை இறந்து போயிருச்சாம், இந்த நிலைமையில கூட இவங்க புருஷன் பக்கத்திலே இல்லையாம். இது எவ்வளவு பெரிய கொடுமை பார்த்தீங்களா? மல்லிகா பாத்திங்களா என் வீட்டுக்காரருக்கு எப்பவுமே இலகின மனசு. பிறருடைய துயரத்தை அவரால தாங்கிக்கவே முடியாது. ஏங்க இப்பவாவது செல்வத்தை வீட்டுக்கு அனுப்புங்களேன்.*

மல்லிகா : *(அதிர்ச்சியுடன்) சோகத்துடன் வரும் எம்.ஜி.ஆரை பார்த்து, எங்கே போறீங்க? உங்களை தேடி நீங்களே போறீங்களா? உங்கள் மகன் சாவுக்குத்தான் நீங்கள் வரல, சவ அடக்கத்துக்காவது வரமாட்டீங்களா?*

காஞ்சனா : *நீ என்னம்மா சொல்ற? இவர் ஏன் வரனும்? இவர் என்னுடைய புருஷன்.*

மல்லிகா : *நான் இவருடைய மனைவி, செத்துப்போன என் செல்வத்தை தந்த செல்வமே இந்த செல்வம்தாம்மா.*

காஞ்சனா : *அதிர்ச்சியுடன் இல்லை . . .. இல்லை ... இத நான் நம்பவேமாட்டேன், நான் இவருடைய மனைவி (தாலியை காண்பித்து) இது இவர் கட்டின தாலி.*

மல்லிகா : *(தன் தாலியை காண்பித்து) இந்த தாலியையும் இவர்தாம்மா கட்டினாரு.*

காஞ்சனா : *ஏங்க இவங்க சொல்றதெல்லாம் உண்மைதானா, சொல்லுங்க . . . சொல்லுங்க*

செல்வம் : சோகத்தில் நிர்மலாவைப்பற்றி மருத்துவர் சொன்னதை நினைத்து பார்த்து நிற்ப்பார்.

மல்லிகா : *ஏன் யோசிக்கிறீங்க? என்ன சொல்லலாம்னு யோசிக்கிறீங்களா? இப்போ உங்க வாக்குமூலத்திலதாங்க என் வாழ்க்கையே ஊஞ்சலாடிட்டிருக்கு, சொல்லுங்க. இவதான் என்னோட மனைவின்னு ஒரே ஒரு வார்த்தை சொல்லுங்க.*

செல்வம் : *நோ . . . நோ.... காஞ்சனாவோட கணவன் இன்னொருத்திக்கு தாலி கட்டல, கட்டவும் மாட்டான்.*

மல்லிகா : *(அழுதுகொண்டே) பொய் . . . நீங்க அவுங்கல ஏமாத்தலாம், ஆனா என்ன ஏமாத்த முடியாது.*

காஞ்சனா : *ஐயோ . . . ஏன் இப்படி பேசாம நிக்கிறீங்க இவங்க சொல்றத பார்த்தா எல்லாம் உண்மையா இருக்கும்போல இருக்கே !!*

செல்வம் : *நான் யாரையும் ஏமாத்தல. இவங்கதான் குழந்தையை பறிகொடுத்ததனால என்னை புரிஞ்சிக்காம குழம்பிப்போயிருக்காங்க.*

மல்லிகா : *என்ன சொன்னீங்க, நீங்க . . . நீங்க பேசுற பேச்சா இது. எங்க என் முகத்த பாத்து சொல்லுங்க, நீங்க என்ன தொட்டு தாலி கட்டல?, நீங்க என்னோட புருஷன் இல்ல?*

அப்பொழுது திடீரென காஞ்சனா மயங்கி விழுந்து விடுவார்.

தன் கணவர் ஏற்கனவே திருமணம் ஆனவர் மிகப்பெரிய பணக்காரர் தன்னை ஏமாற்றி ஏழை போல நடித்து திருமணம் செய்திருக்கிறார் என்றுதான் அவருடைய மனம் எண்ணுகிறது. ஆனால் பிறகு வெண்ணிற ஆடை நிர்மலா உடல்நிலையை எடுத்துச்சொல்லி அவரையும்



அவருடைய குழந்தையையும் காப்பாற்ற வேண்டிய கடமை எம்.ஜி.ஆருக்கு இருப்பதை அறிந்ததும் வாணிஸ்ரீ நிலைமையை புரிந்து கொள்கிறார் ஆனால் இதற்கிடையில் மிகப் பெரிய குழப்பம் ஏற்படுகிறது.

இப்படத்தில் குமார், செல்வம் என்ற இரண்டு எம்.ஜி.ஆருக்கும் குழந்தை இருப்பது குறிப்பிடத்தக்கது. இதில் செல்வத்தின் குழந்தை இறந்து போவதும் குமாரின் குழந்தைக்காக செல்வம் குமாரின் வீட்டில் தங்கியிருப்பது செல்வத்தின் தியாக பண்பை விளக்குவதாக அமைகிறது.

ஆட்டோ எம்.ஜி.ஆரிடம் அடைக்கலம் ஆகும் லதா

சிரித்து வாழ வேண்டும் படத்தில் இரண்டு எம்.ஜி.ஆர். வேறுபட்டவர்கள் என்பதனால் கதாநாயகிக்கு குழப்பமே இல்லை. அதிலும்



இப்படத்தில் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால் ஒருவரின் ஜோடி இன்னொருவரிடம் அடைக்கலமாக படைக்கப்பட்டிருக்கும் லதா ஒரு முக்கிய விபத்துக்கு சாட்சி என்பதால் அவருடைய உயிருக்கு ஆபத்து வரக்கூடும் என்று கருதி இன்ஸ்பெக்டர் காவல்துறை அதிகாரி எம்.ஜி.ஆர். லதாவை தன்னுடைய நெருங்கிய நண்பரான ஆட்டோ ஓட்டும் அப்துல் ரஹ்மான் இடம் அடைக்கலமாக ஒப்படைத்திருப்பார். சூதாட்ட கிளப் வைத்திருந்து பின்பு மனம் திருந்தி ஆட்டோ ஓட்டுநரான அப்துல் ரகுமான் லதாவை தன் உடன்பிறவா தங்கையாக கருதி மதித்து அன்போடு தன் வீட்டில் இடம் கொடுத்து பாதுகாத்து வருவார்.

விடுதலை சாசனம்

ராஜா தேசிங்கு படத்தில் எம்.ஜி.ஆரின் உருவ ஒற்றுமையை கொண்டு ஒரு சதிச்செயல் திட்டமிடப்படும் முகம்மத்கான், தேசிங்குராஜா போன்ற தோற்றத்தில் இருப்பதால் அவரிடம் இருக்கும் விடுதலைச் சாசனத்தை ஏமாற்றி பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கத்தில் தேசிங்கு ராஜாவைப் போல உடை உடுத்தி தன்னுடைய முஸ்லிம் மத அடையாளங்களை அழித்துவிட்டு செஞ்சியின் அரண்மனை அந்தப்புரம் நுழைந்து விடுவான். அங்கு மகாராணி விடுதலை சாசனத்தை கொண்டு வா எனக் கேட்டு வாங்கிக் கொண்டு விரைந்து அவ்விடத்தை விட்டு அகன்று விடுவான். உருவ ஒற்றுமையை கொண்டு நடத்தப்படும் மட்டுமே காணப்பட்டது. இதுவும் இப்படம் பெரிய வெற்றி பெறாததற்கு ஒரு காரணமாகும். ஒரு எம்.ஜி.ஆர். இன்னொரு எம்.ஜி.ஆர். ஏமாற்றுவதும்

ஒரு எம்.ஜி.ஆருக்கு இன்னொரு எம்.ஜி.ஆர். எதிரியாக அமைவதும் மக்கள் ஏற்றுக் கொள்ளாத ஒரு போக்காக அமைந்திருந்ததை அறியலாம்.

அண்ணி நான் ராஜு

உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் அண்ணன் எம்.ஜி.ஆரின் ஜோடியான மஞ்சுளா தம்பி எம்.ஜி.ஆரை பார்த்து குழம்பி விடுவார். அணு விஞ்ஞானி முருகனும் அவரது காதலி மஞ்சுளாவும் பாட்டுப் பாடி மகிழ்ந்து கொண்டிருந்த வேளையில் வில்லனான அசோகன் உயரத்தில் இருக்கும்



முருகனை துப்பாக்கியால் சுட்டு விடுவார். அப்போது உயரத்தில் இருந்து கீழே விழுந்த முருகனுக்கு புத்தி பேதலித்துவிடும், இதனால் அவனிடமிருந்து ரகசியங்களை பெற இயலாது. மஞ்சுளா தன்னந்தனியாக ஒரு வீட்டில் முருகனை காணாமல் தவித்துக் கொண்டிருப்பார். அப்போது அங்கு வந்த முருகனின் தம்பி ராஜுவை பார்த்து முருக தான் தாடி இல்லாமல் வந்திருக்கிறார் என்று கருதி மஞ்சுளா அத்தான் என்று அணைக்க ஓடி வருவார். ஆனால் ராஜு சற்று விலகிக் கொண்டு அண்ணி நான் ராஜு என்றதும் மஞ்சுளா விலகிக் கொண்டு நடந்த விபரங்களை ராஜுவிடம் எடுத்துச் சொல்வார். பிறகு ராஜு முருகனை தேடும் பணியிலும் முருகன் கொடுத்து வைத்திருந்த ரகசிய குறிப்புகளை கண்டறியும் பணியிலும் இறங்குவார்.

இவ்வாறு இரட்டை வேடங்களில் ஒரே உருவத்தில் உருவ ஒற்றுமையுடன் எம்.ஜி.ஆர். நடிக்கும் படங்களில் கதாநாயகிகள் குழப்பம் கொள்ளும் காட்சிகள் அமைக்கப்பட்டு அக்காட்சிகளில் யாருமே தவறானவர்கள் கிடையாது எல்லோருமே நல்லவர்கள் என்று படம் பார்ப்போர் உணரும் வகையில் சிறப்பாக பாத்திரப்படைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. ராஜாதேசிங்கு தவிர்த்து திரைப்படங்களில் பாத்திரப் படைப்பின் சிறப்பு மக்களை வெகுவாக கவர்ந்தது.

5. நகைச்சுவை நடிகர், வில்லன் பங்கு

எம்.ஜி.ஆர். இரட்டை வேடம் ஏற்று நடிக்கும் படங்களில் எம்.ஜி.ஆர். பற்றிய காட்சிகள் அதிகம் எடுக்க வேண்டி இருப்பதனால் அது அடுத்தடுத்து இடம் பெறவேண்டும் போது இடையில் இணைக்கப்படும் காட்சிகளில் சுவாரஸ்யம் குறையக்கூடாது என்பதற்காக இப்படங்களில் இரண்டு மூன்று வில்லன்கள் இடம்பெறுவதுண்டு. நகைச்சுவைக்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். இரட்டை வேடமேற்று நடித்த படங்களில் நாடோடி மன்னன், இராஜா தேசிங்கு, கலையரசி, ஊருக்கு உழைப்பவன், அடிமைப்பெண் ஆகிய நான்கு படங்களைத் தவிர ஆகிய படங்களைத் தவிர மற்றவற்றில் நாகேஷ் நகைச்சுவைப் பாத்திரம் ஏற்று நடித்திருந்தார். இராஜா தேசிங்கு படத்தில் என் எஸ் கிருஷ்ணன், டி ஏ மதுரம் நகைச்சுவை வழங்கினர். நாடோடி மன்னனில் சந்திரபாபு ஆபத்சகாயம் என்ற பெயரில் வந்து ஜி சகுந்தலா, டி. பி. முத்துலட்சுமி ஆகிய இரண்டு ஜோடிகளுடன் நகைச்சுவை வழங்கினார். அடிமைப்பெண் படத்திலும் சந்திரபாபு நகைச்சுவை வேடம் ஏற்றிருந்தார்.

எதற்கு நகைச்சுவை?

தமிழ் படங்களில் நகைச்சுவை நடிகர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. இவர்கள் கதாநாயகனின் உடல் வலுவை காண்பிக்கவும் அவர்களின் உடல் வலிமையை தங்களின் உடல் மெலிவோடு ஒப்பிட்டு ரசிகர்கள் பார்க்கவும் உறுதுணையாக இருக்கின்றனர். வில்லன் எப்போதும் கெட்டவன் என்றும் கதாநாயகன் மிக மிக நல்லவன் என்றும் வித்தியாசம் காட்டப்படுவது போல கதாநாயகன் வல்லவன் , காமெடியன் இயலாதவன் என்றும் வித்தியாசம் காட்டவே காமெடியனின் கதாபாத்திரம் உருவாக்கப்படுகிறது. கதாநாயகன் நல்லவன் மற்றும் வல்லவன் என்பதை சேர்த்துக் காண்பிக்கவே வில்லனையும் காமெடியனையும் பல படங்களில் பல காட்சிகளில் ஒன்றாகவே வரும்படி சகோதரனாகவோ மகனாகவோ கையாளாகவோ கதாபாத்திரங்கள் கொடுக்கப்படும் . எம்.ஜி.ஆர். தனது படங்களில் வில்லன் மற்றும் காமெடியனை தன இமேஜை உயர்த்துவதற்கு ஏற்ற வகையில் சிறப்பாகப் பயன்படுத்தி இருப்பார்.

நாகேஷ்

ஆசை முகம் படத்தில் நாகேஷின் வேடம் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. அவர் மனோகர் எம்.ஜி.ஆரின் உதவியாளராக நெருங்கிய நண்பராக இருப்பார் அவர்தான் முதலில் மனோகர் வேஷத்தில் வந்திருக்கும் வஜ்ரவேலுவை இவர் வேறு ஆள் என்பதைப் புரிந்துகொண்டு இவர் மனோகர் அல்ல என்று அவர் பெற்றோரிடம் எடுத்துக் கூறுவர்.

மாட்டுக்கார வேலன் படத்தில் நாகேஷ் அட்வகேட் ரகு காதலிக்கும் லட்சுமியின் சகோதரனாக வருவார். அதாவது வில்லன் அசோகனின் மகனாக வருவார். இவர் தன் வீட்டில் வேலை பார்க்கும் சச்சுவை அவர் மாறுவேடத்தில் வந்து இருக்கும் போலீஸ் அதிகாரி என்று என்பதை அறியாமல் காதலிப்பார். சச்சினுக்கு எழுதிய காதல் கடிதம் அசோகனின் கால் 'ஷு'வில் ஒட்டிக்கொண்டு அவர் நடந்து போகும்போது அவர் பின்னாலேயே தவழ்ந்து சென்று அந்தக் காகிதத்தை பிடித்து இழுக்க கடைசியில் அது கிழிந்து 'பீஸ் பீஸ்' ஆகிவிடும். என் காதலை இப்படி பீஸ் பீஸ் ஆக்கி விட்டாயே என்று தன் தந்தையைப் பார்த்துப் புலம்புவதாக அமைந்த காட்சி ரசிகர்களின் மனதை கவர்ந்தது.

எங்க வீட்டுப் பிள்ளை படத்தில் நாகேஷ் இளங்கோவின் நண்பராக வருவார். துணிச்சலான இளங்கோவுக்கு ஒரு பயந்தாங்கொள்ளி நண்பராக நாகேஷ் இருப்பார். இவருக்கு அரை அங்குலத்தில் மூக்குக்கு கீழே ஒரு படுக்கைக் கோடு வரைந்து அதை மீசை என்று காட்டி இருப்பார்கள். இவர் உளறுவாயனாக வந்து கிழவனை, புலவன் என்றும் மேனேஜரை, டேமேஜர் என்றும் சொல்லுவார் இதுவே இப்படத்தின் சிறப்பான நகைச்சுவை அம்சமாகும். மேனேஜராக நடிக்கும் தங்கவேலுவின் மகள் மாதவியை இவர் இப்படத்தில் காதலிக்கும் காட்சிகள் உண்டு. ஆயிரத்தில் ஒருவன், பணம்படைத்தவன், எங்க வீட்டுப்பிள்ளை போன்ற படங்களில் நாகேஷ் மாதவி ஜோடி சிறப்பான நகைச்சுவையை அளித்தது.

குடியிருந்த கோயில் படத்தில் ஜெயலலிதாவின் அண்ணனாக நாகேஷ் நடித்திருப்பார். கருமியாக வாழும் வி.கே. இராமசாமியின் மகனாக வருவார். நண்பர்களுடன் அமர்ந்து ஜாக்பாட்டில் ஒரு லட்சம் விழுந்தால் என்ன செய்யலாம் எப்படி செலவு செய்யலாம் என்று பேசிக்கொண்டிருப்பார். அப்போது அவர் தந்தை வி. கே ராமசாமி யாருக்கு ஜாக்பாட் விழுந்திருக்கிறது என்று கேட்பார். இந்தமுறை யாருக்கோ விழுந்துவிட்டது. அடுத்தமுறை எனக்கு கிடைக்கும் என்பார். அதுக்கு வி.கே. ராமசாமி அதற்கு ஏன்டா அப்படி வெட்டிப்பேச்சு பேசி கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்கும்போது 'எப்போதோ வரும் ரயிலுக்கு இப்போதே கேட்டை பூட்டுடுவதில்லையா அதுபோலத்தான்' என்று பதிலளிப்பார். அதற்கு ராமசாமி 'எப்போவோ பிறக்கப்போகும் பிள்ளைக்கு இப்போவே பெயர் வைக்கலாமா' என்று கேட்டு எல்லோரையும் வெட்டி பயல்கள் என்று விரட்டி அடிப்பார்.

நாகேஷ் இப்படத்தில் பாட்டி வேடம் போட்டு தன் அப்பாவின் வங்கியிலேயே வந்து கொள்ளையடிப்பது ரசனையான காட்சியாகும்.

பட்டிக்காட்டு பொன்னையா படத்தில் நாகேஷ் வில்லன் நம்பியாரின் சகோதரனாக நடித்திருப்பார். நம்பியார் எம்.ஜி.ஆரின் வீட்டைக் கடனுக்காக எடுத்துக் கொள்ளும் பொழுது அந்தக் கடனில் இருந்து வீட்டை மீட்பதற்காக எம்.ஜி.ஆர். சென்னையிலிருந்து மாதாமாதம் பணம் அனுப்புவதை நம்பியார் எம்.ஜி.ஆரின்

பெற்றோருக்கு தெரிவிக்காமல் அபகரித்து கொள்வதைப் பார்த்து நாகேஷ் ஆத்திரப்படுவார்.

நாகேஷ் எம்.ஜி.ஆர். படங்களில் வில்லன்களோடு இருந்தாலும் எம்.ஜி.ஆர். உடன் இருந்தாலும் நல்லவராகவே நடித்திருப்பார். தன்னால் எதுவும் செய்ய இயலாத தைரியமற்ற கோழையாக காமெடியன் கதாபாத்திரம் அமைக்கப்படும். இத்தகைய கதாபாத்திரத்திற்கு ஒல்லியான உருவம் கொண்ட நாகேஷ், சந்திரபாபு ஆகியோர் மிகவும் பொருத்தமாக இருந்தனர்.

உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் நாகேஷ் திருட்டு ஆசை கொண்டவராக நடித்திருப்பார். இதைப்போன்ற ஒரு கதாபாத்திரத்தில் 'அப்பு தி கிரேட்' என்று தனக்குத் தானே பெயர் சூட்டிக்கொண்டு நான் ஆணையிட்டால் படத்தில் திருட்டு மோகம் கொண்டவராக நடித்திருப்பார். கதவில் இருக்கும் பூட்டு அவரைத் அன்பால் இழுப்பதாக ஒரு காட்சி அமைக்கப்பட்டிருக்கும். அதுபோல உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் ஏதாவது ஒரு பொருளைக் கண்டவுடன் அவருக்கு அதைத் திருட வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளங்கை அரிக்கத் தொடங்கும் உள்ளங்கையைச் சொறிந்து கொள்வார்.

எம்.ஜி.ஆர். ஓர் உணவகத்தில் கழட்டி வைத்த கைக்கடிகாரத்தை இவர் எடுத்து தன் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்ட போது அது அலாரம் அடிக்கும் சத்தம் கேட்கும். உடனே இவர் சுற்றுமுற்றும் பார்த்து எங்கே அலாரம் அடிக்கிறது என்று கேட்டு பதைபதைப்பார்.. அப்போது

எம்.ஜி.ஆர். மிஸ்டர் இங்கே வா என்று அழைத்து அவர் சட்டைப் பையில் இருந்து கடிகாரத்தை எடுப்பார். 'ஐயோ இது அலாரம் அடிக்கும் என்று எனக்கு தெரியாது' என்பார். அதற்கு எம்.ஜி.ஆர். 'உனக்கு எப்படி தெரியும் பணம் கொடுத்து வாங்கியவன் நான் அல்லவா' என்பார். 'இப்படி வெளியூரில் வந்து திருடுகிறாயே இங்கே இருப்பவர்கள் எல்லாம் நம்ம ஊர்க்காரன் திருடுவான் என்று நினைக்க மாட்டார்களா?' என்று கேட்டதற்கு 'ஐயோ தமிழனுக்கு தமிழன் காட்டிக் கொடுக்காதீர்கள்' என்று நாகேஷ் சொல்லுவார்.

எம்.ஜி.ஆர். நாகேஷைத் திருந்தும்படி அறிவுறுத்தி தன்னிடம் செயலாளராக வேலை கொடுத்து வைத்துக்கொள்வார். அவருடைய திருட்டுக் குணம் அவரை விட்டுப் போகாது. ஆனாலும் அத திருட்டுக் குணத்தால் பல நன்மைகள் கிடைக்கும். ஆராய்ச்சிக் குறிப்பு இருக்கும் டாலர் சங்கிலியை சந்திரகலாவின் கழுத்திலிருந்து வில்லனான சியாம் சுந்தர் பறித்துக்கொண்டு போவார். நாகேஷ் அந்தச் சங்கிலியை எடுக்க முயல்வார். ஆனால் டாலர் மட்டுமே இவர் கையில் சிக்கும் சங்கிலி சியாம் சுந்தர் கையில் மாட்டிக்கொள்ளும். ஆராய்ச்சிக் குறிப்பு டாலரில் தான் இருக்கும். ஆக இவருடைய திருட்டுக் குணத்தால் இந்த படத்தில் எம்.ஜி.ஆருக்கு கிடைக்கவேண்டிய ஆராய்ச்சிக் குறிப்பு கிடைத்துவிடும்.

உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் இன்னொரு காட்சியிலும் இவருடைய திருட்டுக் குணத்தால் ஒரு பெரிய நன்மை நடக்கும் முருகனின்

காதலி மஞ்சுளாவின் வீட்டில் அவளைப் பார்க்க வருபவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக வில்லன் அசோகன் அங்கு ஒரு பொம்மைக்குள் ஒரு ரகசிய ‘மைக்’ பொருத்தி வைத்திருப்பான். அந்த பொம்மையின் அழகைப்பார்த்து நாகேஷ் அதனை எடுத்து தன் சட்டைக்குள் வைத்துக் கொள்வார். எம்.ஜி.ஆர். மஞ்சுளாவிடம் பேசிக்கொண்டிருக்கும்போது தன்னையறியாமல் தன் சட்டையை அழுத்தவும் சட்டைக்குள் இருந்த பொம்மை கீங் என்று கத்தும்.

இது என்ன சத்தம் என்று கேட்கும் நாகேஷை எம்.ஜி.ஆர். அதட்டி ‘சட்டைக்குள் என்ன வைத்திருக்கிறாய் வெளியே எடு’ என்று கூறி அந்தப் பொம்மையை வாங்குவார். பொம்மையை வாங்கி அதனை மேலும் கீழுமாக பார்க்கும் போது அந்த பொம்மையின் அடிப்பகுதியில் ஒலிப்பதிவுக் கருவி பொருத்தப்பட்டிருப்பது தெரியவரும். உடனே அந்த



பொம்மையைக் கீழே போட்டு காலால் மிதித்து விடுவார். இவர்கள் பேசுவதை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த வில்லன் அசோகனின் காதுக்குள் பொம்மை நசுங்கிய சத்தம் மிக பயங்கரமாகக் கேட்டு அவன் காது செவிடாகி விட்டது போல கத்துவான். படம் பார்ப்பவர்களுக்குச் சிரிப்பையும் மகிழ்ச்சியையும் வரவழைக்கும். கெட்டவன் கெட்டுப் போனான் என்ற கருத்து இந்த காட்சியில் உணரப்படும். இவ்வாறு இப்படத்தில் நாகேஷ் செய்யும் திருட்டுத்தனம் படத்தின் கதையோட்டத்திற்கு மிகவும் உதவியாக இருப்பதால் படம் பார்ப்பவர்கள் பெரிதாகக் கருதாமல் விட்டுவிட்டனர். காமெடியனின் திருட்டுத்தனத்தைப் பெரிதாகக் கருதவில்லை. சிரிப்பாக எடுத்துக்கொண்டனர்.

உலகம் சுற்றும் வாலிபன் படப்பிடிப்பின் போது நாகேஷின் பிறந்த நாள் வந்தது. அப்போது எம்.ஜி.ஆர். நாகேஷுக்கு ஒன்பது கற்கள் பதித்த வைர மோதிரம் பரிசளித்தார்.

அடிமைப்பெண் படத்தில் சந்திரபாபு நகைச்சுவைக் காட்சிகளில் நடித்திருந்தார். வேங்கையனை ஜீவா பண்படுத்தி திருத்தி மனித நாகரிகத்தைக் கற்றுக்கொடுக்கும் காட்சிகளில் இது வீண் வேலை என்று சந்திரபாபு அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். ஒரு காட்சியில் சிறுமிக்கு ஜெயலலிதா முத்தம் கொடுத்ததும் எம்.ஜி.ஆரும் அவரிடம் வந்து முத்தம் கேட்பார். அப்போது ‘இதற்கு தான் நான் சொன்னேன் கேட்டாயா’ என்று சந்திரபாபு ஜெயலலிதாவிடம் கோபிப்பார்.

பகுத்தறிவை விளக்கும் காட்சிகளில் சந்திரபாபு நடித்திருப்பார். பவளமல்லியின் அரண்மனையில் மந்திரவாதியாக மாறு வேடமிட்டு சோவுக்கு பதிலாக அங்கு போய்ச் சேரும் சந்திர பாபு அங்கு அம்முக்குட்டி புஷ்பமாலாவின் மண்டை ஓட்டுக்குள் புறாவை திணித்து வைத்து மண்டையோடு பறக்கும் காட்சி போன்ற சில மாய தந்திரக் காட்சிகளை கண்டு அஞ்சி நடுங்குவார். மேலும் எலும்புக்கூடு போல் காட்சி அளிப்பதற்காக கருப்பு துணியில் எலும்புக்கூடு போன்ற வடிவம் போட்டிருப்பதை அணிந்துகொண்டு இருட்டில் வெறும் எலும்புக்கூடு அசைவது போல அசைந்து அச்சம் ஊட்டுவார். மந்திரம் என்ற பெயரில் நடத்தப்படும் தந்திரக் காட்சிகளை இவர் படத்தில் நடித்து காட்டியிருந்தார். வில்லன் அசோகன் அடிமைப்பெண் படம் சிறுவர்களும் ரசிக்கத்தக்க படமாக இருந்தாலும் இப்படம் பெரிய வெற்றியைப் பெற்று வெள்ளிவிழா படமாக விளங்கியது.

நம்பியார்

இரட்டை வேடம் ஏற்று நடித்த படங்களில் நம்பியார் அதிக படங்களில் வில்லனாக நடித்து இருக்கிறார். எம்.ஜி.ஆர். படங்களில் அதிக எண்ணிக்கையில் வில்லனாக நடித்தவர் அசோகன் என்றாலும் ‘எம்.ஜி.ஆர். கதாநாயகன் என்றால் நம்பியார் தான் வில்லன்’ என்ற எண்ணம் மக்களிடையே பரவி இருக்கிறது.

எம்.ஜி.ஆரின் இரட்டை வேடப் படங்களில் ஏழு படங்களில் நம்பியார் வில்லனாக வருகிறார்.

ஆனால் எட்டுப் படங்களில் அவர் இடம்பெற்றுள்ளார். நாடோடி மன்னன் படத்தில் பெரிய வில்லனாக இல்லாவிட்டாலும் வில்லன் குழுவைச் சேர்ந்தவர்களில் ஒருவனாக அப்பாவி பிங்கலனாக இடம் பெற்றுள்ளார்.

கலையரசி, எங்கவீட்டுப்பிள்ளை, குடியிருந்த கோவில், உலகம் சுற்றும் வாலிபன், சிரித்து வாழவேண்டும், நாளை நமதே ஆகிய எட்டுப் படங்களில் படம் முழுக்க வரும் கொடுமனம் படைத்த வில்லனாக நடித்திருக்கிறார். உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் ஒரே ஒரு சண்டைக் காட்சிக்கு மட்டுமே வருவார். இப்படத்தில் அசோகன் முக்கிய வில்லனாக நடித்துள்ளார்.

நாடோடி மன்னன் படத்தில் பிங்கலன் என்ற கதாபாத்திரத்தில் மார்த்தாண்டன் மன்னனுக்கு அடுத்த வாரிசு உரிமை உடையவராக ஓர் அப்பாவியாக நடித்திருப்பார். இதில் ராஜகுருவாக வரும் பி எஸ் வீரப்பாவுடன், எம்.ஜி.ஆரின் அண்ணன் எம் ஜி சக்கரபாணி கார்மேகம் என்ற பெயரிலும், நம்பியா ர் பிங்கலன் என்ற பெயரிலும் ஒரு குழுவாக வில்லத்தனம் செய்வர்.

ஆசை முகம் படத்தில் வஜ்ரவேல் என்ற ராம்தாசை முகம் மாற்றி அனுப்பிவிடுவார். இப்படத்தில் நம்பியார் ஒரு தீயவர கூட்டத்துக்கு தலைவனாக வில்லனாக நடித்துள்ளார்.

கலையரசி படத்தில் வீணை வாசிக்கும் வாணியை தங்களுடைய நாடான சந்திர மண்டலத்துக்கு அழைத்துச் சென்று அங்கு எல்லோருக்கும் கலைகளை கற்றுத் தர வேண்டும்

என்ற நோக்கத்தில் கடத்திச் செல்வார். இப்படத்தில் இவரே முக்கிய வில்லன் ஆவார். .

எங்க வீட்டுப் பிள்ளை படத்தில் நம்பியார் கொடுரமான வில்லன். தன் அக்காவை இரண்டாம் தாரமாக மணமுடித்தவருடைய பிள்ளைகளுக்கு சொத்துக்களை அக்காள் கணவர் எழுதி வைத்ததனால் அவருடைய மகன் ராமுவை அப்பாவியாக பயந்தாங்கொள்ளியாக வளர்ப்பார். அந்த ராமுவுடன் இணைந்து பிறந்த இரட்டை சகோதரரான இளங்கோ இன்னோரிடத்தில் வளர்கிறார் என்பது எவருக்கும் தெரியாது. இந்த உண்மை தெரியாமல் இவர் ராமுவிடமிருந்து சொத்துக்களை எழுதிப் பெற்றுக் கொள்ள விரும்புவார். ராமுவை சவுக்கால் அடித்து பயமுறுத்தி வைத்திருப்பார்.

இளங்கோ ராமுவினிடத்தில் வந்து சேர்ந்ததும் பதிலுக்கு நம்பியாரை சவுக்கால் அடித்து பயமுறுத்தி



வைப்பார். இவ்வாறாக நம்பியார் இந்த படத்தில் ஒரு முக்கிய வில்லனாக நடித்திது மக்களின் ஏகோபித்த வெறுப்பைப் பெற்றார். எம்.ஜி.ஆரை சவுக்கால் அடிக்கும் காட்சிகள் இவர் மிது ரசிகர்களுக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தின.

குடியிருந்த கோவில் படத்தில் எம்.ஜி.ஆரின் தந்தையான ராம்தாஸ் நம்பியாருக்கு எதிராக ஓர் உண்மையை நீதிமன்றத்தில் தெரிவித்ததால் நம்பியார் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. நம்பியார் சிறைக்குச் சென்றதும் அவர் திரும்பி வரமாட்டார் என்று நினைத்துக் கொண்டிருக்கும் வேளையில் அவர் சிறையிலிருந்து தப்பி வந்து ராமதாஸைக் கொன்றுவிட்டு அவருடைய பிள்ளைகளில் ஒன்றை தூக்கிச் சென்று, பாபு என்ற பெயரில் திருடனாக வளர்ப்பார்.

தாயாரிடம் வளரும் ஒரு குழந்தை ஆனந்த் என்ற பெயரில் அமைதியான மேடைப் பாடகனாக மென்மையானவனாக வளரும். தன்னுடைய ஒரு பிள்ளை தன தந்தையைக் கொன்ற கொலைகாரனாகிய நம்பியாரிடம் வளர்வதை அறிந்த தாயார் உண்மைகளை எடுத்துச் சொல்வார். இப்போது இரு சகோதரர்களுக்கும் நம்பியார் பகைவனாகிவிடுகிறார்.

உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் புத்தர் கோயிலுக்குள் நடக்கும் ஒரு சண்டை காட்சியில் மட்டும் நம்பியார் நடித்திருப்பார். அவர் புத்த துறவியாக போலி வேடம் தரித்து உட்கார்ந்திருப்பார். துறவியுடன் நடக்கும்

சண்டையில் அவர் எம்.ஜி.ஆரை பலமுறை அடித்தும் எம்.ஜி.ஆர். திருப்பித் தாக்க மாட்டார். கோயிலை விட்டு வெளியே வந்ததும் அவரது தாக்குதலைத் தடுத்து அவரை கட்டிப்போடுவார்..

சிரித்து வாழ வேண்டும் படத்தில் சிறுவயதில் எம்.ஜி.ஆரின் பெற்றோர்களை கொலை செய்தவராக நம்பியார் நடித்திருப்பார். இளம் பருவத்தில் கொலையைப் பார்த்தபோது கொலைகாரனின் கையில் தொங்கும் ஒரு குதிரை படம் சிறுவனின் மனதில் பதிந்திருக்கும் அவன் தூங்கும்போதெல்லாம் குதிரையில் ஒரு கருப்பு உடை தரித்த வீரன் கொலைவெறியோடு வருவது போன்ற கனவு திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருக்கும். இதனால் இச்சிறுவன் வளர்ந்ததும், காவல் துறை அதிகாரியாகிவிடுவான். இக்கதாபாத்திரத்தில் நடித்த எம்.ஜி.ஆர். கோபக்கார இளைஞனாக வருவார். ‘

நாளை நமதே படத்தில் நம்பியாரின் முகத்தை படமாக வரைந்து கொடுத்த ஓவியரை அவர் கொலை செய்துவிடுவார். அந்த ஓவியருடைய பிள்ளைகள் மூவர். மூவரில் இருவர் வேடத்தில் எம்.ஜி.ஆர். நடித்திருப்பார். இக்கொலை நடக்கும் பொது பிள்ளைகள் ஓடிப் போனதில் ஆளுக்கொரு பக்கமாக பிரிந்து சென்றுவிடுவர். தனது சகோதரர்களுடன் சேர வேண்டும் என்று மூவரும் துடிப்புடன் இருப்பார்கள்.

இதில் நம்பியார் மலையாள மொழியில் ஒரு வசனம் பேசுவார். நடு வகிடு எடுத்து தலை சீவி கருணாநிதியைப் போல தலைமுடி வைத்திருப்பார்.

மூத்த அண்ணனாக வரும் எம்.ஜி.ஆர். [சங்கர்] தன் தந்தையைக் கொன்றவரை அறிந்துகொள்வதற்காக கோபாலகிருஷ்ணனின் உதவியை நாடுவார். கோபாலகிருஷ்ணன் நம்பியாரின் கால் ஷு அளவு ஒன்று எட்டு மற்றொன்று ஒன்பது என்று ஒரு குறிப்பை கொடுப்பார். பிறகு சங்கர் ஒவ்வொரு செருப்புக் கடையாகப் போய் உங்களின் கஸ்டமர்கள் யாராவது இரண்டு நம்பர் கொண்ட செருப்புகள் அணிகிறார்களா என்று கேட்டு கொண்டே வருவார்.

இறுதிக் காட்சியில் நம்பியாரின் கால் இரயிலின் தண்டவாளத்தில் சிக்கிக் கொள்ளும். இந்தியில் இப்படத்தில் சங்கராக வரும் தர்மேந்திராவுக்கு கருப்பு மேக்கப் கிடையாது . இவரே படத்தின் கதாநாயகன் ஆவார். ஆனால் தமிழில் விசாக நடித்திருக்கும் எம்.ஜி.ஆர். படத்தின் கதாநாயகன் போல படம் முழுக்க வருவார். சில காட்சிகளில் மட்டுமே சங்கராக நடிக்கும் கருப்பு எம்.ஜி.ஆர். வருவார். இந்திப் படத்தில் கடைசி சகோதரருக்கு ஒரு ஜோடி உண்டு. தமிழில் அவரும் சில காட்சிகள் மட்டுமே வருவார். அவருக்கு ஜோடியும் இல்லை.

வில்லனுக்கு நல்ல வாய்ப்பு இருக்கும் படங்களில் எம்.ஜி.ஆர். நம்பியாரையே ஒப்பந்தம் செய்துள்ளார்.

6. எதிரணி கவிஞர் வைரமுத்து போற்றும் எம்.ஜி.ஆர்.

[முக நூலில் இருந்து பெறப்பட்டது]

ஒரு நாளும் உங்களை நான் தேடி வந்து சந்தித்ததில்லை. ஆனால், அந்த ஒரு கறுப்புப் பகலில் மட்டும் உங்களை ஓடிவந்து பார்க்காமல் என்னால் உட்கார முடியவில்லை. ராஜாஜி மண்டபத்தில் உங்கள் இறுதிப் படுக்கையில் ரோஜா மாலைகளுக்கு மத்தியில் ஒரு ரோஜா மலையாய்க் கிடத்தப்பட்டிருந்தீர்கள்.

உங்களைத் தொட்டுப் பார்க்க நினைத்து, தொட முடிந்த தூரம் வந்தும் தொட முடியாமல் நின்றேன்.

எம்.ஜி.ஆருக்கே மரணமா?

எனக்கு முதலில் மரணப்பயம் வந்தது.

காற்று – சமுத்திரம் – வானம் – எம்.ஜி.ஆர்

இவைகளெல்லாம் மரணிக்க முடியாத சமாசாரங்கள் என்று எங்கள் கிராமத்து மக்களைப் போலவே நானும் நம்பிக்கிடந்த நாட்களுண்டு.

அன்று அந்த நான்காவது நம்பிக்கை நசிந்து விட்டது.

47 முதல் 87 வரை நாற்பதாண்டு காலம் தமிழர்கள் உச்சரிக்கும் ஐம்பது வார்த்தைகளில் ஒரு வார்த்தையாய் இருந்த பெயரை மரணத்தின் மாயக்கரம் அழித்துவிட்டதா?

இமைக்காமல் கிடந்த உங்களை இமைக்காமல் பார்த்தேன்.

நீண்டநேரம் என்னை அங்கே நிற்க அனுமதிக்கவில்லை.

ஜனத்திரள் என்னைப் பிதுக்கியது.

சட்டென்று நகர்ந்து ராஜாஜி ஹாலின் ராட்சதத் தூண் ஒன்றை அடைக்கலம் பற்றி, கூட்டத்தை நோட்டமிட்டேன். அங்கங்கே அரசாங்க விதிகளுக்கு உட்பட்டுச் சிலர் அழுது கொண்டிருந்தார்கள். நிஜக்கண்ணீர் வடித்தவர் பலர் ; நீலிக்கண்ணீர் வடித்தவர் சிலர். வருத்தக் கண்ணீர் வடித்தவர் பலர்.

வாடகைக் கண்ணீர் வடித்தவர் சிலர். உயிரைக் கண்ணீராய் ஒழுக விட்டவர் பலர் ; மிகப் பலர்.

என்னால் அழ முடியவில்லை.

அழுகை வரவில்லை.

மனதில் மட்டும் சோகப் பனிமுட்டம்.

“நான் ரசித்துக் காதலித்த ராஜகுமாரா ! உனக்கா மரணம்?”என்று உதட்டுக்குத் தெரியாமல் நாக்கு உச்சரித்துக் கொண்டது.

அங்கே கூடியிருந்த அரசியல்வாதிகளில் பலர் நாளைகளைப் பற்றியே தர்க்கித்துக் கொண்டிருக்க- நானோ உங்கள் நேற்றுகளை நினைத்தே விக்கித்துக் கொண்டிருந்தேன்.

கண்டியோ வடவனூரோ எங்கேயோ பிறந்தீர்கள் ; தமிழ்நாட்டுக்குள் பிழைக்க வந்தீர்கள் ; தமிழ்நாட்டில் பல பேரைப் பிழைக்க வைத்தீர்கள். கும்பகோணம் யானையடிப் பள்ளி வறுமையில் கழிந்த வால்டாக்ஸ் ரோடு முகம் பார்க்க முடியாமல் முதல் மனைவியின் மரணம் – கோடையில் எப்போதாவது படபட வென்று பொழிந்து ஏமாற்றிவிட்டுப்போகும் மேகம் மாதிரி படவுலகில் அவ்வப்போது சின்னச்சின்ன வாய்ப்புகள்.

ஒரே ஒரு'க்ளோஸ்-அப்' போடக்கூடாதா என்று மூத்த இயக்குனர்களிடம் முறையீடு – கதருக்குள் இருந்து கொண்டு கலைஞர் மீது காதல் – வந்து சேர்ந்த வாய்ப்புகளைச் சிதறாமல் பயன்படுத்திக் கொண்ட செம்மை – முப்பது வயதுக்கு மேல் வாழ்க்கையில் சந்திரோதயம், நாற்பதுக்கு மேல் சூரியோதயம் – படபடவென்று வளர்ச்சி – மனிதநேயம் என்னும் மாட்சி காட்சியிலிருந்து கட்சி – கட்சியிலிருந்து ஆட்சி – அப்பப்பா என்ன வளர்ச்சி உங்கள் வளர்ச்சி !

அயல் வீட்டுக்காரருக்கு அறிமுகமில்லாத ஒரு வாழ்க்கையோடு தொடக்கமானீர்கள்; அரசாங்க மரியாதையோடு அடக்கமானீர்கள்.

அன்று கடைசிப் படுக்கையில் உங்களைக் கண்டபோது – ஒரு சரித்திரம் சரிந்து கிடக்கிறது என்று நினைத்தேன். ஓர் அபூர்வம் முடிந்துவிட்டது என்று நினைத்தேன்.

ஒன்றன் பின் ஒன்றாய் ஞாபக மேகங்கள் …….

இருபது வயதில் என்னைத் தூங்கவிடாமல் செய்தது காதல் ;

எட்டு வயதில் என்னைத் தூங்கவிடாமல் செய்தவர் நீங்கள்.

கதைகளிலும் கனவுகளிலும் நான் கற்பனை செய்து வைத்திருந்த ராஜகுமாரன் நீங்கள் தான் என்று நினைத்தேன்.

உங்களின் இரட்டை நாடியின் பள்ளத் தாக்கில் குடியிருந்தேன்.

உங்கள் முகத்தின் மீது மீசைவைத்த நிலா என்று ஆசை வைத்தேன்.

நீங்கள் புன்னகை சிந்தும் போது நான் வழிந்தேன். வாள் வீச்சில் வசமிழந்தேன். உங்கள் பாடல்களில் நானும் ஒரு வார்த்தையுமாய் ; நானும் ஒரு வாத்தியமாய் ஆனேன்.

ஒரு தாளம் கட்டுமானத்தில் சிரிக்கும் உங்கள் சங்கீதச் சிரிப்பில் வார்த்தைகளில் பிசிறடிக்காத உங்கள் வசன உச்சரிப்பில் நான் கரைந்து போனேன்.

பெரியகுளம் ரஹீம் டாக்கீஸில் “நாடோடி மன்னன்”பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்து, தூக்கத்தைத் தொலைத்துவிட்டு, சுவரில்

நசுக்கப்பட்ட மூட்டைப் பூச்சிகளின் ரத்தக் கோடுகளை அந்தப் படத்தில் வரும் கயிற்றுப் பாலமாய்க் கற்பனை செய்து கொண்டு விடிய விடிய விழித்திருக்கிறேன்.

“மன்னனல்ல மார்த்தாண்டன்” என்று உங்களைப் போல் மூக்கில் சைகை செய்யப் போய் சுட்டுவிரல் நகம்பட்டு சில்லி மூக்கு உடைந்திருக்கிறேன்.

பிரமிக்க மட்டுமே தெரிந்த அந்தப் பிஞ்சு வயதில் எனக்குள் கனவுகளைப் பெருகவிட்டதிலும் கற்பனைகளைத் திருகிவிட்டதிலும் உங்கள் ராஜாராணிக் கதைகளுக்குப் பெரும்பங்கு உண்டு என்பதை நான் ரகசியமாய் வைக்க விரும்பவில்லை.

நூறு சரித்திரப் புத்தகங்கள் ஏற்படுத்த முடிந்த கிளர்ச்சியை உங்கள் ஒரே ஒரு படம் எனக்குள் ஏற்படுத்தியிருக்கிறது. அந்த பாதிப்பு எனக்கு மட்டும் இல்லை. குடை பிடித்துக் கொண்டவர்களையும் எங்கோ ஓர் ஓரத்தில் நனைந்துவிடுகிற அடைமழை மாதிரி உங்களை விமர்சித்தவர்களைக் கூட ஏதேனும் ஒரு பொழுதில் நாசூக்காக நனைத்தே இருக்கிறீர்கள்.

என்ன காரணம் என்று எண்ணிப் பார்க்கிறேன். நீங்கள் மந்திரத்தால் மாங்காயோ தந்திரத்தால் தேங்காயோ தருவித்தவரில்லை. வரலாற்று ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் அகழ்ந்து பார்த்தால் மட்டுமே உங்கள் வெற்றியின் வேர்களை விளங்கிக் கொள்ள முடியும்.

இந்த மண்ணில் எங்கள் மனிதர்கள் சில நூற்றாண்டுகளாக எதை இழந்துவிட்டு நின்றார்களோ அதையே நீங்கள் தோண்டி எடுத்துத் துடைத்துக் கொடுத்தீர்கள்; விறுவிறுப்பாய் விலைபோயிற்று.

உடலும் உயிரும் மாதிரி காதலும் வீரமும் கலந்தே விளைந்த களம் இந்தத் தமிழ் நிலம்.

காதலை ஒரு கண்ணாகவும் வீரத்தை ஒரு கண்ணாகவும் போற்றிய தமிழன், பொருளாதாரத்தை நெற்றிக் கண்ணாய் நினைக்காமல் போனான் என்பதே அவன் முறிந்து போனதற்கு மூல காரணம்.

பொருதாரச் சிந்தனைக்கே வராத தமிழன், காதலையும் வீரத்தையும் மட்டும் கோவணத்தில் முடிந்து வைத்த தங்கக் காசுகளைப் போல ரகசியமாய்க் காப்பாற்றியே வந்திருக்கிறான்.

இடைக்காலத்தில் தமிழன் அடிமைச் சக்தியில் சிக்கவைக்கப்பட்டான்.

அடிக்கடி எஜமானர்கள் மாறினார்கள் என்பதைத் தவிர அவன் வாழ்க்கையில் மாற்றமே இல்லை.

அவனது வீரம் காயடிக்கப்பட்டது ; காதல் கருவறுக்கப்பட்டது.

இழந்து போன ஆனால் இழக்க விரும்பாத அந்தப் பண்புகளை வெள்ளித் திரையில் நீங்கள் வெளிச்சம் போட்ட போது இந்த நாட்டு மக்களின் தேவைகள் கனவுகளில் தீர்த்துவைக்கப்பட்டன.

நீங்கள் கனவுகளைத்தான் வளர்த்தீர்கள்; ஆனால் கனவுகள் தேவைப்பட்டன.

வீராங்கன், உதயசூரியன், கரிகாலன், மணிவண்ணன், மாமல்லன்

என்றெல்லாம் நீங்கள் பெயர்சூட்டிக் கொண்டபோது தமிழன் தன் இறந்தகால பிம்பங்களைத் தரிசித்தான்.

நீங்கள் கட்டிப்பிடித்து கானம் படித்துக் காதலித்தபோது தமிழன் புதைந்து போன காதல் பண்பைப் புதுப்படித்துக் கொண்டான்.

உங்கள் தாய்மொழி மலையாளம் என்பதை மறக்கடிப்பதற்கும் நீங்கள் தமிழ்க் கலாச்சாரத்தில் கரைந்து போனவர் என்று காட்டிக் கொள்வதற்கும் நீங்கள் எடுத்த முயற்சிகள் முழு வெற்றி பெற்றன.

மலையாள மரபுப்படித் தாயார் பெயரைத் தான் இனிஷியலாகக் கொள்வார்கள். ஆனால் நீங்களோ தமிழ் மரபுப் படி தந்தை பெயரைத்தான் இனிஷிலாகக் கொண்டீர்கள்.

உங்கள் தமிழ் உச்சரிப்பின் எந்த ஒரு வார்த்தையிலும் மலையாளத்தின் பிசிறு ஒட்டாமல் சுத்தமாய்த் துடைத்தெடுத்தீர்கள்.

'மருதநாட்டு இளவரசி'யின் ஒப்பந்தப் பத்திரத்தின் உச்சியில் 'முருகன் துண'என்றுதான் எழுதியிருக்கிறீர்கள். (முருகன் அவர்கள் தமிழ்க் கடவுள் என்று கருதப்படுகிறவர் என்பது கவனிக்கத்தக்கது).

நீங்கள் முதன் முதலாய் இயக்கித் தயாரித்த "நாடோடி மன்னனில்" தொடக்கப் பாடலாக "செந்தமிழே வணக்கம்" என்று தான் ஆரம்பித்தீர்கள். இப்படி.....இப்படியெல்லாம் அந்நியத்தோலை உரித்து உரித்துத் தமிழ்த் தோல் தரித்துக் கொண்டீர்கள்.

உங்களைப் பற்றி என் செவிகள் சேகரித்திருக்கும் செய்திகள் ருசியானவை.

ஒரு பாடகர் ஒரு மேடையில் உங்கள் பழைய பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கிறார். இரண்டு மணி நேரம் கரைந்து போன நீங்கள் இப்போது என் கைவசத்தில் இருப்பது இது மட்டும் தான் என்று உங்கள் விலையுயர்ந்த கைக்கடிகாரத்தைக் கழற்றி அந்தப் பாடகருக்குப் பரிசளிக்கிறீர்கள் ; அது உங்கள் ஈகைக்குச் சாட்சி.

நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இறந்து போன உங்கள் இரண்டாவது மனைவியின் இல்லம் சென்றபோது படுக்கையறையின் கட்டிலைப் பார்த்துக் குலுங்கிக் குலுங்கி அழுதிருக்கிறீர்கள் ; அது உங்கள் ஈரத்திற்குச் சாட்சி.

தி.மு.க மாநாடுகளில் மாநாடு முடிந்ததும் பந்தலுக்கடியிலேயே படுத்துக்கிடக்கும் வெளியூர் மக்களுக்கு அவர்களே அறியாமல் அதிகாலைச் சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்துவிட்டுப் போவீர்களே! அது உங்கள் மனிதாபிமானத்துக்குச் சாட்சி.

பொதுக் கூட்டங்கள் முடித்துவிட்டு நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு வைகை அணைக்கு வந்து பொன்னாங்கண்ணிக் கீரை இருந்தால் சாப்பிடுவேன்

என்று நீங்கள் நிபந்தனை விதிக்க, ஆளுக்கொரு திசையில் அதிகாரிகள் பறக்க, பொன்னாங்கண்ணிக் கீரை தயாராகும் வரை சாப்பிடாமல் இருந்தீர்களாமே ! அது உங்கள் உறுதிக்குச் சாட்சி.

தொலைபேசி இணைப்பகத்திலிருந்த உங்கள் ரசிகர் ஒருவர் உங்கள் குரல் கேட்க ஆசைப்பட்டு இரவு பதினொரு மணிக்கு உங்கள் வீட்டுத் தொலைபேசி சுழற்றப்படுகிற சத்தம் கேட்டு ஆசையாய் எடுத்துக் கேட்க'டொக்'என்ற அந்தச் சின்ன சத்தத்திலேயே தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுகிறது என்பது உணர்ந்து கொண்டு "யாராயிருந்தாலும் தயவு செய்து போனை வையுங்கள்" என்று உடனே உத்தரவிட்டீர்களாமே ! அது உங்கள் கூர்மைக்குச் சாட்சி.

வெளிநாட்டில் கொடுத்த பணத்தை பி.சுசீலா தமிழ்நாட்டில் திருப்பித் தரவந்தபோது "ஏன் என்னுடைய உறவை முறித்துக் கொள்ளப் பார்கிறீர்களா"? என்று உரிமையோடு மறுத்து விட்டீர்களாமே. அது உங்கள் பெருந்தன்மைக்குச் சாட்சி.

நீங்கள் முதலமைச்சர். அப்போது தான் என் பெயரைத் தமிழ்நாடு மெல்ல மெல்ல எழுத்துக் கூட்டத் தொடங்கியிருக்கிறது.என் நண்பர் க.மு. அரங்கனின் "வியர்வை முத்துக்கள்"என்ற கவிதை நூலைக் கலைஞர் வெளியிடுகிறார். நான் முதற்பிரதி பெற்றுக் கொள்கிறேன். கலைஞரின் எழுத்துக்கள் என்னைக் கவிஞனாக்கின என்று அங்கே பேசுகிறேன். இது நடந்தது 18.5.1982 மாலை. 19.5.82 காலை ஐ.ஜி. அலுவலகம் தூள் பறக்கிறது.

“வைரமுத்து கலைஞரோடு ஏன் போனார்? எதற்குப் போனார்? எப்படிப் போனார்? என்று அவசர அவசரமாய் திராவகக் கேள்விகள் வீசித் திணற அடிக்கிறீர்கள்.

என்னைப் பற்றிய கோப்பு ஒன்று உங்கள் பார்வைக்கு வருகிறது. என் ஜாதகம் அறிகிறீர்கள்.

தேசிய விருது வாங்கிய பிறகு முதலமைச்சரான உங்களைச் சந்திக்காமல் கலைஞரைச் சந்தித்து வாழ்த்துப் பெறுகிறேன். கவனிக்கிறீர்கள்.

இத்தனைக்குப் பிறகும் எனக்கு இரண்டு முறை விருது தருகிறீர்கள்.

உங்கள் பெருந்தன்மை கண்டு நெகிழ்ந்து போகிறேன்.

உங்கள் வெற்றியிலிருந்து நாங்கள் கற்றுக் கொள்வதற்கு ஒன்றே ஒன்று உண்டு அது தான்-

நசிந்து போனவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது.

உங்கள் பாடல்களெல்லாம் தமிழ்நாட்டுக்கு நீங்கள் செய்த ரத்ததானம்.

ஒரு பாடலின் பாடலாசிரியன் காணாமல் போவது பாடலுக்கு வெற்றி ஆகாது என்ற போதிலும், பாடலாசிரியன் முகம் கரைந்து போய் நீங்கள் மட்டுமே முகம் காட்டுவது உங்கள் பாடல்களில் மட்டும் தான்.

உங்களுக்காகப் படைக்கப்பட்ட பாடல்கள் என்னையும் படைத்திருக்கின்றன.

எனக்கு ஒரே ஓர் ஆசை மட்டும். ஆடிக்காற்றில் ஆடும் அகல் விளக்கின் சுடராய் ஆடிக் கொண்டேயிருக்கிறது.

நிகழ்விலிருக்கும் எல்லாக் கதாநாயகர்களும் என் பாடலை உச்சரித்திருக்கிறார்கள். உங்கள் உதடுகளைத் தவிர.

ஒரே ஒரு பாட்டு உங்களுக்கு நான் எழுத ஆசைப்பட்டேன்.

ஆனால், என்னால் எழுத முடிந்தது உங்களுக்கான இரங்கல் பாட்டுதான்.

உங்களுக்கு என்னால் படைக்க முடிந்தவை – உங்கள் இறுதி ஊர்வலமான "காவியத் தலைவனுக்குக் கடைசி வரிகள்" தான்.

உங்கள் ராமாவரம் தோட்டத்திற்கு நான் முதன் முதலாய்ப் போனது உங்கள் அன்புத் துணைவியாருக்கு ஆறுதல் சொல்லத்தான்.

"உங்களைப் பற்றி முதன் முதலில் நான் பேசியது உங்கள் இரங்கல் கூட்டத்தில் தான். அன்று சொன்ன இறுதி வரியே இன்றும் என் இறுதி வரி ;

ஒரே ஒரு சந்திரன் தான் ;

ஒரே ஒரு சூரியன் தான் ;

ஒரே ஒரு எம்.ஜி.ஆர் தான் ;

முனைவர் செ.இராஜேஸ்வரி அவர்களின் நூல்கள்



